பெண்சாதி

முதலிய கதைகள்

பதிப்பாசிரியர் :

தி. நா. சுப்பிரமணியன்

சக்தி

வெளியீடு

கதைக் கடல் 6

பெண்சாதி

முதலிய கதைகள்

பதிப்பாசிரியர்:
தி. நா. சுப்பிரமணியன்

சக்தி காரியாலயம்
ராயப்பேட்டை :: சென்னை—14

பொருளடக்கம்

நவம்பர் 1946

ரூபாய் - ஒன்று
தபால் செலவுடன் ரூ. 1/4
தொடர்ந்து வெளிவரும் 12 பிரதிகளுக்கு
தபால் செலவுடன் ரூ. 12

Printed by Shakti Press Ltd., Royapettah, P.I.C. No. MS. 23
For Shakti Karyalayam, Royapettah, P.I.C. No, MS. 202

கண்

தி. நா. சுப்பிரமணியன்

"அடி, மீனு, மீனு"

கிழவியின் குரல் உரத்துக் கிளம்பி அவளைக் கூப்பிட்டது. அதைக் கேட்டவுடனே அந்தப் பெண் திடுக்கிட்டுப் போனாள். அவளால் மேலே அடி எடுத்து வைத்து நடக்கக் கூடவில்லை. அந்த இடத்திலேயே திகைத்து வேரூன்றி நிலைத்து விட்டாள்.

தான் செய்ய இருந்த காரியத்துக்காக அவள் வருத்தப்படவில்லை. ஆனால் ஒரு கள்ளியைப்போல், தான் கையுங் களவுமாய்ப் பிடிபடுவதை எண்ணியே மனம் கலங்கினாள். அவள் மார்பு படபடத்தது. சந்தடி செய்யாமல் வந்த வழியே திரும்பிவிடலாமா என்றும் எண்ணினாள். ஆனால் அதற்கும் வழி கிடைக்கவில்லை. மறுபடியும் அதே குரல் அவளை அதட்டிக் கூப்பிட்டது.

அந்தக் குரலுக்கு அவள் கட்டாயம் பதில் சொல்லியாக வேண்டும். இல்லாவிட்டால், கிழவி தன்னைத் தேடிக் கிளம்பிவிடுவாள் என்பதை அவள் நிச்சயம் அறிவாள். அப்பால் நடக்கக்கூடியதைப் பற்றி அவள் மனம் சிந்திக்க மறுத்துவிட்டது. தான் கூப்பிட்டதற்கு, "ஏன்" என்று கூடக் கேட்காமல் தன்னை அலக்ஷ்யம் செய்ததாக அந்தக் கிழவி போருக்குக் கிளம்பிவிடுவாள். தன் மாமியார் வாய்க்கு அந்தப் பெண் பெரிதும் பயந்து வந்தாள். ஆகவே அவள், "ஏன், அம்மா, இதோ வந்துவிட்டேன்" என்று கூறிக் கொண்டே சமையல் அறையை நோக்கி விரைந்தாள்.

இதற்குள்ளாக அவள் நாத்தனார், கமலம், அவளைத் தேடிக்கொண்டு அவ்விடம் வந்துவிட்டாள். மீனு கூடத்து

அறைப்பக்கத்திலிருந்து சமையல் கட்டுக்கு வேகமாகச் செல்வதை அவள் பார்த்துவிட்டாள்.

"எனக்குத் தெரியுமே! நீ அங்கே போகப்போகிருயோ என்றுதானே அம்மா உன்னைக் கூப்பிட்டாள்" என்று தன் முகத்தைச் சுளித்தவாறே சொன்னுள் கமலம், தன் மதனியைப் பார்த்து.

உள்ளே இருந்து இதைக் கேட்டுவிட்டாள் கிழவி. அவளுக்கு உடனே விஷயம் எளிதில் விளங்கியது. அவள் நினைத்தபடியேதான் நடந்தது. ஆகவே அவள், "நீ அங்கே போய் அவனைத் தொந்தரவு ஒண்ணும் செய்யாதே என்று எத்தனை தரம் படிச்சுப் படிச்சுச் சொல்றது?" என்று உரக்கக் கூச்சல் போட்டாள்.

மீனுவின் சப்தநாடியும் ஒடுங்கிவிட்டது. அவள் ஒன்றும் பதில் பேசாமல் 'திறுதிறு' வென்று விழித்துக் கொண்டு உடல் குன்றி, உள்ளம் நொந்து சமையல் அறைப்பக்கம் போய்விட்டாள்.

அவளுக்கு வேலையிலே மனசு செல்லவில்லை. ஏதோ வொரு யந்திரம்போலக் காரியங்களைச் செய்துவந்தாள். அவள் நெஞ்சு குமுறியது. அடக்கி வைத்திருந்த ஆத்திரம் முழுதும் வெளிப்பட்டது. ஆயினும் அவள் எப்படி அதை வெளியிட்டுத் தன் மனக்குறையைத் தீர்த்துக்கொள்ள முடியும்? கண்ணீர் ஆருகப் பெருகி அவள் முகத்தையும் மேல் புடைவையையும் நனைத்ததுதான் அவள் அடைந்த பலன்.

அதையும் அவள் பிறர் அறியும்படி விடமுடியாது. மாமியார் நாத்தனுர் பார்த்து விட்டால், "அச்சான்யம் போலச் சதா இது என்ன அழுகை?" என்று வேறு கோபித்துக் கொள்வார்களே!

அவள் சிந்தனை பல வழிகளில் சென்றது. எனினும் கடைசியில் அது அன்றைய நிகழ்ச்சியிலேதான் வந்து நின்றது. தன்னை ஏன் அவர்கள் அவ்விதப் கண்காணித்து வருகிருர்கள், தன்னை அவ்விடம் போகக்கூடாது என்று

தடுக்கிறார்கள் என்னும் விஷயம் அவளுக்குப் புரியவே இல்லை.

புது மணப்பெண்ணாக அவள் அந்த வீட்டில் நுழைந்து மூன்று வருஷ காலத்துக்கு மேலாகிவிட்டது. வந்தது முதல் அவளுக்கு ஒரே கட்டுப்பாடுதான். அவள் தன் பிறந்தகத்தில் எவ்வளவு சுயேச்சையுடன் ஓடி ஆடித் திரிந்தாள்! இப்போது அவள் பெட்டிப் பாம்பாக மாறி விட்டாள். அதைப்பற்றிக்கூட அவள் வருத்தப்படவில்லை. ஆனால், புருஷனும் மனைவியும் தங்களுக்குள் சகஜமாகப் பழகுவதற்கு ஏற்பட்ட தடைதான் அவள் உள்ளத்தைப் பெரிதும் புண்படுத்தியது.

வந்த புதிதில் மீனா இந்தத் தடையைப் பொருட்படுத்த வில்லை. அவளும் நாட்டுப் புறத்திலே பிறந்து வளர்ந்தவள் தான். கணவன் தலையை வாசற் புறத்தில் கண்டவுடனே, உள்ளே ஓடிச் சமையல் அறைக்குள் மறைந்து, கதவு இடுக்கு வழியாக எட்டி எட்டி அவனைப் பார்க்கும் ரகத்தைச் சார்ந்தவளே அவளும். புக்ககம் வந்து கொஞ்ச காலம் வரையிலும் அவள் நடத்தை அப்படியேதான் இருந்தது.

ஆனால் நாள் ஆக ஆக, அவளிடம் மாறுதல் ஏற்பட்டு வந்தது. அவளுக்காகத் தெரியாவிட்டாலும், நகர வாசத்திலே தன்னை யொத்த மற்றப் பெண்கள் எப்படித் தங்கள் கணவருடன் பழகுகிறார்கள் என்பதைப் பார்த்த பிறகுகூடவா அவளிடம் மாறுதல் ஏற்படாது!

ஜகதீசன் நல்ல அறிவாளி; தன் கலாசாலைப் படிப்பின் பெரும் பகுதியை மக்களின் மனத்தத்துவத்தை ஆராய்ந்து அறிவதிலே கழித்தவன். நவ நாகரிகத்தில் மோகம் கொண்ட பலருடன் நெருங்கிப் பழகி யிருக்கிறான். இதன் குண தோஷங்கள் அவனிடத்திலும் பிரதிபலிக்காமல் போகவில்லை.

பெண்களுக்கு உயர்ந்த ஸ்தானத்தைக் கொடுக்க விரும்பியது அவன் உள்ளம். அவன் தன் மனைவியைத் தனக்குக் கிடைத்த ஒரு சகபாடியைப் போலவே

கருதினன். எனினும் சிலரைப்போல் சதா தன் மனைவியுடன் கை கோத்துக்கொண்டு அவன் வெளியில் திரியவும் இல்லை. அப்படிச் செய்தால்தான் அவன் கொள்கை வெளிப்படுமா? சமூகக் கட்டுப்பாடுகளை அவன் ஓர் அளவு ஆராய்ந்து அவற்றின் முக்கியத்துவத்தை நன்றாக அறிந்தவன். அதனால் தன் கொள்கையை நடைமுறையிலே தன் மனைவி உணர்ந்து கொள்ளும்படி செய்யவே விரும்பினன்.

மீனுவும் அதை வெகு சீக்கிரமே அறிந்துகொண்டாள். கடந்த மூன்று வருஷ காலத்தில் அவள் தனித்துத் தன் புருஷனுடன் கொஞ்சிக் குலவிய நாட்கள் மிகவும் சொற்பமே. அந்த நாட்களை அவள் விரல்விட்டு எண்ணிவிட முடியும். ஆம்; அந் நாட்களை மீனு எப்படி மறக்க முடியும்? ஆகவே அவைகளை எண்ணிவிடுவது மிகவும் சுலபம். அவள் அவ்விதம் அவற்றை நினைத்துத் தன் மனத்துக்குள்ளே மகிழ்ந்து வந்ததுதான் அவளுக்குப் பெரிதும் ஆறுதலாய் இருந்தது.

அந்தச் சிறு காலத்துக்குள்ளாகவே அவன் தன் ஆசை முழுவதையும் மீனுவிடம் கொட்டிவிடுவான். அந்த ஆனந்தத்திலே அவள் தன்னை மறந்து—இல்லை, உலகத்தையே மறந்து—தன் புருஷனுடன் ஒன்றிவிடுவாள். அடிக்கடி வெளியிட முடியாமல், தன் உள்ளத்தில் அடக்கி வைத்திருக்கும் அன்பை அவளும் தன் புருஷன் மீது பொழிவாள். மடை போட்டுத் தடுத்த வெள்ளம் மடை திறந்தவுடன் வெகு வேகமாகப் பிரவகித்துச் செல்வது போலவே அவர்கள் அந்தப் பொழுதை அனுபவித்து வந்தார்கள்.

ஆனல் ஒருவரை யொருவர் பார்த்துக் கொள்ளாமல் ஒரு நாள் கூட இருந்தது இல்லை. ஒரே வீட்டில் சேர்ந்து இருக்கும்போது ஒருவர் கண்ணில் மற்றவர் படாமல் எப்படித் தப்பமுடியும்? அந்தச் சமயங்களில், பிறர் தங்களைக் கவனிக்கவில்லை யென்பதை அறிந்துவிட்டால், அவர்கள் அப்படியே அள்ளி விழுங்கிவிடுவார்களோ என்று ஐயுறும்படி ஆசையுடன் பார்த்துக்கொள்ளுவார்கள்.

அந்தப் பார்வையிலே என்ன சக்திதான் இருக்குமோ? ஏதோ நிச்சயம் இருக்கத்தான் வேண்டும். இல்லாவிட்டால், அவர்கள் வாய் திறந்து ஒன்றும் பேசாமல் சமயம் நேர்ந்தபோதெல்லாம் ஒருவரை யொருவர் கண் கொட்டாமல் ஏன் பார்த்து வரவேண்டும்! உண்மையில் அவர்களுடைய கண்கள் வாய்களாகவும் இருந்து—ஏன், பஞ்சேந்திரியங்களாகவும் இருந்து—ஒருவருடைய மனத்தை, உள்ளக் கிடக்கையை, மற்றவருக்கு எடுத்துக் காட்டி வந்தன.

இந்த முகதரிசனமே அவர்களுக்குப் பெரிதும் ஆறுதல் அளித்து வந்தது. ஆனால் அதற்கும் சென்ற ஒரு வார காலமாகத் தடை ஏற்பட்டுவிட்டது. மீனு தன் கணவனைப் பார்த்து ஏழு நாட்கள் ஆகின்றன. அவனை அன்புடன் காணாத ஒவ்வொரு நாளையும் அவள் ஒரு யுகமாகவே கழித்தாள். எப்படியாவது அவனை ஒரு தடவை காண வேண்டுமென்று துடித்தது அவள் உள்ளம்.

அவனும் தன்னைப்போலவே ஏங்கிக் கிடப்பான் என்றே எண்ணினாள் அவள். அதிலே தவறும் இல்லை. ஆகவே அவள் தனக்காக இல்லாவிட்டாலும், தன் புருஷனைத் திருப்தி செய்வதற்காகவாவது ஒரு தரம் அவனைச் சந்திக்க விரும்பினாள். அவள் தன் புருஷனுடன் பேசக்கூட வேண்டாம், ஒரு தடவை நேருக்கு நேர் நின்று ஆசை தீர ஒருவரை ஒருவர் பார்த்துக்கொண்டால் போதும் என்றே நினைத்தாள்.

அதைச் செய்யவும் அவளுக்கு முடியவில்லை. எங்கே ஒருவேளை அவள் உள்ளே நுழைந்து அவன் எதிர்ப்பட்டு விடுவாளோ என்ற கவலையாலே மாமியாரும் நாத்தனாரும் சதா அவளுக்குக் காவல் புரிந்து வந்தனர். இதை அவர்கள் பகிரங்கமாகச் செய்யவில்லை. அப்படிச் செய்திருந்தாலும் மீனு அதைப் பெரிதாக எண்ணியிருக்கமாட்டாள். அவ்விதம் செய்யாமல் அவர்கள் மீனுவுக்குத் தெரியக்கூடாது என்று ஜாடைமாடையாக நடந்து வந்தாலும், நிழல்போல யாராவது ஒருவர் அவளைச் சுற்றியே ஏதோ வேலையாக

இருப்பதுபோல இருந்து வந்தார்கள். இதை அறிந்து கொள்வதற்கு மீனுவுக்கு நீண்ட நேரம் பிடிக்கவில்லை. இதுதான் அவள் மனத்தை வாட்டியது.

பத்து நாட்களுக்கு முந்தி ஒரு நாள் மாலை ஜகதீசன் ஆபீஸிலிருந்து வீடு திரும்பும்போது அவன் முகம் வாடி வதங்கியிருந்தது. தலையை வலிக்கிறதென்று கூறினன். ஏதோ வேலைத் தொந்தரவால் ஏற்பட்டிருக்கும் என்று நினைத்து ஒருவரும் அதைச் சட்டை செய்யவில்லை. ஆனல் அது நிற்கவில்லை. அதைத் தொடர்ந்து மறுநாள் அவனுக்கு ஜுரம் கண்டது. அப்போதும் சாதாரண ஜுரம் என்றே எல்லோரும் இருந்துவிட்டார்கள்.

அதற்குப் பிறகுதான் மீனுவின் கவலை பிறந்தது. ஜகதீசனுக்கு ஜுரம் அதிகமாகிவிட்டது. டாக்டர் வந்து பார்த்துப் போனர். மருந்து வாங்கிக் கொடுத்தார்கள். அவனை யாரும் தொந்தரவு செய்யக்கூடாது என்று டாக்டர் கட்டளை இட்டிருப்பதாகக் கூறி அவனைத் தனியாக ஓர் அறையில் படுக்க வைத்துவிட்டார்கள். தாயும் தமக்கையுமே அவனுக்கு வேண்டிய சுச்ருஷைகள் செய்து வந்தார்கள்.

அன்றைக்கெல்லாம் மீனு அதை லக்ஷ்யம் செய்யவில்லை. தன் கணவனுக்கு எவ்விதமான தொந்தரவும் ஏற்படக்கூடாது என்றுதான் அவள் ஒதுங்கியிருந்தாள். ஆனல் மறுநாள் காலையில் எழுந்தவுடனே அவன் உடம்பு எப்படியிருக்கிறது என்பதைப் பார்க்கலாமென்று அவன் படுத்திருந்த அறைப்பக்கம் போகும்போது, அவள் மாமியார், "அடியே, மீனு! ஜுரமாகப் படுத்துக் கொண்டிருப்பவனிடம் போய் ஒன்றும் தொந்தரவு செய்யாதே. அவன் உடம்பு சொஸ்தமான பிறகு ஆகட்டும்" என்று சொன்னதுதான் அவளைப் பேயறை போலச் சென்று தாக்கியது.

அதைக் கேட்ட மீனு திடுக்கிட்டுப் போனள். அவளுக்கிருந்த மன நிலையில் அந்த எச்சரிக்கையை அவள் விகற்பமாகவும் நினைத்துவிட்டாள்; எரிச்சல் கொண்டாள். 'வெடுக்'கென்று என்னவோ பதில் சொல்ல வாயைத்

திறந்தவள் பிறகு பேசாமல் வாயை மூடிக் கொண்டாள். வீணாக வார்த்தையை வளர்த்துவானேன், அவர்கள் வழி தான் தெரிந்திருக்கிறதே என்று நினைத்துக் கொண்டாள் போலும்.

எனினும் அவள் உள்ளம் குமுறியது. தன் புருஷனது உடல் நிலையைப் பற்றி அவளுக்கு அக்கறை இல்லையா? தனக்கு இல்லாத கவலை மற்றவர்களுக்கு வந்து விட்டதோ என்றே எண்ணினாள் அவள். அன்றி, கணவன் மனைவி என்றால் அவர்கள் சதா காம விகாரம் கொண்டவர் களாகவே இருப்பார்களா? உடல் நலம் இல்லாமல் படுத் திருக்கும் புருஷனுக்கு ஹிதமான சுச்ருஷை செய்யக் கூடியவள் அவன் மனைவியைத் தவிர வேறு யார்? அந்த உரிமையையும் தனக்கு அளிக்க அவர்கள் மறுப்பதைக் கண்டு மீனா மருகினாள்.

ஒன்று, இரண்டு என நாட்கள் ஏறிக் கொண்டே போயின. ஜகதீசன் தலை தூக்கி எழுந்திருக்கவில்லை. படுக்கையிலேயே கிடந்தான். ஜுரம் இன்னும் நிற்க வில்லை என்றுதான் சொன்னார்கள். ஆயினும் அவனைப் பார்க்கப் போவதற்கு மட்டும் மீனாவை அவர்கள் அனு மதிக்கவில்லை.

நாட்கள் ஆக ஆக மீனாவின் சந்தேகமும் வலுத்தது. தன்னை அவர்கள் ஏன் கட்டுப்படுத்தவேண்டும் என்றே ஏங்கினாள். ஒருகால் அவனுக்கு வைசூரி கண்டிருக்குமோ யென்ற எண்ணமும் ஏற்பட்டது அவளுக்கு. அப்படியே இருந்தால்தான் என்ன? அவளுக்கு எதையும் சொல்லா மல் எதற்காக விஷயத்தை மறைக்கவேண்டும்? அவள் என்ன பச்சைக் குழந்தையா, சமய சந்தர்ப்பம் தெரியா மல் நடந்து கொள்வதற்கு? செய்யக்கூடாது என்ற காரியத்தை அவள் செய்து விடுவாளா?

மீனாவுக்கு ஒன்றும் ஓடவில்லை. இந்த ஏக்கத்தையும் சம்சயத்தையும் அவளால் பொறுக்க முடியவில்லை. விஷ யம் என்ன என்பதைக் கட்டாயம் அறிந்துகொண்டு விடு வது என்று அவள் தீர்மானித்துவிட்டாள். அதனாலே

தான் அவள் அன்றைக்குத் தன் புருஷன் படுத்திருந்த அறைப்பக்கம் போனுள். ஆனல் அதற்குள்ளாகவே மாமியார் அதைத் தடுத்துவிட்டாளே!

எனினும் மீனு அதை அப்படியே விட்டுவிடவில்லை. மாமியாரைக் கேட்டுவிட்டாள்: "அம்மா, எதற்காக விஷயத்தை என்னிடமிருந்து ஒளித்து ரகசியமாக வைக்கவேண்டும்? என்னவென்றுதான் சொல்லி விடுங்களேன்."

உண்மையில் மாமியார் இதைக் கேட்டதும் பிரமித்து விட்டாள். தன்னையே இப்படிக் கேட்கும் துணிவு இவளுக்கு ஏற்பட்டதா என்ற அகங்காரம் ஒருபுறம். அவளுடைய கேள்விக்கு என்ன பதிலைச் சொல்வது என்று அறியாத கலக்கம் மறுபுறம். வேறுவழியில்லாமல் மருமகளிடம் உண்மையைச் சொல்ல நேர்ந்தது மாமியாருக்கு.

மீனு பயப்பட்டபடியேதான் ஜகதீசனுக்கு வைசூரி கண்டிருந்தது. நிறை பாரமாகப் போட்டி நொப்பம் கண்டு நன்ருகப் பூரித்திருந்தது. விஷயம் வெளியே தெரிந்து விடக்கூடாது. வெளிப்பட்டால் கார்ப்பொரேஷன்காரர்கள் அவனை அப்புறப்படுத்தி ஆஸ்பத்திரிக்கு எடுத்துச் சென்று விடுவார்களே. அந்தப் பயந்தான் குடும்பத்தார்களுக்கு. தவிர, அந்த நிலையிலே அவனுக்குத் தன் மனைவியின் வாடையே படக்கூடாது! அதனுலேதான் அவர்கள் மீனுவை அந்த அறைப்பக்கம் போகவிடாமல் காவல் புரிந்து வந்தார்கள். கடைசியிலே மாமியார் சொன்னுள்: "இதைப் பார், மீனு. அவனுக்கு உடம்பு நன்ருகக் குணமாகி அவன் எழுந்திருந்து பழையபடி நடமாட இன்னும் இரண்டு மாச காலமாவது பிடிக்கும். அதுவரையில் நீ அவன் எதிர்ப்படவே கூடாது. நீ வீணுகத் 'தொண தொண'ப்பதில் பிரயோஜனம் இல்லை. வேண்டுமானல் நீ அதுவரைக்கும் பிறந்தகம் போய் இருந்துவிட்டுவா" என்ருள் கண்டிப்பாகத் தன் மாட்டுப் பெண்ணைப் பார்த்து.

அதைக் கேட்ட மீனு செயலற்று நின்றுவிட்டாள். அவளா, வைசூரி கண்டிருக்கும் கணவனைவிட்டுப் பிறந்த

கம் போவது? இதற்கு அவள் சம்மதிக்கவே மறுத்து விட்டாள். வைசூரி கண்டிருக்கும் வீட்டிலிருந்து வரும் தன்னைப் பிறந்தகத்தார் ஏற்றுக் கொள்வார்களா, மாட்டார்களா என்பதைப்பற்றி மீனு எண்ணவேயில்லை. அவளுக்கு அந்த யோசனை இருந்தால்தானே அதைப் பற்றிச் சிந்திக்கப் போகிறாள். தன் புருஷன் இருக்கும் இடத்தைவிட்டு அகலக்கூடாது என்று தீர்மானித்து அவ் விடம் நின்றுவிட்டாள்.

நாட்கள் ஓடின. அதற்குப் பிறகு அவள் தன் புருஷன் படுத்திருக்கும் அறைப் பக்கம் எட்டிப் பார்க்கவில்லை. ஆனால் தினத்துக்குப் பத்துத் தடவையாவது அவனது உடல் நிலையைப்பற்றி விசாரித்துக் கொண்டிருப்பாள். அவனுக்கு வேண்டிய ஆகாரவகைகளைத் தன் கையாலேயே தயார்செய்து உள்ளே கொடுத்து அனுப்புவாள். வைசூரி நன்றாக இறங்கித் தலைக்கு ஜலம் விட்டாயிற்று. பொருக்குகள் உதிர்ந்து அவன் உடல் பழையபடி ஆக இரண்டு மாச காலம் ஆயிற்று. அதுவரையில் அவன் அந்த அறையிலேதான் இருந்தான். வெளியில் வந்து நடமாடவில்லை. மீனுவும் அவனுக்கு எதிர்ப்படவில்லை.

ஆனால் எவ்வளவு காலந்தான் இப்படியே கழிக்க முடியும்? கடைசியில் ஒரு நாள் அவர்கள் ஒருவரையொருவர் பார்த்துக் கொள்ளத்தானே வேண்டும்! அந்த நாளையே எதிர்பார்த்திருந்தாள் மீனு.

பாவம்; ஜகதீசனும் அவளைப் பார்க்க முடியவில்லையே என்றுதான் ஏங்கிக் கொண்டிருந்தான். அவனுடைய மன ஏக்கத்தை மீனு அறிந்திருந்தால் அவளுக்கு ஆறுதலாகவாவது இருக்குமே! அவள் தன்னை வந்து பார்த்துப் பேசமாட்டாளா வென்று ஜகதீசன் தினமும் காத்துக் கொண்டிருந்தான். அவள் வருவதாகக் காணோம். ஒரு கால் தன் நிலைமையை அறிந்து தன்னை வெறுக்கத் தலைப் பட்டு விட்டாளோ அவள் என்றும் அவன் மனம் கலங்கியது.

எத்தனை நாள்தான் அவன் பொறுத்துப் பார்ப்பான்? கடைசியில் அவனாகவே வாய் திறந்து தன் தாயாரிடம்,

"அம்மா, அவளைக் கொஞ்சம் இவ்விடம் வந்துவிட்டுப் போகச் சொல்லேன்" என்று சொல்லிவிட்டான். அதற்குமேல் கிழவி என்ன செய்ய முடியும்?

இதுவரையில் அவள் விஷயத்தை மறைத்து வைத்திருந்தாள். இனிமேல் அதை ஒளிக்க முடியாதே. ஆயினும் என்றைக்கு இருந்தாலும் ஒரு நாள் வெளியாக வேண்டியதுதானே என்ற தைரியத்துடன், அவள் தன் மருமகளைக் கூப்பிட்டு, "அடி, மீனு, அவன் உன்னைக் கூப்பிடுகிறான். இனிமேல் நீ அவனைப் பார்க்கலாம், போ" என்று சொல்லிவிட்டு, அங்கே இருக்கமாட்டாமல், சமையல் கட்டுக்குப் போய்விட்டாள்.

படுக்கையறைக்குச் செல்லும் புது மணப் பெண் போல மீனு சந்தடி செய்யாமல் மெதுவாக அவன் அறைக்குள் சென்றாள். அப்படியும் அவள் நடையை ஜகதீசன் உணர்ந்துவிட்டான். அப்போது அவன் படுக்கையிலே படுத்துக்கொண் டிருந்தான். தன் மனைவி வருவதை அறிந்த அவன் மெதுவாக எழுந்து உட்கார்ந்து அவளைத் தன் அருகில் வரும்படி அழைத்தான்.

அவன் தோற்றத்தைக் கண்டவுடனேயே மீனு திடுக்கிட்டாள். சற்றே இரட்டை நாடியோ வென்று சந்தேகிக்கும்படியாக, பள பளவென்று உருண்டு திரண்டிருந்த அவன் உடல் வற்றிக் கறுத்து உருவே மாறிப்போயிருந்தது. தவிர, வடுக்கள் வேறு. ஆனால் அவள் அதை லக்ஷ்யம் செய்யவில்லை. இந்த மட்டிலுமாவது அவன் உயிர் பிழைத்தானே என்ற திருப்திதான் அவளுக்கு. எல்லாம் கொஞ்ச நாள் போனால் உடம்பு பழையபடியே ஆகிவிடும் என்ற நம்பிக்கை அவளுக்கு இருந்தது.

ஆனால் பக்கத்தில் நெருங்கிய தன்னைப் பிடிப்பதற்காக அவன் தன் கையைக் காற்றிலே துழாவியபோதுதான் அவள் பயந்தாள். அவனும், "என்ன, மீனு, என் பக்கத்தில் வரமாட்டேன் என்கிறாய்? இவ்விதம் நேர்ந்துவிட்டதே என்று வருத்தமா? நாம் என்ன செய்யலாம்! எல்லாம் அவர் அவர் தலை விதிப்படிதான் நடக்கும்.

உயிரைக் கொண்டு போகாமல் கண்ணைத் தானே பறித்துக் கொண்டு போனாள்'' என்று அவளுக்கு உபசாரம் சொல்லித் தேற்ற முயற்சித்தான்.

மீனுவுக்கு ஒன்றுமே விளங்கவில்லை; தலை சுழன்றது. திகைத்துப் போய் "என்ன?'' என்று கேட்டுக்கொண்டே அவன் காலடியில் போய் விழுந்தாள். அவள் நடத்தை ஜகதீசனுக்கும் திகைப்பைக் கொடுத்தது. "என்ன? உனக்குத் தெரியாதா? வைசூரியின் காரணமாக இரண்டு கண்ணிலும் பூ விழுந்து பார்வை போய்விட்டது'' என்றான் அவன்.

தன் மண்டையிலே யாரோ சம்மட்டி கொண்டு அடிப்பதுபோல இருந்தது மீனுவுக்கு அந்த வார்த்தை. அவள் எதுவும் பதில் பேசாமல் அவன் காலைப் பிடித்துக் கொண்டே கல்லாய்ச் சமைந்து விட்டாள். கண்களிலிருந்து நீர் ஆறாக வழிந்தது. மனம் அலை பாய்ந்தது; என்னவெல்லாமோ வெண்ணியது.

"ஐயோ, நான் மகாபாவி, அவர் எவ்வளவு ஆசையோடு கண்களை அகல விழித்து என்னைப் பார்ப்பார்? இனி அவர் என்னை இந்த ஜன்மாவிலே எப்போது பார்க்கப் போகிறார். அவருக்குப் பார்வை இருக்கும்போதே ஒரு நாளாவது நான் அவரைத் தரிசிக்காமல் போனேனே!'' என்று தனக்குள்ளேயே அங்கலாய்த்துக் கொண்டாள்.

வெளியே ஏதாவது சொன்னால் அது தன் புருஷன் மனத்தைப் புண்படுத்துமோ என்ற பயம் வேறு.

ஜகதீசன் உள்ளத்திலே மீனுவின் உருவம் என்றும் அழியாமல் நிரந்தரமாக விளங்கிக் கொண்டுதான் இருக்கும். ஆயினும் தான் அவளை நேரிலே தன் புறக்கண்களால் கண்டு அடையும் ஆனந்தம் இனி அவனுக்குக் கிடைக்காதே!

✻

அந்தகன்

"மாயாவி"

அந்தி மங்கும் மாலை நேரத்தில், நாங்கள் இருவரும் கை கோத்துக் கொண்டு மாலைச் செவ்வானை நோக்கி நடந்து கொண்டிருந்தோம்.

எங்கள் பிரயாணம் நிர்ணயமற்றது, முடிவில்லாதது.

எனக்கு அவள் வழிகாட்டி. அவளுக்கு நான் துணைவன்.

உலகம் எங்களைப் புறக்கணித்தது. வீடு எங்களை விரட்டியது. பெற்றவனும் உற்றவனும் எங்களைத் துரத்தி விட்டான்.

நாங்கள் குற்றவாளிகள். எங்கள் குற்றம் எங்களுக்கே தெரியாது. ஆனால் அதற்குரிய தண்டனையை எதிர்கொள்ள நாங்கள் புறப்பட்டு விட்டோம்.

நான் பிறவிக் குருடன். அவள் என் சிற்றன்னை.

அவள் என்னை வளர்த்தாள். அதன் பலன் இன்று அவளை வீட்டைத் துறக்கச் செய்துவிட்டது.

நான் இருட்டில் பிறந்தேன்; இருட்டில் வளர்ந்தேன்; என் முடிவும் இருண்டுபோயிற்று. இரவும் பகலும் ஒன்றாக இருபது வருஷங்களைத் தள்ளினேன். அந்த நீண்ட அந்தகாரத்தின் முடிவுதான் இப்பிரயாணம்.

ஆம், முடிவு! அது ஏன் இவ்வளவு பயங்கரமாக முடிந்தது? உலகின் ஆணும் பெண்ணும், ஜீவன்களும் நிர்ஜீவன்களும், வாழ்வும் தாழ்வும் இந்த இருளின் திருஷ்டியில் சமமாய்ப் போனமையாலா?

என் கரிய வாழ்வின் எல்லைக் கோட்டை அழிக்கப் புறப்பட்டுவிட்டேன். அது தானாக அழியக்கூடியதுதான்.

ஆனல் இன்று அதைப் பாழ்படுத்தி அழிக்க நேர்ந்திருக்கிறது. ஏற்கெனவே பூர்ணகிரகணம். அதில் வேறு களங்கமா? போதும், போதும், வாழ்க்கை இன்பம்.

இந்த அமாவசை இரவைப் பகல் ஆக்க முயன்ருள் பெற்றவள், காவேரி. பதினெட்டு வருஷங்கள் பகல் கனவு கண்டாள். மன இருளைத்தான் போக்க முடிந்தது. ஊன இருள் மறைய மறுத்துவிட்டது.

தனக்குக் கிட்டப்போகும் கனியைப்பற்றி இன்பக் கனவுகள் கண்டிருப்பாள். ஆனல் கனி புழுத்ததோடு அல்லாமல் மரத்தையும் அரித்துவிட்டது. இந்த அதிருஷ்ட ஹீனன் பிறந்த நாள்முதல் அவளை மாளா வயிற்றுநோய் வாட்டியது.

தன் நோயின் துன்பத்தை இந்தக் கபோதியின் முகத்தில் மறைக்க முயன்ருள் அவள். ராப்பகலாய் அகலாதிருந்து மனசில் ஓர் ஒளியைப் பிரகாசிக்கச் செய்தாள். கண்கள் சூன்யமடைந்து விட்டபோதிலும் கபாலத்தைச் சூன்ய மடையாமல் இருக்கச் செய்த பெருமை அவளுடையதே ஆகும்.

ஆனல் அதுவும் இன்று சூன்ய மடைந்து விட்டது! இன்று என்ன, அவள் என்று தன் மங்கிய வாழ்விற்கு முடிவைப் பெற்ருளோ, அன்றே அது சூன்ய மடைந்து விட்டது. இல்லாவிட்டால் வீட்டினுள் அடைத்து கிடந்தும் இந்த அவப் பெயரைத் தேடிக் கொள்வானேன்?

நோவின் துன்பம் எல்லை மீறும்போது, "கடவுளுக்குக் கண் இல்லை" என்பாள் அவள். "அவரை நிந்தியாதே, அம்மா, இவை எல்லாம் விதி" என்பேன் நான். ஆனல் இன்றுதான் 'கடவுளுக்குக் கண் இல்லை' யென்ற உண்மை எனக்குத் தெரிந்தது.

எனக்குத்தான் கண் இல்லை. அந்தக் கடவுளுக்கும் கண்ணில்லை. நாங்கள் குருடர்கள். ஆனல் அப்பா—அவருக்குக் கண்ணிருந்தும்—ஏன் இப்படிக் குருடாய்ப் போனர்?

என் பொருட்டு எத்தனை கஷ்டங்களை அநுபவித்தார்? அம்மா போனபின்பும், சித்தி வரும் முன்பும், எவ்வளவு சங்கடப் பட்டிருக்கிறார்? காலை நாலு மணிக்கு எழுந்திருந்தாரானால், பதினொரு மணிக்கு ஆபீசுக்குப் போகுமளவும் சமையல் வேலையும், என் சுச்ருஷைகளும் முதுகு எலும்பை ஒடித்துவிடும். அப்புறம் அந்தத் தாலுகா ஆபீஸ் குமாஸ்தா உத்தியோகம் இருக்கவே இருக்கிறது. பகல் இரண்டுமணிக்கு மறுபடி, பறக்கப் பறக்க வெயிலில் ஓடிவருவார். நான் பட்டினியா யிருப்பேன் என்ற விசாரம். மறுபடி ஆபீஸ்; இரவு எழுமணிக்கு வருகை; மறுபடி சமையல் வேலை, என் சுச்ருஷை. அட பாவமே, அவர் என்ன மனிதனா ராக்ஷசனா? ஒரு நாளாவது ஓய்வு உண்டா? அந்த ஆபீசிலாவது ஒரு வேளை ஒழிவு உண்டா?

அந்த ஆறு மாசத்துக் கஷ்டத்தின் பிறகுதானே அவர் மனம் மாறிற்று. 'மறுபடி கலியாணம் செய்து கொள்ளமாட்டேன்' என்று எவ்வளவு பிடிவாதந்தான் பிடித்தார்?

"பதினெட்டு வயசான என் சுந்தர பாலகன் கல்யாணத்திற்கு நிற்கையில், எனக்குக் கல்யாணமா?" என்றார். பாவம், அவர் கண்களுக்கு இந்தக் குருடன் சுந்தரனாயிருந்தான் போலும்! அப்பாவுக்கு 'நப்பு ஆசை' இருக்கத்தான் இருந்தது. இந்தக் கபோதிக்கு யாரோ பெண்ணைக் கொண்டுவந்து கொடுக்கப் போவதாகத்தான் அவர் நினைத்து இருந்தார்.

அவருக்கு என்ன அவ்வளவு வயசு ஆயிருந்ததா? அம்மா சாகும் முன், 'அவருக்கு வயசு முப்பத்து எழு தான்' என்று சொல்லுவாள். "உனக்கும் உன் பிள்ளைக்கும் வித்தியாசமே இல்லையடா. அவனை உன் தம்பி என்று தான் யாரும் நினைப்பார்கள். உருவத்திலாகட்டும், பருவத்தி லாகட்டும், இருவரிடமும் வேறுபாடே இல்லை" என்பார் அடுத்த வீட்டு அப்புசாமி.

அப்படியும் கல்யாணத்திற்கு இசைந்தாரா? எவ்வளவு பேர்களைத் தட்டிக் கழித்தார்? பார்க்கிற பெண்

களிடம் எல்லாம் எத்தனை கேள்விகளை அடுக்கினர்? கடைசியில் ராதை என் சித்தியாக வந்தாள்.

ராதை! என்ன இன்பமான பெயர். அம்மாவின் கதையில் வரும் ராதை—அவள் கண்ணனை வளர்த்தாள்—எவ்வளவு பாக்யவதி! அந்த என் மானசீக ராதையையும், சித்தி ராதையையும் என் மனசு தாரதம்மியப்படுத்திக் கொண்டிருந்தது.

அப்பா அவளை மாடிக்கு அழைத்து வந்தார். "இதோ, சந்திரா, உன் அன்னை, ராதை" என்றார். நான் அவளை வணங்க எழுந்தேன். அவள் என்னைத் தடுத்து, "வேண்டாம். இந்த அன்னை உங்களிலும் மூன்று வயசு சிறியவள்" என்றாள்.

அந்தக் குரலில்தான் எவ்வளவு மதுரம்! எவ்வளவு குழைவு! பணிவு! என் மானசீக ராதையின் குரல் போன்றே இருந்தது. அம்மட்டிலும் நான் பாக்யசாலியே. கண்ணனை வளர்த்த அதே ராதை இந்தக் கண்ணற்றவனையும் வளர்க்க வந்துவிட்டாள்!

"வணக்கம் வயசிற்கு இல்லை, அம்மா. ஸ்தானத்திற்குத்தான்" என்றேன் நான்.

"ஆனல் அந்த ஸ்தானதிபதி அதைப் பெறத் தகுதியுடையவளாய் இருக்கவேண்டாமா?" என்றாள் அவள்.

"எந்தத் தாயும் மகனின் வணக்கத்தைப் பெறத் தகுதியற்றவளாய் இருக்கமாட்டாள். மகனுக்குத் தாயை வணங்கிப் பெறும் ஆசீர்வாதங்களைக் காட்டிலும் பெரிய பாக்கியம் ஒன்றுமேயில்லை."

"உன் தாய் வணக்கத்தை எதிர்பாராமலே ஆசீர்வாதம் செய்யும் இயல்புடையவள்."

அவள் தர்க்கவாதி. படிப்பும், உலக ஞானமும் அவளிடம் மிகுந்து இருந்தன. அன்று மாத்திரமல்ல, பின்னல் எந்தச் சமயத்திலுங்கூட அவளைப் பேச்சில் என்னல் வெல்ல முடிந்ததேயில்லை.

அப்பாவின் மனம் களிப்பு அடைந்தது. "என் பெருங் கவலை இன்று நிவர்த்தியாகி விட்டது" என்று கூறிவிட்டு அவர் படி இறங்கிச் சென்றார்.

அவள் பேச்சு என்னைப் பூரிக்கச் செய்தது. அவள் சுச்ருஷைகள் என்னை ரம்மியப் படுத்தின. அவள் பேச்சில் புதுமையைக் கண்டேன். நாட்கள் ஓடியதே தெரியவில்லை. ஒன்றரை வருஷங்கள்—பதினெட்டு மாதங்கள்—என்னையே மறந்திருந்தேன். அப்படித் தன்னை மறந்ததன் பலன்தானோ இந்த விபரீதம்?

முதல் சந்திப்பில் என்னை அறிமுகப் படுத்தியபோது, "இன்று முதல் அவனை உனக்குச் சீமந்த புத்திரனாய் அளிக்கிறேன்" என்றார் அப்பா. நான் அவளுக்குச் சீமந்த புத்திரனாய் மட்டுமல்ல, கண்ணுக்குக் கண்ணாயும் இருந்தேன். அவள் அன்பை முழுக்க முழுக்க நானே கவர்ந்து நின்றேன். அந்த அன்பே இன்றைய விபரீதத்தின் ஆணிவேராய் விட்டது.

அப்பா எங்களிடையே வந்ததே யில்லை. காலையிலும் மாலையிலும் திரும்பத் திரும்ப, "அவள் மற்றொரு காவேரி. வயசில் சிறியவளானாலும் உன் அன்னை. உனக்காகவே, அவள் என் வாழ்க்கையில் இடம் பெற்று இருக்கிறாள். உன் தேவை எதுவும் குறைவு படாமல் இருந்தால் போதும், என் மனோரதம் பூர்த்தி அடைந்துவிடும்" என்பார். இதுவே அவர் பேச்சா யிருந்தது.

பாவம், அவர் எனக்காகத் தம் இல்லற வாழ்வைத் தியாகம் செய்து வந்தார். பதினெட்டு வருஷங்கள் நோயுற்ற மனைவியுடன் காலம் தள்ளினார். அவரிடமிருந்த இன்ப ஆசைகள் எல்லாம் மாண்டு போயின. புது மனைவியை அழைத்து வந்தாரே, அப்புறமாவது இன்பத்தின் முளை எழுந்ததா? இல்லை. அவள் கல்யாணத்தின் பின்பும் கன்னியாகவே இருந்தாள். இந்த ஒளியற்ற இருளப்பனுக்காக நினைக்க முடியாத தியாகம். ஒரு பக்கம் வாலிபத்தின் தாபம். மற்றொரு பக்கம் கன்னியின் தாகம்.

இடையே இந்தக் கருப்பசாமி, கோட்டை கட்டிக் காத்து நின்றேன். அந்தப் பாபச்செயலின் பலன் இன்று கைமேல் கிடைத்துவிட்டது.

மண் அணையின் பலத்திலே கல் அணை எழுப்பிக்கொண்டிருந்தேன். ஆனால் தடைப்பட்டுக் கிடந்த பிரவாகம் இரண்டையுமே பெயர்த்துக்கொண்டு சென்றது. அப்பாவின் ஆசை எதிர்பாராத விதமாய்ப் புத்துயிர் பெற்றது. ராதையின் மோஹனத்தின்முன் அவர் பிரதிக்ஞைகள் தளரத் தொடங்கின. தாபத்தின் சுழலில் அவர் தளைகள் தகர்ந்துபோயின.

இந்த சூக்ஷுமத்தை அறியாமல் நான் மௌடீகன் ஆனேன். என் அறிவு இங்கே இருண்டுபோயிற்று. அல்லும் பகலும் அனவரதமும் அவளையே சுற்றிக்கொண்டிருந்தேன்.

என் இன்பந்தான் எனக்குப் பெரியதாயிருந்தது. அந்த உரிமையை உரியவருக்கு அளிக்க மறந்தேன்.

"சந்திரா!"

சந்திரன்! மொட்டையனுக்கு ஒரு பட்டுக் குஞ்சம்.

இந்த வார்த்தையை நாள்தோறும் ஆயிரம் தடவை அவள் கூறியழைத்தும் எனக்குத் திருப்தி ஏற்படவில்லை.

சித்தி என்னை, 'நீங்கள்—நீங்கள்' என்று ஆரம்பத்தில் அழைத்தாள்.

"உங்கள் பிள்ளையையா கூப்பிடுகிறீர்கள்" என்று கேட்டேன் ஒரு நாள்.

"ஆமாம், என் சீமந்த புத்திரனைத்தான்."

"எந்தத் தாயும் பிள்ளையை இப்படி அழைப்பது இல்லையே!"

"ஆனால் நம்மிடையே வயசின் தாரதம்மியம் இருக்கிறது."

"வயசைக் கணக்கிட்டால் நான் எப்படித் தங்களுக்குப் பிள்ளையாக முடியும்?"

"என் கணவரின் புத்திரன் என் புத்திரன் இல்லையா?"

"அப்படியானால் உங்கள் மகனை அழைப்பதுபோல அழையுங்கள்."

இங்கே நான் அவளை வெற்றி கொண்டு விட்டேன். அந்தப் பூரிப்பு என்னை ஆட்கொண்டது. தலைகால் தெரியாமல் அதன் மீது தாண்டவமாடினேன். அந்தத் தாண்டவம் இன்று என் கால்களைத் துண்டித்து விட்டது.

அப்பாவின் உத்வேகம் பெருகிற்று. ஆனால், அவர் அவளிடம் இரண்டு அன்பு வார்த்தைகள் பேசக்கூட இடம் கொடுத்ததில்லை பாவி, நான். ஆம், இருபது வயதான மகன், குருடனாயிருந்தாலும்—அவன்முன் அவர் எப்படி மனைவியுடன் சல்லாபமா யிருக்க முடியும்?

அவள் மனம் எப்பாடு பட்டதோ? எப்படித்தான் அவள் தன் வேகத்தைத் தாங்கிக் கொண்டாளோ?

என் தடைக்கும் ஓர் எல்லை வந்தது.

அப்பா என் அகக் கண்களைத் திறக்கப் பார்த்தார். அது வலுவாக மூடப்பட் டிருந்தது.

அன்று ஞாயிற்றுக் கிழமை; விடுமுறை நாள். ஆனால் முப்பத்து ஐந்து ரூபாய் வாங்கும் தாலுகா ஆபீஸ்க் குமாஸ்தாக்களுக்கு அல்ல. அப்பா காலை ஆகாரம் முடிந்ததும் ஆபீசுக்குப் புறப்பட்டு விட்டார். மத்தியான்னம் சாப்பாட்டிற்கு வந்து விடுவதாகச் சொல்லிச் சென்றார்.

திரும்பி வரும்போது மூன்றுமணி. நான் அரைத் தூக்கத்தில் ஊஞ்சலில் படுத்திருந்தேன். என் போஜனம் காலம் தவறாமல் முடிந்துவிட்டது. பிறர் வயிற்றைப் பற்றிய கவலை எனக்கு என்? சித்தி அருகில் உட்கார்ந்து எனக்கு வீசி ஆட்டிக் கொண்டிருந்தாள். பசியின் களைப்பு அவள் கைகளின் சோர்வில் காணப்பட்டது.

அப்பா கைகால்களைக் கழுவிக் கொண்டுவந்து, "என்ன சாப்பிட உட்காரலாமா?" என்று கேட்டார்.

"கொஞ்சம் இருங்கள், சந்திரன் அரைத் தூக்கத்தில் இருக்கிறான். அவனைத் தூங்கச் செய்துவிட்டு வந்து விடுகிறேன்."

அவர் பசியைவிட என் தூக்கம் அவளுக்குப் பெரிதாயிருந்தது. அவள்மீது தப்பில்லை. அப்பாதான் அவளை இந் நிலைக்குக்கொண்டு வந்திருந்தார். ஆரம்பத்தில், என் சில்லறைச் சுச்ருஷைகளைவிட்டு, அவர் அவசியத்திற்கு ஓடிவந்தபொழுது எத்தனைமுறை அவளைக் கடிந்துகொண்டிருக்கிறார்.

"என் தேவைக்கு எனக்கு அவயவங்கள் இருக்கின்றன. நீ அவன் சுச்ருஷைகளை என் பொருட்டு ஒரு போதும் புறக்கணிக்கக் கூடாது" என்று எத்தனை முறை கோபம் பொங்க உரைத்திருக்கிறார்.

ஆனால் இப்போது?......

நான் என்ன கைக் குழந்தையா? சிறிது வீசுவது நின்று விட்டால் இந்த ராஜாவின் தூக்கம் கெட்டு விடுமாம். கெட்டு விட்டால்தான் என்ன? அவள், தன் பசியையும், கணவன் பசியையும் கூடக் கவனியாமல், எனக்குப் பணிவிடை செய்ய, நான் என்ன அவர்களுக்குப் பிரமாதமாகச் சாதித்துக்கொண் டிருந்தேன்?

எனக்குத்தான் புத்தி எங்கே போயிருந்தது? அவர் பசியால் குரல் கம்ம அன்னமிட அழைப்பது இந்தத் தடியன் காதில் விழுந்தும், அவளைப்போய் அன்னமிடும்படி சொல்லத் துணிவு வராத அகங்காரம் என்ன?

"எனக்குப் பசி பிராணன் போகிறது." அவர் ஸ்தாயி உணர்ச்சி யின்றி இருந்தது. ஆம், குடலைத் தின்றுகொண்டிருந்த வேதனையின் எதிரொலி அல்லவா!

இதனால் என் தூக்கத்திற்குத்தான் பங்கம் வந்தது.

சிறிது நேரம் சித்தியிட மிருந்து பதில் இல்லை. அவள் என் ஆக்ஞையை எதிர்பார்த்துக்கொண் டிருந்திருக்க வேண்டும்.

"அப்படியானால் போட்டுக் கொண்டுதான் சாப்பிடுங்களேன்."

அப்பாவுக்குக் கோபம் வந்துவிட்டது.

"நானும் ஒரு ஜீவன்தான். எனக்கும் பசி தாகம், ஊண் உறக்கம், எல்லா அவஸ்தைகளும் உண்டு. சற்று எழுந்துவா. அப்புறம் வீசிக்கொள்ளலாம்."

நான் கண்களை இறுக்கி மூடிக்கொண் டிருந்தேன். எனக்கு எவ்வகையிலும் சம்பந்த மில்லாத சம்பாஷணை நடந்துகொண் டிருப்பதாகத்தான் என் சிந்தனை.

சித்தி எழுந்து போனாள்.

நான் கவலையற்றுத் தூங்கிப் போனேன்.

எல்லோரையும் வளர்ப்பதுபோல, அப்பா என்னையும் வளர்த்திருந்தால் எனக்குப் பிறர் கஷ்டங்கள் தெரிந்திருக்கும். ஏழையானாலும் தம் குருட்டு மகனை அவர் ராஜாவாக்கி வைத்ததே அன்று என்னிடமிருந்த இறுமாப்புக்கு அடிப்படை.

சாயங்காலம் சித்தி என்னிடம், "உன் அப்பாவுக்கு இன்று பசிக்கோபம்" என்றாள்.

"ஆமாம்" என்றேன் நான் சாதாரணமாக.

"நீ தூங்கி விட்டாய், என்னை வெகுவாகக் கோபித்துக் கொண்டார். அவருக்குக் கோபம் வந்து நான் இது வரைப் பார்த்ததே இல்லை."

"அவர் கோபப்படுவ தென்றால் புதுமைதான்."

"அம்மம்மா, சாப்பிட்டு முடியும்வரை என்னென்ன வெல்லாம் பேசிவிட்டார். பெரிய பிரசங்கம்."

"ரொம்பக் கடிந்து கொண்டாரோ?"

"நான் அவரைக் கவனிப்பதே இல்லையாம். ஒன்று சொல்லி விட்டால் அதையே பிடித்துக்கொண்டு ஆடுகிறேனாம். அவர் வாழ்வு இப்படியே போய்க்கொண் டிருந்தால், உணர்ச்சியற்ற மரக்கட்டை ஆகிவிட வேண்டியது தானாம்."

அப்பாவின் உள்ளக் கொதிப்பின் ஆவி அவ் வார்த்தைகள். அது இன்று எனக்குத் தெரிகிறது. இன்று நிறுக்கும் அதே தராசில் அன்று அவ் வார்த்தைகளை நிறுத்து

இருந்தேனானால், மூன்றே ஆத்மாக்கள் கொண்ட எங்கள் சிறு குடும்பத்தில் பிளவு ஏற்பட்டிருக்காது.

நான் மடையன். என் மூளையைச் சுற்றி யிருந்த களிமண் கரைய இவ்வளவு விபரீதமும் வேண்டி யிருந்தது.

சித்தி விழித்துக்கொண்டு, தன் இன்பத்தை மூடி யிருந்த போர்வையை விலக்க எத்தனித்தாள்.

ஆனால், இந்த மட பூபதி அப்போதும் அவர்கள் இன் பத்திற்குத் தடையாய் நின்றேன். உணர்வற்ற பைத்தியம் போல அவளைச் சுற்றி இடைவிடாமல் வட்ட மிட்டேன்.

அப்பா இப்போது ஆபீசிலிருந்து சீக்கிரமே திரும்பி விடுவார். எந்தச் சக்தி, அவரை அப்படி ஆபீஸ் வேலையை யும் போட்டு விட்டு, வீட்டுக்கு ஓடிவரச் செய்கிறது என் பதை எண்ணிப் பார்த்தேன் இல்லை.

"ஏன், அப்பா, இப்போது எல்லாம் சீக்கிரம் வந்து விடுகிறீர்களே?" இதுதான் இம்முட்டாளின் ஆச்சரியக் குறியோடு கூடிய தினசரி கேள்வி.

முதலில் அப்பா பதில் சொல்லத் தயங்கினார்.

பிறகு, "ஆபீஸில் இப்பொழுது வேலைக் குறைவு" என்றார்.

அப்புறம் மனம் வெம்பியவராய், "உனக்கு நான் சீக்கிரம் வந்துவிடுவது திருப்தியாக இல்லையா?" என்றார்.

கடைசியில் கோபமுற்றவராய்த் தம் உள்ளத்தையே திறந்து காட்டினார். "அப்பனே, நானும் ஒரு குடும்பஸ் தன்தான். ஆபீஸில் நான்கு சுவர்களுக்குள்ளே அடை பட்டுக் கிடந்தால் மட்டும் என் வாழ்வு நிறைந்து விடாது" என்றார்.

நான் தெரிந்து கொண்டேனா?

தெரிந்துகொண் டிருந்தால் இந்த விபரீதமெல்லாம் ஏன்?

சித்தி என்ன செய்வாள் பாவம்! என் இடைவிடாக் குரலுக்கு ஓடிவருவாளா? கணவனின் ஊடலைத் தணிப் பாளா?

பெண்களுக்கே நாணம் அதிகம். அவளால் என்னை மறைத்து அப்பாவின் இச்சைகளுக்கு உட்பட முடிய வில்லை.

இங்கேதான் விபரீதம் பிறந்தது.

அப்பாவின் புத்தி புரண்டதும் இங்கேதான்.

சித்தியின் புறக்கணிப்பு அவருக்குச் சிந்தேகத்தைக் கிளப்பியது!

'ஆம், நான் முதியவன். இருபது வருஷங்கள், அவனிலும் என்னை உயரமாக்கி வைத்திருக்கின்றன. பகல் முழுவதும் ஆபீஸே கதி என்று கிடக்கிறேன். பிற நேரங்களிலும் அவளைப் புறக்கணித்து மாதக் கணக்காய் இருந்தேன். அவன் இளைஞன். கண் இல்லாவிட்டாலும் குரூபி அல்ல. மேலும் அவர்கள் இருவரும் அல்லும் பகலும் ஒன்றாயிருக்கிறார்கள்; தனித்திருக்கிறார்கள். எந்தப் புற்றில் எந்தப் பாம்பு இருக்குமோ, யார் கண்டார்கள்?'

இதுதான் அப்பாவின் சிந்தனையின் சிதல்களாய் இருந்திருக்க வேண்டும்!

சீ! மனிதனுக்குத்தான் எவ்வளவு அற்பமான எண்ணங்கள்! தாய்க்கும் மகனுக்கும் தந்தையே முடிச்சுப் போடுவதென்றால்?

ஒருகால் சித்தி, தாபம் தாங்காமல் என்னைச் சிக்க வைத்திருப்பாள் என்ற எண்ணமோ?

எப்படியானால் என்ன? முடிச்சு இறுகி வந்தது!

எ மூளையே! இன்று விஷயங்களை இவ்வளவு அலசி வெளிப்படுத்தும் உன் ஒளி அன்று ஏன் மறைந்து போயிற்று? உன்னை மறைத்து நின்ற திரையைக் கிழித்துக்கொண்டு என்னை ஏன் இத் துன்பத்தினின்றும் விடுவித்திருக்கக் கூடாது?

அப்பாவின் கண்கள் எப்போதும் எங்கள்மீதே இருந்தன. அதை உணராமல் நாங்கள் களங்கமற்ற பழைய பாதையில் போய்க்கொண்டிருந்தோம்.

அப்பா தம் சோதனைகளைப் பிரயோகிக்கத் தலைப் பட்டார்.

அன்று மத்தியானம் சித்தி, "உன் அப்பா வர வரச் சிறுபிள்ளை யாகிக்கொண்டு வருகிறார்" என்றாள்.

"அப்படியானால் அவரைக் கிழவராக மதித்திருந்தீர்களா?"

"இல்லை! என்றும் இல்லாதபடி இன்று அவருக்குச் சினிமா பார்க்க ஆசை பிறந்திருக்கிறது."

"பார்க்கக்கூடாதா என்ன? சினிமா பார்க்கும் எல்லோரும் குழந்தைகள் அல்லவே."

"அதுவல்ல. நானும் வரவேண்டுமாம்."

"நீங்கள் ஏன் போகக்கூடாது?"

"நீ தனியாய் இருப்பாயா?"

"அதனால் என்ன, சித்தி? அப்பாவே இதில் எல்லாம் நாட்டம் இல்லாதவர். அவர் விரும்பிக் கூப்பிடும்போது நீங்கள் போகாமல் இருக்கக்கூடாது."

"எனக்குச் சினிமா பார்க்கும் ஆசையே இல்லை. 'ஆபாசங்களை ஒருங்கே திரட்டிக் காட்டும் காட்சிக்குத் தான் சினிமா என்று பெயர்' என்று என் அகராதி கூறுகிறது."

"எனக்கு என்ன தெரியும், சித்தி? இருந்தாலும் அப்பாவுக்காகவாவது போய்விட்டு வாருங்களேன்."

சித்தி அப்பாவுடன் அன்றிரவு சினிமாவுக்குப் போனாள்.

அடேயப்பா! அந்த நான்கு மணி நேரமும் எனக்கு எவ்வளவு நரகமா யிருந்தது. ஆம்! தூங்கும்பொழுது தவிர இதர நேரங்களில் அவளை அருகில் கைகட்டி நிற்க வைத்து ருசிகண்ட பழக்கம், என்னை அவ்வளவு கஷ்டப் படுத்தி விட்டது.

மறுநாள்!

அன்றுதான் அந்த விபரீத நாள்.

அதை நாங்கள் அறியும் வண்ணம் முன் அறிகுறிகள் எதுவும் நிகழவில்லை. வழக்கம்போலவே சித்தி என் காலைச் சுச்ருஷைக்காக ஐந்து மணிக்கே ஓடிவந்தாள். பிறகு அடுக்களையில் புகுந்தாள். அப்பாவும் சாப்பிட்டு, டிபனுடன் ஆபீசுக்குச் சென்றார்.

நான் போஜனத்தை முடித்துக்கொண்டு 'ரேழி' ஊஞ்சலில் சாய்ந்தேன்.

சித்தி சாப்பிட்டானதும், தாழ்வாரத்தில் மாவு அரைத்துக்கொண் டிருந்தாள்.

"கண்ணு, கண்ணு!"

நான் தூங்கவில்லை. "யாரை கூப்பிடுகிறீர்கள், சித்தி?" என்றேன்.

"உன்னைத்தான்."

"இதென்ன புதுப் பெயர்?"

நான் மெல்லத் தாழ்வாரத்திற்கு வந்தேன்.

"இதோ, இப்படி இங்கே உட்கார்."

"ஏன் அப்படி அழைத்தீர்கள், சித்தி?"

"ஆமாம், உன்னை நான் அப்படித்தான் கூப்பிடப் போகிறேன்."

"ஏன்?"

"உன் பழைய பெயர் எனக்குப் பிடிக்கவில்லை."

"இது என்ன, சித்தி?"

"ஆம், பிரஷ்டனுக்கும் 'சந்திரன்' என்று பெயர் இருக்கிறது. அந்தப் பெயர் உனக்கு இனி வேண்டவே வேண்டாம்."

"அது யார், அந்தப் பிரஷ்டன்?"

அடுக்களையில் 'தடதட' வென்று பாத்திரங்கள் உருளும் சப்தம் கேட்டது. "அம்மா! இந்த வீட்டில் பூனையின் தொந்தரவு பொறுக்கவே முடிகிறதில்லை" என்று சொல்லிக் கொண்டு சித்தி அடுக்களையை நோக்கி ஓடினாள்.

"சீ, வெட்டு, போகலையா."

"என்ன அது, சித்தி?"

"நாய். வாசல் கதவு திறந்து இருந்ததில்லையோ, உள்ளே வந்துவிட்டது."

அந்தத் தாழ்வாரம் வாசலை மறைத்துக் கொண்டிருந்த தால் நாய் உள்ளே வந்ததைச் சித்தி பார்க்கவில்லை.

அவள் வாசல் கதவை அடைத்துவிட்டு வந்தாள்.

"யார் அந்தப் பிரஷ்டன், சித்தி?"

"அதை ஏன் கேட்கிறாய்? கேலிக்கூத்து. உன் அப்பா, போயும் போயும் நல்ல சினிமாவாகப் பார்த்து அழைத்துப் போனார்!"

"ஏன், படம் நன்றாக இல்லையோ?"

"ஆனாலும் வேண்டுமென்றே கேவலமான கதைகளை நம் புராணங்களில் புகுத்திக் கொலை செய்திருக்கிறார்கள்."

"அது என்ன கதை?"

"சீ, சீ, வெட்கக்கேடு. பெண்கள் பார்க்கக்கூடிய படமா, அது?"

"அவ்வளவு ஆபாசமானதா?"

"ஆமாம். நீ கேட்டதில்லையா? ஒரு ரிஷி. அவருக்கு ஒரு பத்தினி. பத்தினியா? பதிதை. அவள் பெயர் தாரை."

"என்ன, என்ன?"

"தாரை அவள் பெயர்."

"நல்ல வேளை!"

"என்ன?"

"இல்லை. பெயர் தலைகீழா இருப்பது போல், குணங் களும் மாறி இருந்திருக்கின்றன."

சித்தி தெரிந்துகொண்டாள். "கண்ணா, உன் புத்தியே புத்தி" என்று மெச்சினாள்.

நான் புளகாங்கிதனாய், "அப்புறம்" என்றேன்.

"அந்த ரிஷியிடம் ஒரு பிள்ளை குருகுலவாசம் செய்ய வந்தான்."

"பாவம்."

"பாவமாவது, புண்ணியமாவது. அந்த ரிஷியோ சதா மூக்கைப் பிடித்துக் கொண்டு உட்கார்ந்து விடுவார். போதாததற்கு அவருக்குத் தேவ சபையிலிருந்து அடிக்கடி அழைப்பு வந்துவிடும். போனாரானால் திரும்பிவர மாசக் கணக்காகும்."

"அப்பாவையும் அப்பாவினுடைய ஆபீசையும் போல."

"போதுமடா, கண்ணா, உன் உவமை."

சித்தி மாவு அரைத்து முடித்துவிட்டாள். அதை உள்ளே வைத்து மூடிவிட்டு வந்தாள்.

நான் கதையின் போக்கைப்பற்றிச் சிந்தித்துக் கொண்டு அசைவற்றுக் கிடந்தேன்.

"என்ன, கண்ணா, தூங்கிவிட்டாயா?"

"இல்லையே."

"ரேழிக்கு வா, கதையைச் சொல்கிறேன்."

"வேண்டாம், இங்கேயே சொல்லுங்கள்."

"சரி, கேள்."

சித்தி என் அருகில் உட்கார்ந்தாள். நான் அவள் மடியில் தலையைச் சாய்த்துக் கொண்டேன்.

"அப்புறம்?"

"அந்தப் பிரஷ்டைக்குச் சிஷ்யப் பிள்ளைமீது நாட்டம் விழுந்து விட்டது."

"அந்தச் சின்னப் பையனிடமா?"

"அவன் சிறுவன் அல்ல, வாலிபன். ஆனாலும் அவளுக்கு அவன் தாயின் வயசு இருக்கும்."

"கேட்கச் சகிக்கவில்லையே!"

"அந்த ரிஷி ஒருதடவை தேவலோகத்திற்குப் போயிருந்தபோது அந்தச் சிறுவனைத் தன் வலையில் சிக்க வைத்துவிட்டாள்."

"ஓ ஓ........."

"அந்தப் பையனிடம்......"

"அவன் பெயர் என்ன?"

"அவன் பெயர்தான் சந்திரன்."

மறுபடியும் அடுக்களையில் ஏதோ சப்தம் கேட்டது.

"என்ன இழவு! பூனையா?" சித்தி எழுந்துபோனள்.

"ஒன்றையும் காணவில்லையே."

"உங்களுக்கு மனப்பிராந்தி."

சித்தி என்னை மறுபடியும் தன் மடியில் படுக்க வைத்துக் கொண்டாள்.

"'சந்திரா! என் காதல் உள்ளத்தை நீ அறிவாயா? எத்தனைமுறை உன்னை அணைப்பினும் அதன் ஜ்வாலை அணைந்ததில்லையே. நல்ல வேளையாக அவர் இப்பொழுது திரும்பி வரமாட்டார். நேரத்தை வீணுக்காதே, வா' என்று......"

அவள் முடிக்கவில்லை. அதற்குள் பிரளயம் வந்து விட்டது. அவள் கடைசி வார்த்தையை விழுங்கிவிட்டு, அது ஆக்ரோஷத்துடன் வந்து குதித்தது.

"சண்டாளி! துரோகி!! நீலி!!! கையும் களவுமாக பிடிபட்டாயா?"

ஆம். அப்பா எங்கள் எதிரில் நின்றார்.

நாங்கள் நிலைமையை உணரச் சிறிது நேரம் ஆயிற்று.

நான் இன்னும் சித்தியின் மடிமீதுதான் படுத்திருந்தேன்.

சித்தி பதறியவளாய், "உங்களுக்கு என்ன வந்து விட்டது?" என்று கேட்டாள்.

அப்பாவின் கோபக் கனல் கனிந்து ஜ்வாலைவிட்டுக் கொண்டிருந்தது அவர் பெருமூச்சிலிருந்து தெரிந்தது.

"என்ன வந்துவிட்டதா? வருவதற்கு இன்னும் என்ன மீதி வைத்திருக்கிறாய்?"

அவர் காலால் சித்தியை எட்டி உதைத்தார். அவள் நிலை தவறிக் கீழே சாய்ந்தாள். என் மண்டை தரையில் மோதியது.

அந்த அதிர்ச்சி என் சிரசிற்கு ஒளியைத் தந்தது. எனக்கு உடனே எல்லாம் விளங்கிவிட்டது.

"அப்பா!"

"சீ, பிரஷ்டா, வாயைத் திறவாதே. என்முன் நில்லாமல் ஓடிவிடு. இல்லாவிட்டால் தகப்பன் பிள்ளையைக் கொல்லும் பாதகத்திற்கு இடம் வைப்பாய்."

அவர் பேசவா செய்தார்? இல்லை, நெருப்புக் கங்குகளை என்மீது வாரி இறைத்தார்.

சித்தியின் விம்மல்—இந்தத் துர்ப்பாக்கியன் அவளுக்குக் கொடுத்த சீதனம்—என் உள்ளத்தில் ஈட்டியைப் பாய்ச்சியது.

"அப்பா, ஒரே ஒரு நிமிஷம். என் வார்த்தைக்குச் செவி சாய்ப்பீர்களா?"

"உங்கள் பசப்புதலுக்கு இனி மசிய மாட்டேன். கையும் களவுமாகப் பிடிபட்ட திருடனின் வார்த்தைகளை விட, நான் கண்ணால் கண்டது பொய்யாக இருக்க முடியாது. ஈச்வரா! என்னையும் ஏன் குருடனாய்ப் படைத்திருக்கக் கூடாது? இந்தக் காதுகளுக்குத்தான் ஏன் கேட்கும் சக்தியைக் கொடுத்தாய்! தாய் மகனுடன் சோரம் செய்வதைப் பார்க்கவும், அவர்கள் காதல் மொழிகளைக் கேட்கவுமா? அடி வேசி, எவ்வளவு துணிவு! பட்டப் பகலில் மகனை மடியில் சாய்த்துச் சோர வார்த்தைகள் பேசும் ஆணவம் உனக்கு எங்கிருந்து வந்தது? இதற்

காகவா பார்த்துத் தேடிச் சலித்து எடுத்து உன்னை இளையாளாய்க் கொண்டேன்!''

அப்பா நாங்கள் பேசுவதற்கு இடம் அளித்தால் தானே!

"என்ன சிங்காரம், எவ்வளவு காதல்? ஐயோ, பாவம்! அவனைத் தினமும் பல தடவை அணைத்தும் அவள் காதல் தீரவில்லையாம். எப்படிப்பட்ட வேளையில், சிவ பூசையில் கரடியாக, நான் வந்து சேர்ந்தேன்.''

சித்தியால் பொறுத்திருக்கவே முடியவில்லை. அவர் காலடியில் அவள் தடாலென்று விழும் சப்தம் கேட்டது.

"நிறுத்துங்கள்!''

அவள் குரல், அவரது இடைவிடாப் பிரசங்கத்தை அடித்துக் கொண்டு எதிரொலித்தது.

"உங்கள் மனம்போனபடி பேச இடம் தரமாட்டேன். ஈனச் சொல்லுக்கும், இழிவிற்கும் ஓர் எல்லை உண்டு.''

அப்பா வாய் அடைத்து நின்றார். சித்தி, அந்த வீர வனிதை, தன் உள்ள மடையைத் திறந்து கொட்டினாள்.

"என்னை எதற்காகக் கல்யாணம் செய்துகொண்டீர்கள்?''

அப்பா மௌனமாயிருந்தார்.

"உங்களுக்கு மனைவியாகவா அல்லது உங்கள் மகனுக்கு மனைவியாகவா? பதினெட்டு வயசில், நாற்பது வயசுடைய உங்களுக்கு இளையாளாய் வாழ்க்கைப்பட்ட எனக்கு என்ன சுகத்தை அளித்தீர்கள்? ஆசையுடன் இரண்டு வார்த்தைகள் பேச எனக்கு அவகாசம் கொடுத்தீர்களா? உங்களை நான் நெருங்கும் ஒவ்வொரு சமயமும், உங்கள் மகனது சுச்ருஷைக்கு ஏவினீர்கள். அவன் வாலிபன், நான் யுவதி என்பதையும் மறந்து, சதா என்னை அவனுடன் இருக்கும்படி கட்டாயப்படுத்தினீர்கள். நான் தாயுள்ளத்துடன் உங்கள் கட்டளைகளை நிறை

வேற்றினேன். இன்று எனக்கு விபசாரிப் பட்டத்தை யும், அந்தப் பாலகனுக்குத் துரோகிப் பட்டத்தையும், சூட்டுவதற்காகத்தான் இந்தச் சூழ்ச்சிகள் எல்லாம் செய்தீர்களோ? ஐயோ, தெய்வமே, இதுதானு என் வாழ்வை வதைத்து இவர்களுக்கு உழைத்ததன் பலன்?''

சித்தி கதறி அழுதாள்.

அப்பா உணர்ந்தாரா?

அவர் கோபம் தணிந்ததா?

இல்லை!

மாருக அவர் மனம் இன்னும் இருண்டது.

''அடி, நீலி. என்ன ஜாலம்? செய்வதையும் செய்து விட்டு அதை மறைக்க என்மீதே பழியையுமா போடு கிருய்'' என்று.........!

ஐயோ கொடுமையே!

நான் வெகுண்டேன். ஓடிச்சென்று அவர் கைகளைத் தடவிப் பிடித்துக்கொண்டு, ''அடியுங்கள். நன்ருகக் கொல்லுங்கள். ஆனுல் அந்த உத்தமியை அல்ல. என்னை —இந்தப் பாவியை'' என்றேன்.

அவர் கால்களைப் பிடித்துக்கொண்டு, பின்வருமாறு கதறினேன்.

''இவைகளால் என்னை மிதியுங்கள். இந்தத் துர்ப் பாக்கியனது உயிர் உடலை விட்டுப் பிரியுமட்டும் மிதியுங் கள். எத்தனை கொடும்பாவி நான். குருடனுய்த்தான் பிறந் தேன், பாதகனுயும் இருக்கவேண்டுமா? எனக்கு உதவிய வர்களுக்கு எல்லாம் கொடுமையைத்தானு கொடுக்க வேண்டும்? அம்மா—அவளுக்குப் பெற்றது முதல் வயிற்று நோயைக் கொடுத்து உயிரையும் உறிஞ்சினேன். இப் பொழுது சித்தி—இவளுக்கு இந்த அநியாயப் பட்டமா?

''அப்பா, இந்தக் குருடனைப் பாருங்கள். இருபது வருஷங்களாய் உங்கள் கையால் அன்னமிட்டு வளர்த்த மகனிடமா உங்களுக்குச் சந்தேகம்? உங்களை மணந்த

பின்னும், உங்கள் ஆக்ஞைக்காகக் கன்னியா யிருக்கத் துணிந்த தியாக மனைவியிடமா உங்களுக்குச் சந்தேகம்?

"அப்பா இது அநியாயம். உலகிற்கு ஒவ்வாத பழி. அப்படித்தான் உங்களுக்குச் சந்தேகம் ஏற்படும் வண்ணம் இன்று என்ன நிகழ்ந்து விட்டது? தாயின் மடியில் தலை வைத்து உறங்கும் உரிமை எனக்கு இல்லையா? அல்லது இன்றுதான் புதுமையாக அவள் மடியில் தலையைச் சாய்த்தேனா?

"நீங்கள் வந்த சமயம் அவள் சொல்லிக்கொண்டிருந்த வார்த்தைகள் உங்களுக்குச் சந்தேகத்தைக் கிளப்பினவா? அப்படியானால் அது விதியின் கூத்துத்தான்! நேற்றுப் பார்த்த சினிமாவின் காட்சியை அவள் எனக்கு விவரித்துக் கொண்டிருந்தாள். ஏற்றாற்போல் பெயர்களும் அங்கே சந்தர்ப்பங்களுக்குப் பொருந்தி யிருந்தன.

"ஒரு குற்றமும் அறியாத எங்களை நிர்த்தாக்ஷண்யமாக வதைக்காதீர்கள். மனசை நிதானப்படுத்திச் சந்தர்ப்பங்கள் எப்படி ஒன்று கூடின என்பதைச் சிந்தனை செய்து பாருங்கள்."

அப்பாவின் இருண்ட மனம் இன்னும் கறுக்கத்தான் செய்தது.

"எவ்வளவு சாமர்த்தியமான சிருஷ்டி. சினிமாவாம், காட்சியாம். ஆமாம். சினிமாவின் காட்சிதான்! தினசரி என் தலை மறைவில் நடக்கும் உங்கள் சினிமாவின் காட்சி. அப்பனே! இந்தக் கட்டைக்கு இன்னும் பைத்தியம் பிடித்து விடவில்லை. ஆறு மாசத்திய சோதனைகளின் பின் ஊர்ஜிதம் செய்யப்பட்ட முடிவு மாறிவிடாது.

"மகனே, உனக்கு உலகம் தெரியாது, அந்த ஜாலக்காரியின் வலையில் எளிதில் சிக்கிக் கொண்டாய். அவள் வாஞ்சையையும், ஆசையையும் தாய்க்கு மகனிடம் ஏற்பட்டதாகவே எண்ணி ஏமாந்திருந்தேன். அதன் பின் மறைந்து நின்ற கபடத்தை அறிய எனக்கே வெகு நாட்கள் ஆயின.

"கடைசிச் சோதனையாக நேற்றுச் சினிமாவுக்கு அழைத்துச் சென்றேன். அங்கேயும் என் முடிவு ஊர்ஜிதம் செய்யப்பட்டது. அந்த ரிஷி பத்தினி சிஷ்யப் பிள்ளையை ஏமாற்றித் தனக்குப் பயன்படுத்திக் கொண்ட போது, 'சீ! பெண்ணுடலே சூதென்னும் மண்ணால் ஆக்கப்பட்டதா? ஒரு தபசியின் மனைவியே இவ்வளவு ஈன நடத்தையுள்ளவளா யிருந்தால்......?' என்றேன்.

"'ஆமாம், மனைவியரைப் புறக்கணிக்கும் கணவர்களுக்குச் சரியான படிப்பினை' என்ருள் இந்த மாய்மாலக்காரி. இதோ அந்தப் படிப்பினையைக்கண் முன்னாலும் நடத்திக் காட்டிவிட்டாள்."

சித்தி முகத்தை மூடிக்கொண்டு அழுதுகொண்டிருந்தாள். இதைக் கேட்டதும், அவள் அவர் கால்களைப் பிடித்துக்கொண்டு, "என்னை மன்னித்துவிடுங்கள். கடவுள்மீது ஆணையாக வேறு எவ்வித எண்ணத்துடனும் நான் அவ்வார்த்தைகளைச் சொல்லவில்லை. நீங்கள் என்னை அளவுக்கு மீறிப் புறக்கணிக்கிறீர்கள் என்பதை எடுத்துக்காட்டவே அவ்வாறு கூறினேன். ஐயோ, அவைகளா இன்றும் என் வாழ்வைப் புண்ணாக்கிவிட்டன" என்று கதறினுள்.

அப்பா அவளை உதறித் தள்ளினுர்.

இனி என் முறை! எனக்கும் அதுவேதான்.

"இனியும் மறைப்பதில் பலன் இல்லை, மகனே! இருபது வருஷங்களாக உன்னை என் உயிரினும் இனிதாக வளர்த்ததற்கு மார்பிலே பாய்ந்துவிட்டாய். உண்மையையாவது ஒப்புக்கொண்டுவிடு."

"உங்களுக்கு உண்மை வேண்டுமா? என் வார்த்தைகளை நம்புவீர்களா?"

"நம்புகிறேன்."

"அப்படியானல் நாங்கள் குற்றமற்றவர்கள்."

"என் 'நாங்கள்' என்கிருய்? நீ குற்றமற்றவனுய் இருக்கலாம். ஏனென்ருல், உன் இச் செய்கைக்கு ஒரு கால் அவளே காரணமாய் இருக்கலாம்."

"இல்லை. இது பெரும்பழி. அதற்கும் நீங்களே ஜவாப்தாரி. அவள் உத்தமி, பதிவிரதை, தியாகி."

என்னை மறந்தவனுய் நான் இவ்வாறு கத்தினேன்.

அவர் கோபச் சிரிப்புச் சிரித்துக்கொண்டு, "இது போன்ற பதிவிரதைகளுக்கு என் வீடு இனி இடம் அளிக்காது" என்ருர்.

"அப்பா இது உங்களுக்குத் தகாது. உங்கள் சொல்லுக்காகத் தன் இன்பங்களைப் புறக்கணிப்பதே கடமை என்று கருதிய ஒரு தேவதையை, நீங்கள் இதுபோன்ற பழியைச் சுமத்தித் தண்டிப்பது கடவுள் பொறுக்காத செயலாகும்."

"தேவதை! தேவதை!!"

இதைக் கூறி அப்பா, 'இடி இடி' என்று சிரித்தார்.

ஐயோ, அவருக்கென்ன, பைத்தியம் பிடித்துவிட்டதா? சித்தியை அடிக்கும் கைகளை அப்புறம் தள்ளினேன்.

"ஜாக்கிரதை! அவள் உங்களுக்கு மனைவிதான். ஆனல் எனக்குத் தாய்! என் எதிரில் அவள்மீது கை வைக்க யாரையும் விடமாட்டேன்."

"அடே, துரோகி."

"துரோகிதான். உங்களுக்கல்ல. இந்த அருந்ததிக்கு."

"கண்ணு, அவரைத் தடுக்காதே. அவர் என்னை அடிக்கட்டும், மிதிக்கட்டும், கொல்லட்டும். ஆனல் நாம் நிரபராதி என்பதை அவர் உணர்ந்தால் போதும்."

"சித்தி, இனியும் அவருக்கு உணர்த்திக் காட்ட நம்மிடம் ஒன்றும் இல்லை. அந்தக் கடவுள்தான் நமக்குச்

சாட்சி. ஆனால் அவரும் இப்பொழுது என்னைப்போல் குருடாய்விட்டார்.''

"துரோகி, கடவுளை ஏன் நிந்திக்கிறாய்? உன் துரோகச் செயலைக் காட்டிக் கொடுத்துவிட்டதற்காகவா? அவரா குருடர்? இல்லை, நீதான் குருடன், கபோதி, அந்தகன். முந்திய ஜன்மத்தின் பாபத்திற்கு அது உனக்குத் தண்டனை. ஆனால் இன்றைப் பாதகத்திற்கு? அவராலே நிர்ணயிக்க முடியாது அதற்கு உரிய தண்டனையை.''

"ஐயோ, உங்களுக்கு எப்படித்தான் நாங்கள் நிரூபிப்பது?''

"நிரூபிக்க முடியாதுதான். உண்மைக்குப் புறம்பான காரியத்தை எப்படி உண்மையென்று நிரூபிக்க முடியும்?''

"அப்படியானால் உங்கள் முடிவுதான் என்ன?''

"உனக்கு இங்கு இனி இடமில்லை.''

"அது முடியாத காரியம். அவளை அவ்வளவு எளிதில் நீங்கள் புறக்கணித்துவிட முடியாது. அந்தத் தண்டனையை நான் ஏற்றுக்கொண்டு இதோ போகிறேன் வெளியே.''

"கண்ணா, எங்கே போகிறாய்?''

சித்தி என்னைத் தடுத்தாள்.

"கண்ணற்ற நீ எங்கே போவாய்? எனக்குக் கொடுத்த தண்டனையை நானே அநுபவிக்கிறேன். நீ எங்கும் போகாதே.''

"சித்தி, இனி ஒரு நிமிஷமும் இந்தச் சந்தேகப் பிராணியின் கீழ் என்னால் வாழமுடியாது. இருபது வருஷங்கள் அவருக்குப் பாரமாய் இருந்தது போதும். இனியாவது அவருக்கு ஒழிவு கிடைக்கட்டும்.''

நான் புறப்பட்டேன்.

"எனக்கு என்ன சொல்கிறீர்கள்?''

"உனக்குத் தனியாக வேறு தண்டனை எதுவும் இல்லை. உங்கள் இருவருக்குமே கடவுள் பிரத்தியேக தண்டனை கொடுப்பார். போங்கள், போங்கள். தாயும் பிள்ளையும், கணவனும் மனைவியுமாக."

சித்தியும் நடந்தாள்.

கணவனைப் புறக்கணித்து வெளியேறியதற்காகவும், தகப்பனை ஒதுக்கி வந்ததற்காகவும், கடவுள் கொடுக்கும் தண்டனையை ஏற்றுக்கொள்ளச் சித்தமாய் நாங்கள் வெளியேறினோம்.

போகிற போக்கில் அவருக்கு எங்கள் கடைசி நமஸ்காரங்கள்.

அந்தி மங்கும் நேரத்தில், தாயும் மகனும் கை கோத்துக் கொண்டு மாலைச் செவ்வானை நோக்கி நடந்தோம்.

விழுந்தவன் சிரிப்பது—

பழைய கதை

[கதைகள் சொல்லுவதும் எழுதுவதும் மிகப் பழைய காலத்தி லிருந்தே உண்டு. இது நம் நாட்டில் மட்டுமல்லாமல் உலக முழுதுமே பரவியிருக்கக் காண்கிறோம். இவ்விதம் வழங்கிவரும் பழைய கதைகளைத் திரட்டி அந்த அந்தத் தேசத்தவர்கள் வெளியிட்டு வருகிறார்கள்.

வாய்மொழியாக வருபவற்றைத் தவிர, எழுத்து உருவத்திலே வந்துள்ள பழைய கதைகள் தமிழிலே அதிகமாகக் கிடைக்கவில்லை. அவை இல்லாமலும் இல்லை: ஆனால் எளிதிலே கிட்டவில்லை. 1839-ஆம் ஆண்டிலே, இன்றைக்கு நூற்றேழு வருஷங்களுக்கு முன்னர், சென்னையில் ஒரு திரட்டு வெளியிடப் பட்டது. தமிழ்கற்க விரும்பும் வெள்ளைக்கார அதிகாரிகளுக்கு உபயோகமாக வேண்டி அச்சிடப்பட்ட அந் நூலில், நாடோடியாக வழங்கிவந்த எண்பத்தாறு கதைகளைத் திரட்டி 'நானுக் கதைகள்' என்ற பெயருடன் வெளியிட்டார்கள். இன்னும், நாலு மந்திரிக் கதை, வேதாளக் கதை ஆகிய இரண்டும் வேறு விஷயங்களும் இருக்கின்றன.

அந் நூலை வெளியிட்டவர் ஆண்டிரூ ராபர்ட்சன் (ஆன்றியூ ரோபர்ட்சன்) என்பார். உள்ளே படித்துப் பார்த்தால் பாஷையும் பாதிரிமார் பேசும் தமிழாகத்தான் இருக்கிறது. முன்னுரையிலே சென்னைக் காலேஜில் முன்ஷியாக இருந்த, திரு. வேங்கடாசல முதலியார் அந் நூல் வெளிவந்ததற்கு மிகவும் உதவி புரிந்ததாக நன்றியுரை கூறப்பட்டுள்ளது.

'நானுக் கதைகளில்' வரும் 85-ஆவது கதைதான் இது. சந்தி பிரித்துக் கொடுப்பதைத் தவிர வேறு

ஒரு திருத்தமும் செய்யவில்லை. அதே நடைதான். வாக்கியங்கள் நீளமாக அமைத்திருந்தாலும் நடையிலே தெளிவு காணப்படுகிறது.]

ஒரு உத்தியோகஸ்தன் தன்னுடைய அவசர நிமித்தம் ஒரு தூர தேசத்துக்குப் போகவேண்டி, தன்னிடத்தில் இருந்த பதினாயிரம் பொன்னையும் நாணயம் உள்ள ஆரிடத்திலாவது வைத்துப்போக வேணுமென்று ஆலோசித்து, அவன் இருந்த ஊராரிடத்தில் அவனுக்கு நம்பிக்கை போதாமையால், அவ்விடத்திற்கு அடுத்தாற்போல் இருந்த ஒரு பட்டணத்திற்குப் போய், அங்கே ஒரு நாணயமுள்ள வர்த்தகனைக் கண்டு பிடிக்கவேணுமென்று அப்பட்டணத்தின் கடைவீதியில் வந்து, அவ் வர்த்தகர்களுடைய நிதானம் அறியும்படி அங்கேயே நாலஞ்சு நாள் போக்குவரத்தாய் உலாவிக் கொண்டிருந்தான். அப்போது அவ்வூரில் இருந்த ஒரு தாசியினுடைய ஒரு வேலைக்காரி, அவ்விடத்தில் ஒரு மளிகைக் கடையில் விற்பனை செய்துகொண்டிருந்த ஒரு சிற்ருளிடத்தில் ஒரு பணத்தைக் கொடுத்து, அதற்கு நெய் வாங்கிக்கொண்டு கொஞ்சதூரம் போய்க் கொண் டிருந்தாள். அப்போது அம்மளிகைக் கடைக்கு எசமாஞகிய வர்த்தகன், எப்படியோ உத்தியோகஸ்தனுடைய குறிப்பை அறிந்து கொண்டவன், அவனுக்குத் தன்னிலைமையை வெளியிடும்படிக்கு அக்கடையின் சிற்ருளை விட்டு அப் பெண்ணை மறுபடியும் தன்னண்டை அழைத்து வரச் சொல்லி, அவளுக்கு எதிரில் அவ்வாளை நோக்கி, அவ் வுத்தியோகஸ்தனுக்குக் கேட்கும்படியாக உரக்க, “அடா ஆளே, இந்தப் பெண் உன் கையில் என்ன கொடுத்தாள்? அதற்கு நீ எவ்வளவு நெய் அவளுக்குக் கொடுத்தாய்?” என்ருன். அவன், “இவள் என் கையில் ஒரு பணம் கொடுத்தாள். அதற்கு அஞ்சு பலம் நெய் நிறுத்துக் கொடுத்தேன்” என்ருன். அவ் வெசமான், “நாம் பணம் ஒன்றுக்கு ஆறரைப் பலம் விழுக்காடு நெய் கொண்டிருக்க, நமக்குப் பணத்துக்கு அரைப் பலம் லாபம் கிடைத்தாற் போதாதா? புறத்தையார் உடைமைக்கு நாம் பேராசைப் படலாமா? பணத்துக்கு ஆறு பலம் விழுக்காடு அவளுக்கு இன்னும் ஒரு பலம் கொடுத்து அனுப்பு”

என்றான்; அவன் அந்தப்படியே செய்து அவளை அனுப்பி விட்டான். அதைக் கண்ட அவ்வுத்தியோகஸ்தன், 'இந்த வர்த்தகன் நாணயம் உள்ளவன், இவனிடத்தில் நம்முடைய பொருள்களை வைத்துப் போகலாம்' என்று நிதானித்துக்கொண் டிருக்கிறான்.

அதுக்குள்ளே அவ்வேலைக்காரி அந் நெய்யைத் தன் எசமானியாகிய வேசியண்டை கொண்டு போனவுடனே, அவள், "நீ கடைக்குப்போய் இந்நேரம் என்ன செய்தாய்?" என்று அவளைத் தெண்டிக்க வந்தபோது, அவள் கடைக்குப் போனவிடத்தில் நடந்த வர்த்தமானத்தை எல்லாம் அவளுக்குச் சொல்லி: "நம்முடைய வீட்டுக்குப் பாதி தூரம் வந்து விட்ட நான் மறுபடியும் கடைக்குப் போகா விட்டால் முன்னமே இங்கே வந்திருப்பேன்" என்றாள். அதன் பேரில் வேசி, "அக் கடையண்டை அப்போது யார் வந்திருந்தது?" என்று அவளைக் கேட்க; அவள், "யாரோ ஒரு உத்தியோகஸ்தன் அங்கே உலாவிக்கொண் டிருந்தான்" என்றாள். அதைக் கேட்ட அத் தாசி, "இன்று காலமே நாம் ஒரு பணத்துக்கு அஞ்சு பலம் விழுக்காடு அவனிடத்தில் நெய் வாங்கி யிருக்க, அந்தக் கடைக்காரனே ஒரு பணத்துக்கு ஆறு பலம் இப்போது கொடுத்து அனுப்பினது முறைமையல்ல. அவனுடைய சொத்து நமக்கு அக்கறையில்லை. நீ இப்போதே இந் நெய்யை அவனிடத்தில் கொண்டுபோய், இன்று காலமே அவன் கொடுத்தாற்போல் ஒரு பணத்துக்கு அஞ்சு பலம் நெய்யே அவனிடத்தில் வாங்கிக்கொள். அந்த வியன் இருக்கிற ஒரு பல நெய்யையும் அவன் கையிலேயே கொடுத்துவிடு. இல்லாவிட்டால் அந் நெய் முழுதையும் அவனையே எடுத்துக் கொள்ளவிட்டு, அவன் கையில் நீ கொடுத்த ஒரு பணத்தையும் மறுபடியும் நீ வாங்கிக்கொண்டு அசல் ஒரு கடையில் அந்த அஞ்சு பலம் நெய்யே வாங்கி வா" என்றாள். அவள் அப்படியே அக் கடைக்கு எசமானிடத்திற் போய்த் தன் எசமானி சொன்னபடிச் சொல்ல, அவனும் அவ்வியன் ஒரு பலத்தையும் திருப்பி வாங்கிக் கொண்டான். இந்த வார்த்தையையும் அங்கே உலாவிக்கொண் டிருந்த அவ் வுத்தியோகஸ்தன் கேள்விப்பட்டு, 'இந்த

வர்த்தகன் நிலைமைக்காகிலும் அந்தத் தாசியது நம்பத் தக்கதாய் இருக்கிறது' என்று எண்ணிக்கொண்டு, அந்த வேலைக்காரி பின்னாலேயே அவன் தொடர்ந்து போய்த் தாசி இருந்த வீதியில் உலாவிக்கொண் டிருந்தான்.

அப்படிச் செய்துகொண் டிருந்த அவனை அவ் வேலைக் காரி கண்டு, தன் எசமானியண்டை போய், "அம்மா, இந்த வீதியில் உலாவுகிற இவர்தாம் அந்தக் கடைவீதியில் உலாவினர்" என்று அவனை அவளுக்குச் சுட்டிக் காட்டினாள். அவள் அவனுக்குத் தன் நாணயத்தைத் தெரிவிக்கும் விதத்தைக் குறித்து யோசித்துக்கொண் டிருந்த சமயத்தில், ஒரு பக்கிரி அவள் வீட்டில் அன்னப் பிச்சை கேட்க வந்தான். அதை அத் தாசி அறிந்து ஒரு முறத்தின் நிறைய அரிசியும், அதற்குத் தக்க காய் கறிகளும், சம்பார வகைகளும் தன் வேலைக்காரி கையில் அவனுக்கென்று கொடுத்து அனுப்பினாள். அவள் அதுகளை அவனிடத்தில் கொண்டு போய், "எங்கள் எசமானி உனக்குக் கொடுக்கச் சொன்னாள்" என்று அவனோடே சொல்லி, அதுகளை அவனுக்கு கொடுக்கப் போனபோது, அவன் கூர்மையாளியாகையால், 'இது வரையும் நான் தினந்தோறும் இவ் வீட்டில் அன்னப் பிச்சைக்கு வந்துகொண் டிருந்தோம். ஒரு நாளாவது பிடிசாதம் நமக்கு இவள் போடச் சொன்னவள் அல்ல. இன்றைக்கு ஒரு ரூபாய் பெறுமான சாமக்கிரி நமக்கு இந்தத் தாசி கொடுக்க வேண்டிய வயனம் என்ன? இவள் ஏதோ ஒரு மோசடியை நினைத்து இப்படிச் செய்த தாக வேணும்' என்று தனக்குள்ளே யோசித்துக்கொண்டு, அந்த வேலைக்காரியை அவன் பார்த்து, "எனக்கு அரிசி ஏன்? காய் கறிகள் ஏன்? சம்பார வர்க்கங்கள் ஏன்? இதுகளைக் கொண்டுபோய் வைக்க என்னிடத்தில் பாத்திரம் இல்லை. இதைக்கொண்டு சமையல் பண்ணவும் எனக்குத் தெரியாது. ஆராவது கொஞ்சம் சோறு எனக்குப் போட்டால் அதைத் தின்று போட்டு, அத்தோடே திருப்தியா யிருக்கிற எனக்கு, இவ்வளவு ஊராருடைய உடைமை வேண்டியதில்லை" யென்று சொல்லி அதுகளை அவளிடத்திற்கே திருப்பி விட்டான்.

அதை யெல்லாம் அவ் வுத்தியோகஸ்தன் அறிந்தமையால், 'மற்றவர்கள் எல்லாரிலும் அவ் வர்த்தகன் நிலை உள்ளவனாகக் காணப்பட்டான்; அவனிலும் இத் தாசி அதிக நிலையுள்ளவளாகக் காணப்பட்டாள்; இவளிலும் இப் பக்கிரி மிகவும் நிலையுள்ளவனாகக் காணுகிறான்' என்று தனக்குள்ளே யோசித்து நிதானித்துக் கொண்டான்; ஆகையால் அவன் இருப்பிடம் தேடி அவனைக் கண்டு பிடித்து, அவனுக்கு வணங்கி, "அய்யா, நான் ஒரு தூர தேசம் போய்த் திரும்பவேண்டி யிருக்கிறபடியால், என்னிடத்தில் இருக்கிற பதினாயிரம் பொன்னையும் ஒரு நிலைமையுள்ளவரிடத்தில் வைத்துப் போகவேண்டி, இப் பட்டணத்தில் உள்ளவர்களுடைய நிலைமையைச் சோதித்துப் பார்க்கையில், உம்மைவிட நிலைமையுள்ளவர் ஆரையும் காணேன். ஆதலால், உம் அடைக்கலமாக அதனை வைத்துப்போக எண்ணினேன்; அப்படியே நீர் தயவு செய்து அதனை நான் திரும்புமட்டும் உம்மிடத்தில் வைத்துக்கொள்ள வேணும்" என்று அவனை மிகவும் பிரார்த்தித்தான். அவ் வார்த்தையைக் கேட்ட அவன், "அய்யா, நானொ வொரு பக்கிரி. அதிலும் ஏகாங்கி. நான் பிச்சை எடுத்து என் காலத்தைப் போக்குகிறேன். என்னிடத்தில் உம்முடைய பொருளை வைத்தால் அதை நான் காப்பாற்றி உமக்கு மறுபடியும் கொடுக்க என்னிடத்தில் பெட்டியா, பேழையா, கட்டா, காவலா? என் கையில் யாராவது சோறு கொடுத்தால் அதை என் வாயில் போட்டுக்கொண்டு சொஸ்தமாயிருக்கிற என்னிடத்தில் பணத்தைக் காண்பியாதேயும். நான் அதைக் கண்ணாலே பார்க்கிறதேயில்லை; அதை என்னிடத்தில் வைக்கவேணும் என்கிற நம்பிக்கை உமக்குப் பிறந்திருந்தால், என்னுடைய தைக்காவில் எங்கேயாவது உமக்கு இஷ்டமான ஓர் இடத்தில் புதைத்துப் போட்டுப் போய்த் திரும்பி வந்து அதைத் தோண்டி எடுத்துக் கொள்ளும்" என்றான். அவ் வுத்தியோகஸ்தன் அதை எல்லாம் மெய்யென்று நம்பி, அப் பக்கிரித் தைக்காவில் ஒரு மூலையில் புதைத்துப் போட்டு, அவனுடனேயும் அதைச் சொல்லிப்போட்டு அவனிடத்தில் விடைபெற்றுக்கொண்டு தான் குறித்திருந்த தூரதேசத்துக்குப் பயணப்பட்டுப் போய் விட்டான். உடனே அப் பக்கிரி அப் புதையலைத் திருட்

டளவாய் எடுத்து மற்றெரு ரகசியமான இடத்தில் புதைத்து வைத்துக் கொண்டான்.

அவ் வுத்தியோகஸ்தன் தான் குறித்த ஊருக்குப் போய்த் தன் காரியங்களை முடித்துக் கொண்டு திரும்பி அப் பக்கிரி யிடத்துக்கு வந்து, அவனுக்கு வணக்கம் செய்து முன் தான் வைத்துப்போன அடைக்கலப் பொருளைக் குறித்து அவனைக் கேட்டேன். அவன், "அய்யா, நீர் அதை எங்கே வைத்தீரோ அங்கே தோண்டி அதை எடுத்துக்கொண்டு போம்'' என்று சொல்ல; அவன் அப்படியே அதைத் தான் புதைத்த இடத்தில் தோண்டிப் பார்க்க, அதை அவ்விடத்தில் காணமல் திரும்பி அப் பக்கிரி யிடத்தில் வந்து அதைக் குறித்து அவனைக் கேட்க; அவன், "அதை என் கையிலே கொடுத்தீரா? நீர் அதை வைத்த விடம் ஒருவேளை உமக்கு மாருடி யிருக்கும்; குறிப்பாய் அந்த இடத்தைத் தேடிக் கண்டுபிடித்து அதைத் தோண்டி யெடுத்துக்கொண்டு போம்" என்ன; அவ் வுத்தியோகஸ்தன் அனேகந் தரம் அப்படியே செய்தும் அதைக் காணமையால் அதைக் குறித்து அவனை மீளவும் மீளவும் கேட்டான்.

கடைசியில் அப் பக்கிரி, "அதற்கு நான் என்ன செய்வேன்? அதைப்பற்றி இனிமேல் என்னைக் கேளாதேயும்'' என்று நிர்தாக்ஷிண்ணியமாய் அவனுக்குச் சொல்லி விட்டான். அவ் வார்த்தைக்கு அவ் வுத்தியோகஸ்தன், 'நாம் மோசம்போனேமே' என்கிற விசனத்தோடேயும், மனஸ்தாபத்தோடேயும் அந்தத் தாசியிடத்துக்குப் போவோம் என்று போய் அவள் வீட்டுக்கு எதிரிலேயே வீதியில் நிற்கையில் அவள் வீட்டுமேல் சொன்ன வேலைக்காரி இவனைக் கண்டு, இவன் வரவைக் குறித்துத் தன் எசமானிக்கு அறிக்கையிட்டாள். அவள் அவனைத் தன் ஆளைக்கொண்டு தன் வீட்டுக்குள்ளே அழைப்பித்து, "நீர் என் வீட்டிலே சிவ் வென்று நுழையாமல் இத் தெருவில் நிற்க வேண்டிய காரணம் என்ன?'' வென்ன; அவன் முன் நடந்த பூர்வோத்தரங்கள் எல்லாம் அவளுக்கு அறிவித்தான். உடனே அவள் அதைக் குறித்துச் சற்று நேரம் யோசித்து, "நீர்

இழந்துபோன அப் பொருளை உமக்கு நான் வாங்கித் தந் தால் நீர் எனக்கு என்ன வெகுமானம் பண்ணுவீர்?'' என்று அவனைக் கேட்க; அவன் ஆயிரம் பொன்னென்ன; அதற்கு அவள் சம்மதித்து அவனிடத்தில் தகுந்தபடி உடம்படிக்கை பெற்றுக்கொண்டு, "நாளையதினம் இந் நேர வேளைக்கு அப் பக்கிரி யிடத்துக்குப் போவேன். நீர் இன்னம் இரண்டு நாழிகை பொறுத்து அவனிடத்திற்கு வந்து நீர் அவனிடத்தில் வைத்த அடைக்கலப் பொருளைக் குறித்து அவனைக் கேளும்'' என்று சொல்லிக்கொடுத்து அவனை அனுப்பிவிட்டாள். மறுநாள் நியமித்த வேளைக்கு அத் தாசி தன்னுடைய நேர்ந்த ரத்தினுபரணங்களை எல்லாம் கழற்றி ஒரு வெள்ளித் தாம்பாளத்தில் வைத்து, அதன் பேரில் ஒரு பட்டுக் கவிசனை விரித்து, அதைத் தன் னுடைய வேலைக்காரி தலையில் எடுப்பித்துக்கொண்டு, அப் பக்கிரி தைக்காவுக்குச் சமீபத்தில் போய், அங்கே நின்று அந்த ஆபரணத் தட்டைத் தான் வாங்கிக்கொண்டு, "அடி, வேலைக்காரி, நான் உள்ளே போவேன். நீ இங்கே தானே நின்றுகொண்டு என்னைப் பார்த்தவாக்கே இரு; நான் அவனுடன் சிலநேரம் பேசிக்கொண் டிருந்து அப் பால் உன்னைத் திரும்பிப் பார்ப்பேன்; அப்போது நீ இரைப்பு எடுக்கத் தடதட வென்று என் அண்டை ஓடி வந்து, வெகு சந்தோஷத்தோடே, 'நம் அய்யா அவர்கள் புனு தேசத்திலிருந்து அனேக வாகனுதிகளுடனேயும் வெகுமதிகளுடனேயும் வெகு பரிசனங்களுடனேயும் நம்ம வீட்டுக்கு வந்து இறங்கி விட்டார்கள். உங்களை அழைத்து வரச் சொன்னுர்கள்' என்று என்னோடே அப் பக்கிரி கேட்கச் சொல்லு'' என்று அவளுக்குக் கற் பித்து, தான் ஒண்டியாய் அப்பக்கிரி யிடத்திற்கு உள்ளே போனுள்.

அங்கே போன அவள், அவனுக்குக் குனிந்து சலாஞ் செய்தாள். அவன் உத்தரவின் பேரில் ஆபரணத் தாம்பா ளத்தைத் தன் முன்னே வைத்துக்கொண்டு தானும் அங்கே உட்கார்ந்தாள்; "அய்யாவே, நான் தங்களிடத் தில் ஒரு மனுப் பண்ணிக்கொள்ளத் தங்கள் சன்னிதானத் துக்கு வந்தேன். தாங்கள் கிருபை செய்து என் விண்ணப்

பத்தைக் கேட்டு என் இஷ்டத்தை நிறைவேற்றவேணும்'' என்று அவனை மிகவும் கேட்டுக்கொண்டாள். அதற்கு அந்தப் பக்கிரி, "ஓ அம்மாள், நீ யார், இந்த வேதாந்தியான என்னால் உனக்காக வேண்டியது என்ன?'' வென்ன; அவள், "என் நாயகரானவர் புனா தேசத்துக்குப் போய் நாலஞ்சு வருஷகாலம் ஆயிற்று. அவரிடத்திலிருந்து அவருடைய க்ஷேம சேதியைக் குறித்து அடிக்கடி முன்னே ஓலைகள் எனக்கு வந்துகொண் டிருந்ததுகள். இப்போது ஆறுமாசமாய் ஒரு சேதியும் எனக்கு வரவில்லை. அதனால் அவர் சரீரத்துக்கு என்ன தொந்தரை நேரிட்டிருக்கிறதோ வென்று எனக்கு இவ்விடத்தில் மனம் தரிக்கவில்லை. ஆதலால் புனா தேசமட்டும் நான் போய் அவரைக் கண்டு சில வருஷங்களுக்கு அங்கு இருந்துவர மனசாயிருக்கிறேன்; என்னிடத்தில் நேர்ந்த ரத்தினாபரணங்கள் வெகுசா யிருக்கிறதுகள். அதுகளை எல்லாம் இப் பட்டணத்தில் ஆர் அடைக்கலமாயாவது வைத்துப் போவோ மென்றால், உங்களைவிட வேறு ஒருவரிடத்திலும் எனக்கு நம்பிக்கை போராது. உம்முடைய திவ்விய குணாதிசயங்களை நான் நாள்தோறும் கேட்டிருக்கின்றதால் அதுகளை உங்கள் அடைக்கலமாக வைத்துப்போக எண்ணி யிருக்கிறேன். தாங்கள் கிருபைசெய்து அதுகளைத் தங்கள் வசம் பண்ணிக்கொண்டு, நான் புனா தேசம் போய்த் திரும்பிவரும் அளவும் தாங்கள் அதுகளைக் காப்பாற்றித் திரும்ப எனக்குக் கொடுக்க வேணும்'' என்று அவனுக்கு அநேகந் தரம் சலாஞ் செய்து மிகவும் பிரார்த்தித்துக் கொண்ட பின்பு; "அந் நகைகள் இந் நகைகள்தாம்'' என்று அதுகளை மூடியிருந்த கவிசனை வாங்கிப்போட்டாள். அந்தப் பக்கிரி அதுகளைப் பார்த்த மாத்திரத்தில் மனம் பூரித்துப்போய்; 'இதுஏதோ நமக்கு பிராப்திக்கு இடம் உண்டாயிருக்கிறது' என்று தன்னிலே ஆலோசித்துக்கொண் டிருந்த தறுவாயில், அவ் வுத்தியோகஸ்தன் அப் பக்கிரிக்கு எதிரில் வந்து அவனுக்குச் சலாம் செய்து நின்றான். அவனைப் பார்த்து அப் பக்கிரி, "நீ யார்?'' என்று கேட்க; அதற்கு அவன், "ஐயா, நான் ஒரு வருஷத்திற்கு முன்னே தங்கள் அடைக்கலமாகச் சில திரவியம் வைத்துப்போன ஒரு உத்தியோகஸ்தன்; நான் அதை வாங்கிக்கொண்டு

போம் பொருட்டு இப்போது தங்களண்டை வந்தேன்'' என்ன; அப் பக்கிரி அவனைத் தனக்குப் பின்னும் கிட்ட வரச்சொல்லி, அவன் முகத்தை நன்ருய் உற்றுப் பார்த்து, "ஓ, ஓ, மெய்தான், அதோ உன் பணங்களைச் சிந்தாதே சிதருதே, அந்த மூலையிலே புதைத்து வைத்திருக்கிருேம். நீ எடுத்துக் கொள்ளு, போ'' என்று அவனுக்கு அது புதைத்திருந்த இடத்தைத் தன் கையாலே சுட்டிக் காட்டினன். அந்த உத்தியோகஸ்தன் சந்தோஷமாய் அவ்விடத்திற்குப் போய்த் தன் பொருளை எடுத்துவரப் போனன்.

அப்போது அப் பக்கிரி அத் தாசிக்குச் சொன்னன், "நாம் மெத்தவும் ஏழைப் பக்கிரியா யிருக்கிருேம். இந்த ஊர்ச் சனங்களிலே அநேகம் பேர் அடிக்கடித் தங்கள் பொருள்களை நம்மிடத்திலே கொண்டு வந்து வைத்து, அதுகளைக் காப்பாற்றிக் கொடுக்கச் சொல்லி, நம்மைத் தொந்தரை பண்ணுகிருர்கள். அதுகளை நாம் அப்படியே செய்ய, பிற்பாடு சிலகாலம் பொறுத்து அதுகளை எடுத்துக்கொண்டு போகிருர்கள்'' என்று. இப்படிக்கு அவன் சொல்லிக் கொண்டிருக்கையிலே அவ் வுத்தியோகஸ்தன் மறுபடியும் பக்கிரியிடத்திற்கு வந்து, அவனுக்கு வெகு சலாங்கள் பண்ணி, மிகுந்த வணக்கத்தோடே, "ஐயா, தாங்கள் சுட்டிக் காட்டிய இடத்தில் என் பொருள்களிலே ஒன்று ஒழியாமல் எல்லாம் எனக்கு அகப்பட்டதுகள்'' என்று சொல்லி அவன் அருகிலே நின்ருன். அப்பால் தாசி தான் வந்த காரியம் முடிந்தது என்று பின்னே திரும்பித் தன் வேலைக்காரியைப் பார்த்தாள். அவள் உடனே அதிவேகமாய் அவள் அண்டைக்கு ஓடி வந்து, "அம்மா, அம்மா, நீங்கள் நம்ம அய்யா சமாசாரம் ஒன்றும் தெரியவில்லை என்று விசனப்பட்டு, அதனலே புறதேசத்துக்குப் போக எத்தனித்து இருந்தீர்களே, அவர் வெகு பரிசனங்கள், வெகு வாகனதிகளுடனே இப்போதான் நம்ம வீட்டுக்கு வந்துவிட்டார். உங்களைப் பார்க்க மிகவும் ஆவலா யிருக்கிறதென்று உங்களை அழைத்துக் கொண்டு வரச் சொன்னர்'' என்று சொல்லவே; அத் தாசி, "அடி பெண்ணே, நீ எனக்கு நல்ல வார்த்தை கொண்டு வந்தாய்'' என்று அந் நகைகளின் பேரிலே

திரும்பவும் அக் கவிசனையைப் போட்டு அதுகளை மூடி, அத் தட்டைத் தன் தலைமேல் எடுத்து வைத்துக்கொண்டு, அவ் விடத்திலேயே நிர்த்தனம் பண்ணினுள்; அதைக் கண்ட அவ் வுத்தியோகஸ்தனும் அவளோடு கூட நடித்தான்;

இவர்கள் இருவரும் அப்படிச் செய்வதைப் பார்த்து அப் பக்கிரியும் அவர்களோடு கலந்து அந்தப்படியே செய்தான். இவர்கள் இவ்வாறு செய்கிறதை அத் தாசி வேலைக்காரி பார்த்து, அம் மூவரையும் ஆடவொட்டாமல் நிறுத்தி, "எங்கள் நாச்சியார் தாம் தொலை தூரம் போயிருந்த தன் எசமான் வீடு வந்து சேர்ந்தார் என்று ஆடுகிருர். இந்த உத்தியோகஸ்தர் தம்முடைய மோசம் போன திரவியம் மறுபடியும் தமக்குக் கிடைத்தது என்று ஆடுகிருர். இந்தப் பக்கிரி சாயபும் கூடக் கலந்து அப்படியே ஆட வேண்டியதற்குக் காரணம் என்ன?" என்று கை கொட்டி நகைத்துப் பரிகாசம் பண்ணினுள். அப் பக்கிரி இந்த வார்த்தையைக் கேட்டு, "விழுந்தவன் சிரிக்கிறது வெட்கத்துக் ஆற்றமாட்டாமல் என்கிற வசனம் நீ கேட்டதில்லையோ?" என்று சொல்லி மிகவும் நாணிப் போனுன்.

பெண் சாதி

"கரிச்சான்குஞ்சு"

"நாலு நாளாச்சு, நானும் பார்க்கிறேன், உறுமிகிட்டே இருக்கிறீங்களே! விவரமாய்ச் சொல்லப் போகிறீங்களா இல்லையா? இல்லாட்டி..........." என்றாள் எல்லம்மை.

"இல்லாட்டி........... உம், இல்லாட்டி, கிளிச்சுப் புடுவையோ? இந்தாப்பாரு, இதுக்கெல்லாம் அஞ்சறவன் இல்லே நானு. ஜாதியிலே அம்பலகாரன். அம்பலகாரன் அரிவாள் தெரியுமில்ல உனக்கு...?" என்றான் அவள் புருஷன்.

"ஆமாம், உங்க அரிவாள், எனக்குத் தெரியாதா? என்கிட்ட, கட்டின பொண்டாட்டிக்கிட்டே, பளபளன்னுடுமாக்கும் உங்க அரிவாள்? ஆம்பிள்ளையைப் பாரு. ... மீசை வெச்ச அம்பலகாரருல்ல..."

"இந்தாடி, களவாணீ, ஊரான் கிட்டெல்லாம் நீ பளகறது......"

"தூ, ஆம்பிள்ளே... என்ன சொன்னீங்க? வீச்சு வாளே வாங்கினாலும் வாங்கிடும், பேச்சுவாளு வாங்காது எங்க குலம். என்ன சொல்றீங்க, கயத்தை அறுத்துக் கையிலே கொடுக்கணுமா...?"

"பெரிய பத்தினீல்ல......"

"பாக்கிறீங்களா அதையும்? பத்தி எரிஞ்சிடும் அப்புறம்..."

"அடே, துடிக்கறையே கெடந்து, உம்...நீ என்ன செய்வே? உன் கூட்டத்து வழி. லிங்கத்தேவன் கூட்டம் தானே...?"

"ஏன்? என் கூட்டத்துக்கு என்னவாம்? நாங்க ளின்ன இடத்தைக் குழைச்சுப் பொட்டுப் போட்டுக் கணும் உங்க கூட்டம்! வகை தெரியாமை எதாவது பேசாதீங்க..."

"ஆஹா, பெரிய வகை தெரிஞ்சவல்ல நீ. எவண்டி அவன், நானில்லாதபோது, உன்கிட்ட ரகசியம் பேச? எண்டி இங்கே வந்தான்? கிரிசை கெட்ட நாயே, குலைக் கிறையே..."

எல்லம்மை பொறுமை இழந்து விட்டாள். அவள் இரைய அம்பலகாரனும் இரையப் பிரமாதமாய்ப் போய் விட்டது. எல்லம்மை கயிற்றை அறுத்தே எறிந்து விட் டாள். மஞ்சள் கயிறு கீழே கிடந்தது. கருமணிகள் தெறித்தோட, குண்டும் திருமங்கிலியமும் கயிற்றின் நுனி யில் நழுவிக்கொண்டு கிடந்தன.

அம்பலகாரனே, நரம்பெல்லாம் புடைக்க, "மானம் போனப்புறம் வாழணுமா" என்று கத்திக்கொண்டு அரிவா ளோடு கையை ஓங்கிக்கொண்டு கிளம்பினன்.

"அதைத்தான் நானும் கேக்கறேன்" என்று எல்லம்மையும் எதிர்த்துக் கிளம்பினள். நல்ல வேளை. தெருவில் இருந்த நாலைந்து பேர் உள்ளே வரவே விபரீதம் ஒன்றும் நேரவில்லை. மத்தியஸ்தத்திற்கு வந்தவர்களிட மும் இருவரும் இரைந்து கத்தினர்கள். ஒருவரை யொரு வர் ஏசிக் கொண்டார்கள். இருவருக்கும் பட படப்பு அடங்கவில்லை. இன்னது பேசுகிறோம் என்று அறியாமல் கத்தினர்.

"ஆமாம், குடும்ப மின்னு எல்லாந்தான் இருக்கும். பேசாமை இருங்க..." என்பதுடன் நகர்ந்து விட்டார்கள் மத்தியஸ்தர்கள். அவர்கள் வந்துவிட்டுப் போனதே கெடுதலாய் விட்டது இருவருக்கும். அவர்கள் மனத்திற் குள்ளேயே குமைந்தார்கள். சற்று நேரம் பல்லைக் கடித்துக்கொண்டு இருந்தார்கள். 'ஊர் சிரிக்கும்படி ஆய்விட்டதே......' என்றுதான் இரண்டு பேருக்கும் ஆத்திரம். மாறி மாறிப் பெருமூச்சு விட்டுக்கொண்டு

விறைத்தார்கள் தம்பதிகள். இப்படி ஊமைச் சேஷ்டைகளுடன் சந்தர்ப்பத்தில் முறுக்கேற்றிக்கொண் டிருந்தது மௌனம்.

2

நாலு நாளைக்குமுன் ஒரு நாள் அஸ்தமித்து ஒரு நாழிகைப் பொழுதிருக்கும்; எங்கோ போயிருந்த அம்பலகாரன் வீட்டுக்கு வந்துகொண் டிருந்தான். தூரத்தில் வரும்போது தன் வீட்டுக் கொல்லைவழியாக ஆள் ஒருவன் வேகமாய் இறங்கிப்போவது தெரிந்தது அவனுக்கு. வீட்டுக்கு வந்தான். வந்ததும் மனைவியிடம் கேட்டான், "யாராவது வந்திருந்தார்களா?" என்று. ஒரு மாதிரியாய், "ஒருவருமில்லை..." என்று சொல்லிவிட்டாள் எல்லம்மை. ஆனால், ஆள் வந்து போனது என்னவோ உண்மை. அவளுடைய சொந்த அண்ணன்தான் வந்துவிட்டுப் போனான். அவள் பிறந்த வீட்டிற்கும் அம்பலகாரனுக்கும் 'வெட்டுப் பழி குத்துப் பழி' என்ற அளவுக்குச் சண்டை முற்றியிருந்த சமயம் அது. போக்குவரத்து நின்றுபோய், முகத்துக்கு முகம் பார்க்காமல் ஆகியிருந்தது. இவளும் தன் பிறந்த வீட்டிற்குப் போய் வந்து வருஷக் கணக்கு ஆயிருந்தது. "அங்கே போனாயோ பிறகு இங்கு கால் வைக்கக் கூடாது, இது ஸத்யம், பிடாரி மேலாணை" என்று ஆணை போட்டிருந்தான் அவள் கணவன். இந்த லக்ஷணத்தில் அண்ணன் வந்துபோன விவரம் சொன்னால், வப்பு வந்து, வீம்பாகப் போய், வீண்சங்கடம் முளைக்குமே என்றுதான் அவள், "ஒருவரும் இல்லை" என்று சொல்லி வைத்தாள். ரொம்ப அவசியம் நேர்ந்தால், அண்ணன் வந்துபோனதைச் சொல்லி ஒப்புக்கொள்ளச் செய்துவிடலாம், அப்படியெல்லாம் தன்னை நம்பாமல் இருப்பவனல்ல தன்புருஷன் என்றுதான் நினைத்திருந்தாள் அவள்.

3

ஆத்திரம் இருவரையும் பைத்தியம் ஆக்கிவிட்டிருந்தது. ஒருவராவது சிந்தனை செய்யும் நிலையில் இருக்கவில்லை. தன் அண்ணன்தான் வந்திருந்தான், சண்டை வருமே என்று தான் அதைச் சொல்லவில்லை என்ற

விசயத்தைச் சொல்லி விட்டதாகவே எல்லம்மை நினைத்துக் கொண்டு விட்டாள். கோபம் வாயை விரித்து நெஞ்சில் வார்த்தைகளைக் குவியல் குவியலாகக் கொண்டு வந்த வேகத்தில், அவள் என்னவெல்லாமோ கொட்டினளே தவிர, அண்ணன் பேச்சே வரவில்லை. ஆனல் சொல்லி விட்டதாய் நினைத்துக் கொண்டவள், நினைத்துக் கொண்டவள்தான். 'இதைச் சொல்லியும், கேட்காமல் மானத்தை வாங்குகிருனே தன் கணவன்' என்று மூர்க்கத் தனமாய்ச் சீறினள். 'அண்ணனேடு பேசிக் கொண்டிருந்ததை அசம்பாவிதமாக நினைத்துக் கொண்டுவிட்டான்; தன் குல கௌரவம்தெரியாத இந்தப்புருஷன் எப்பவுமே இதுமாதிரி ஏதாவது நினைக்கத்தானே செய்வான், இவனேடு வாழ்வதைவிட...' என்று பல்லைக் கடித்தாள். அடக்க வேண்டுமென்ற எண்ணம் துளிக்கூட இல்லை அவளுக்கு; அங்கு யாரும் இல்லவும் இல்லை அடக்க. கர்வமும் கலந்து விட, ஆத்திரம் மூண்டு கொண்டே இருந்தது.

இதற்குக் குறையுமா அம்பலகாரன் துடிப்பு? ஆண் பிள்ளை, அதிலும் ஊர்த் தலைமை உள்ளவன். 'சற்று நேரத்திற்குள் ஊர் சிரித்துவிட்டதே, ஊரில் தலை காட்ட முடியாதே இனிமேல், செய்ததையும் செய்துவிட்டு இந்தச் சிறுக்கி இருக்கிற இருப்பு, இவளை என்ன செய்தால் என்ன...?' என்று அவனுடைய ஆத்திரம் வளர்ந்தது. முகமெல்லாம் சிவந்து, சிவப்பு கறுத்து, நெற்றி எலும்பும் நரம்புகளும் உச்சி மண்டைக்கு ஏறிவிட்டன.

சூரியன் மலைவாயில் விழும் சமயம். அம்பலகாரன் எழுந்திருந்தான். "தொலை களுதை, இன்னிப் போதேடே தொலைஞ்சிடு. உங்கப்பன் ஊருக்கே போயி, உன் சந்தத்தைச் சொல்லி, காத்துட்டுக்கு இல்லாமை உங்க மானத்தைப் போக்கி, தீத்துக் கட்டிக்கிறேன், வம்பு எதாவது செஞ்சான், அவன் பொறக்கவே யில்லைன்னு செஞ்சிட்டு வந்துடறேன்..." என்று மூச்சுவிடாமல் உறுமிக் கொண்டே கிளம்பினன்.

"நீங்க ஏன் அங்கே போவணும்? அந்தச் சோலியே நானு வைக்கலையே. அதோ கெடக்கு உங்க கயிறும் தாலி

யும். அங்கே போயி வேறே நீங்க சிறுமைப்பட்டு வார நீங்க. நானே போய்க்கிறேன்...'' என்றாள் எல்லம்மை.

அவள் குரலில் இருந்த 'எகத்தாளம்' வேறு அம்பல காரன் ஆவேசத்தை உசுப்பிவிட்டது.

"பேசினையோ, போட்டுப் புடுவேன், போக்கத்த நாயிக்குப் புல்லாம் பேச்சு வேறையோ...'' என்று வெளியே கிளம்பிவிட்டான்.

எல்லம்மை, என்ன செய்யலாம் என்று யோசித்துக் கொண்டு, திண்ணையில் இருந்தபடி அவன் போவதைப் பார்த்துக் கொண்டிருந்தாள்.

அவன் வீட்டை விட்டுப் பத்தடி தூரம் போயிருப் பான். எதிரே மலைமாதிரி ஒரு மேற்கத்திப் பொலிகாளை அறுத்துக் கொண்டு ஓடி வந்தது.

"சகுனத் தடையாயிருக்குது, வாங்க வீட்டுக்கு'' என்று இரைந்து சொல்லிக் கொண்டு கீழே இறங்கி நடந்தாள் எல்லம்மை.

"ஆஹா, என்ன கரிசனம்...?'' என்று ஆத்திரத்தைக் கேலியாகக் கொட்டிக்கொண்டே அந்த முரட்டுக் காளை யைத் துரத்தக் கையை ஓங்கினான் அம்பலகாரன். மனைவி யின் முகத்திலிருந்து அவன் பார்வைத் திரும்புவதற்குள் தலையை நட்டுக் கொண்டு காளை பாய்ந்தது.

"ஐயோ.........'' என்று வீரிட்டுக் கொண்டு எல்லம்மையும் பாய்ந்தாள். இதற்குள் மாடு அம்பல காரனைக் கீழே கிடத்தி, முன் காலால் அழுத்திற்று. அடுத்த க்ஷணம் மார்பையோ எதையோ கிழிக்க வேண்டியதுதான்.

பாய்ந்த எல்லம்மை, ஆவேசம் கொண்டவள்போலக் காளையின் கொண்டையை முறுக்கித் தள்ளினாள். அவனும் சமாளித்துக் கொண்டு எழுந்தான். யாரோ கோலை எறிந்ததும், பிரமை பிடித்தது போல் குறுக்கே தோப்பில் ஓடிற்று காளை.

கையை ஏந்திப் பிடித்துத் தாங்கினாற் போல் கணவனை வீட்டுக்கு அழைத்து வந்தாள் எல்லம்மை. வரும்போதே, தழுதழுப்பும் கேவலுமாய், "எங்க அண்ணன் வந்துட்டுப் போன முஹூர்த்தமா இது...? ஆனா ஆண்டவன் காப்பாத்தினாரே?" என்றாள்.

"உங்க அண்ணனா வந்துட்டுப் போனான்?" என்று தயக்கமாய்க் கேட்டான் அவன்.

மூக்கும் கண்ணும் மலர நெஞ்சு உலர்ந்தது; உதடும் ஒட்டிக் கொண்டது எல்லம்மைக்கு. ஒன்றும் பேசாமல் தலையை மட்டும் அசைத்தாள், 'ஆமாம்' என்று தோன்றும்படி.



குருவிக்குஞ்சு

மோ. ஸ்ரீ. செல்லம்

காலையில் மணி ஏழரை இருக்கும். பல் துலக்குவதற்காகக் குழாயடிக்குப் போனேன். குழாயைத் திறந்து ஒரு வாய் ஜலம் விட்டுக் கொப்பளித்துவிட்டுப் பிரஷ்ஷைப் பல்லில் வைத்தபடியே சாக்கடை ஓரமாகத் திரும்பினேன்.

தொப்பென்று ஏதோ ஒன்று என் காலடியில் விழுந்தது. பாதங்களுக்கிடையே மெத்தென்று ஏதோ உரசிற்று.

'பாம்போ' என்னவோ என்று பயந்தவனாய்த் சட்டென்று விலகினேன். கீழே பார்த்தேன். பாதி இறக்கை முளைத்ததும் பாதி முளைக்காததுமான ஒரு குருவிக் குஞ்சு.

அதன் நெஞ்சு படபடப்பது கண்ணுக்கே நன்ருய்த் தெரிந்தது. அலகைத் திறந்து திறந்து இளைத்துக் கொண்டிருந்தது.

அருகே ஒருபுறம் இருந்த மொட்டை மாடியிலும் இன்னொரு புறமிருந்த வெந்நீருள் கூரையிலும் பல குருவிகள் உட்கார்ந்து 'கீச் மூச், கீச் மூச்' என்று உச்சஸ்தாயியில் கத்திக் கொண்டும் கீழே இருந்த குஞ்சைப் பார்த்துப் பார்த்து வட்ட மிட்டுக் கொண்டும் துடியாய்த் துடித்தன.

இதற்குள் கருங்காகம் ஒன்று சொத்தென்று பறத்து வந்து வெந்நீருள் கூரைவிளிம்பில் உட்கார்ந்தது. கண்ணைச் சாய்த்துக் குருவிக் குஞ்சை நோட்டம் பார்த்தது.

'கீ, கீ' என்று கத்திக்கொண்டு விலகிப் பறந்த குருவிகள் இப்பொழுது காகத்தைச் சூழ்ந்து வட்டமிட்டவாறே கத்து கத்தென்று கத்திக் கொண்டு பறந்தன.

ஒரு குருவி ஆத்திரத்தோடு இறக்கையைப் படபட வென்று அடித்துக் கொண்டு காகத்தின் மேல் பாய்ந்து கொத்தியது. சற்று நகர்ந்து கொடுத்த காகம், வியப் புற்றது போல், கா கா என்று கத்திக்கொண்டு, சிரிப்பது போல் அலகைப் பிளந்துகொண்டு, அந்தக் குருவியையே கவனித்துக் கொண்டிருந்தது.

'கில கிலு கிலு கிலு கிலு' என்ற கழுகின் குரலைக் கேட்டுத் திடுக்கிட்ட நான் மெதுவாகக் குருவிக் குஞ்சைப் பிடிக்கக் குனிந்து கை நீட்டினேன். குருவிகளின் கூக் குரல் அதிகரித்தது. காகமும் 'கா கா' என்று கூவிக் கொண்டு இடம் மாறி உட்கார்ந்தது.

படபடவென்று ஒரு குருவியின் சிறகுகள் என் முகத்தில் தாக்கின. ஆம். அதே குருவிதான். காக்கை யைத் தாக்கின அதே குருவி. பாவம்! தாய்க் குருவி போலும்.

சற்றுத் திகைத்த நான் ஏதோ உறுதி கொண்டவனாய், குருவிக் குஞ்சைப் பிடிக்க நெருங்கினேன்.

இதுவரையிலும் ஆடாமல் அசையாமல் வாயைத் திறந்து இளைத்துக் கொண்டிருந்த அது இப்பொழுது 'கீ கீ' என்று கத்திக்கொண்டு தன் பாதி இறக்கையால் பறந்து சற்று நகர்ந்தது.

ராமன் பொன் மானைத் தொடர்ந்ததுபோல் தொடர்ந்து கொண்டு போய், கடைசியில் ஒரு மூலையில் வளைத்து அதைப் பிடித்து விட்டேன்.

அப்பாடா, குருவிகளின் கூச்சல்!

மறுபடியும் அந்தக் குருவியின் இறக்கையடி விழுந் தது முகத்தில். அந்தக் காக்கையின் ராக்ஷசக் குரல் பக்கத் தில் தலைக்குமேல் கேட்டது. 'கிலுகிலு கிலுகிலு கிலுகிலு' என்ற கூச்சலோடு கழுகு என் தலைக்குமேல் வட்ட மிட்டது.

'கியாம் கியாம்' என்று கையில் சிக்கிய குருவிக் குஞ்சு புலம்பிற்று.

'அப்பப்பா, ஓர் உயிரைப் பிடுங்கித் தின்ன எவ்வளவு விரோதிகள். அதைக் காப்பாற்ற எவ்வளவு அனுதாபி கள்!' என்று எண்ண மிட்டபடியே குருவிக் குஞ்சை இடது கையால் தடவிக் கொடுத்த வண்ணம், "வாண் டாம்மா, கத்தாதே, பயப்படாதே, நான் ஒண்ணும் பண்ணல்லே. அரிசி போடறேன்'' என்று கொஞ்சிக் கொண்டே உள்ளே போனேன்.

வீட்டில் நான் தனி. எல்லோரும் ஊருக்குப் போயிருந்தனர்.

என் அறை மாடியில் இருந்தது. அதன் ஒரு பக்கம் விசாலமான கூடம். மறுபக்கம் ஒரு மொட்டை மாடி.

அறையில் போய் உட்கார்ந்து கொண்டு மொட்டை மாடிப்புறக் கதவையும் திறந்து வைத்துக் கொண்டேன். காற்றும் வெளிச்சமும் பெறவேண்டி எல்லாம் இடது கையாலேயே. வலது கையில்தான் குருவிக் குஞ்சு இருக் கிறதே.

'ஈஸிச்' சேரில் உட்கார்ந்தேன். அப்பப்பா, எப்படிப் படபடத்தது குருவிக் குஞ்சின் நெஞ்சு. என் காதுக்குப் பறையடிப்பது போல் கேட்டது அந்த ஓசை.

சற்று நேரம் அந்தக் குஞ்சையே உற்றுக் கவனித் துக் கொண்டிருந்த என் மனத்தில் என்னென்னவோ யோசனைகள் ஓடின.

" இதைப் பிரிந்து வாடும் அந்தத் தாய்க் குருவி என்ன வேதனைப்படும்!''

தாயைப் பிரிந்து யாரோ விரோதியின் கையில் சிக்கி விட்டதாக எண்ணும் இந்தக் குருவிக் குஞ்சின் மனம் எப்படிப் பதைக்கும்?

ஆமாம், குருவிகளுக்கு யோசிக்கும் திறமை உண்டா, இல்லையா?

சரி, இதைக் காப்பாற்றுவது எப்படி? எங்கே வைத்துக் காப்பாற்றுவது? ஒரு கூடு வாங்கி அதில் விட்டு

இறக்கை நன்ருக முளைக்கும் வரையில் காப்பாற்றலாமா? இரை தின்னத் தெரியுமோ? இன்னும் வாயில்தான் ஊட்ட வேண்டுமோ? அப்படியானல் அதன் தாய் ஊட்டுவது போல ஊட்டுவது எப்படி?

சரி, வெளியே விட்டு விடலாமா? ஐயோ, அந்த ராக்ஷசக் காக்கையையும் அது இக் குஞ்சைப் பார்த்த விஷப் பார்வையையும் கழுகின் 'கிலுகிலு கிலுகிலு' என்ற சாவுச் சங்கையும் நினைத்தபோது என் மனம் பதைத்தது; உடல் நடுங்கியது. பாவம்! பஞ்சைக் குருவி. பச்சைக் குஞ்சு! அதோடு, தாய்க் குருவி என்ன பாடு படும், இந்தப் பாவிகள் கையில் குஞ்சு சிக்கிக் கிழிபடுவதைக் கண்டு! மானிட வாழ்க்கையே இத்தகைய போராட்டந்தானே.

இந்தச் சமயத்தில் மொட்டை மாடிக்கு அப்புறம் இருந்த அடுத்த வீட்டு மொட்டை மாடியிலிருந்து 'மியாவ்' என்று பூனையின் குரல் கேட்டது. திடுக்கிட்டேன். இன்னும் ஒரு சத்துரு. படுமோசச் சத்துரு. இரக்கமில்லாத கொடிய சத்துரு.

யோசனை ஓடவில்லை. குழப்பம் வந்துவிட்டது. "சர்வேசா, இந்தச் சிறிய உயிரைக் காப்பாற்ற எனக்கு வழியோ வகையோ தெரியவில்லையே. சம்சாரத்தில் பெண்டு பிள்ளைகளையும் பிறரையும் நான்தான் காப்பாற்றிக் கிழிக்கிறேன் என்று நினைத்து மகிழ்கிறேனே என்ன மடத்தனம்!"

சட்டென்று எழுந்து கொஞ்சம் அரிசியை எடுத்து இடதுகையில் வைத்துக்கொண்டு குருவிக் குஞ்சை அதன் அருகே கொண்டு போனேன். அது தின்ன முயலவே இல்லை. அந்தப் படபடப்பும் இளைப்பும் இன்னும் நீங்க வில்லை. கண்களில் எவ்வளவு பயம்? என் கையைவிட்டுத் திமிறி யோட முயன்றுகொண் டிருந்தது.

"ரெண்டரிசி தின்னம்மா. நான் ஒண்ணும் பண்ண மாட்டேன். கண்ணேல்லியோ, முத்தோல்லியோ" என்று என்னென்னவோ சொல்லிக் கொஞ்சினேன். கன்னத் தோடு சேர்த்து அணைத்துக் கொண்டேன். மார்போடு

அணைத்துக் கொண்டேன். பயன் இல்லை. 'கியா கியா' என்று ஓலமிடத் தொடங்கிவிட்டது.

அரிசியைக் கீழே போட்டுவிட்டுக் கையைக் குழித்துக் கொண்டு கொஞ்சம் ஜலம் எடுத்து, குருவிக் குஞ்சின் மூக்கை அதற்குள் அமுக்கிப் பார்த்தேன். ஆனல் அது பின்னும் பயந்து படபடத்ததே ஒழியத் தண்ணீர் குடிக்க வில்லை. கியா கியா என்று உரக்க ஓலமிட்டது.

வெளியே மொட்டை மாடியில் குருவிகளின் கூச்ச லும் காக்கை ராக்ஷனின் கொலைக் குரலும் கழுகின் கிலு கிலுப்பும் கேட்டன.

வெளியே பார்த்தேன். குழாயடிக் காட்சி அப்படியே பிரசன்னமாய் இருந்தது.

திகைப்பும் குருவிக் குஞ்சைப்பற்றிப் பயமும் என்னைப்பிடித்துக் கொண்டன. ஒரு விநாடி மனம் சோர்ந்தது. கையும் சோர்ந்து பிடிப்புச் சோர்ந்து இருக்கவேண்டும்.

குருவிக் குஞ்சு கையிலிருந்து நழுவிப் படபட வென்று பயன்படாத ரக்கைகளை அடித்துக் கொண்டு மொட்டை மாடிக்குப் போய் விட்டது.

குருவிகளின் பேரோலம்! காக்கையும் கழுகும் ஒரே சமயத்தில் பாய்ந்தன. ஒரே பாய்ச்சலாக வெளியே பாய்ந்தேன். கண்கள் கிறுகிறுத்தன. மனத்தில் ஒரே பதைபதைப்பு.

பாதங்களுக்கு இடையே மறுபடியும் மெத்தென்ற உணர்ச்சி. பார்த்தேன், குருவிக் குஞ்சு சுருண்டு கிடந்தது. கையில் எடுத்தேன். சாகவில்லை. பய மிகுதி யால் மயங்கிவிட்டது.

'அப்பாடா' என்று உள்ளே கொண்டுபோய் மேஜை மேல் இருந்த ஒரு வாய் அகன்ற கூடைக்குள் சில கந்தல் துணிகளை மெத்தென்று போட்டு அதற்குள் பூப்போல அதை வைத்தேன். அது பேசாமல் படுத்துவிட்டது. இரண்டு அரிசை உள்ளே அதன் அருகே ஒரு காகிதத்தில் போட்டு வைத்துவிட்டு மொட்டை மாடிக் கதவைச் சாத்தித் தாழிட்டேன்.

வெளியே தாக்குப்படை, காப்புப்படை இரண்டும் இருந்தன. கதவு கம்பிக் கதவு. நெருக்கமான கம்பிகள். குருவிகள் உள்ளே வரலாம். காகமோ, கழுகோ, பூனையோ வரமுடியாது.

நம்மால் இவ்வளவுதான் முடியும். இனிமேல் சர்வேச்வரன் விட்ட வழி என்று முடிவுகட்டி நிமிர்ந்தேன். கடிகாரத்தில் மணி பத்து. ஆபீசுக்கு நேரமாய்விட்டதே!

பறக்கப் பறக்க முழுகிவிட்டு உடுத்துக் கொண்டு, கூடத்துக் கதவை வெளியே பூட்டிக்கொண்டு ஹோட்டலுக்குச் சைகிளில் பறந்தேன். பிரேசில் அரிசிப் பசையை இரண்டு வாய் அள்ளி அடைத்துக்கொண்டு ஆபீசுக்குப் பறந்தேன்.

வேலை செய்யும் பொழுதெல்லாம் குருவிக் குஞ்சின் நினைப்புத்தான்.

என்ன ஆகுமோ என்ற ஏக்கம். ஒன்றும் செய்ய முடியவில்லையே, மனிதன் எம்மாத்திரம், ஒரு துரும்பையும் அசைக்க அவனால் முடியாது என்ற வேதாந்தமும் மாறிமாறிச் சுழன்றது.

வேலை ஓடவில்லை. குருவிக் குஞ்சு வெளியே தத்திக் தடுமாறிப் போய்விட்டது. காக்கை. காவல் இருந்த படுபாவிக் காக்கையின் வாயில் சிக்கிவிட்டது. வானத்தில் கழுகுக்கும் காக்கைக்கும் போர். குருவிக் கூட்டம் இரண்டையும் தாக்குகிறது. கியா கியா என்ற குஞ்சின் பரிதாப ஓலம். மொட்டை மாடியிலிருந்து மேலே பார்த்துக் கொண்டே கத்தும் பூனையின் ஏமாந்த 'மியாவ்.' திடுக்கென்று தூக்கிப் போட்டது. பகற்கனவு!

மாலையில் அரைமணி முன்னமே கிளம்பி வீட்டுக்குப் பறந்தேன். உள்ளே போய்க் கூடைக்குள் பார்த்தேன். குருவிக் குஞ்சைப் பார்த்தேன். காணோம். காகிதத்தில் இருந்த அரிசி கூடையில் இறைந்து கிடந்தது.

சட்டென்று மொட்டை மாடிக் கதவைத் திறந்து மொட்டைமாடி முழுவதும் தேடினேன். பக்கத்து மொட்டை மாடியையும் தேடினேன். குஞ்சையோ வேறு

அடையாளத்தையோ காணோம். அந்தப் பூனை ஓட்டின் மேல் உட்கார்ந்து தலையை வளைத்து உடம்பை நக்கிக் கொண்டிருந்தது. அதன் அருகிலும் ஒன்றும் காணோம்.

'அதன் வழியில் அது போய்விட்டது. என் வழியில் நான் போகவேண்டும். அவன் அவன் வழியில் தான் அவன் அவன் போகவேண்டும். ஒருவர் வழியில் இன்னொருவர் குறுக்கிடுவதோ, ஒருவர் கஷ்ட சுகத்தை இன்னொருவர் மாற்றுவதோ வெறும் கனவு!' என்று எண்ணிக் கொண்டே 'ஈஸி'ச் சேரில் சாய்ந்தவன் நன்றாகத் தூங்கி விட்டேன்.

விழுத்துக் கொண்டபொழுது 'கியா கியா' என்று குஞ்சின் குரல் கேட்டதுபோல் இருந்தது. 'டார்ச்சை' எடுத்துக்கொண்டு எங்கும் தேடினேன். ஒன்றும் காணோம். வெறும் பிரமை,

மணி ஏழரை. சாப்பிடக் கிளம்பினேன். 'குழாய் அடியில் போய் கால் முகம் கழுவினேன். பிரஷ் கட்டைச் சுவரின்மேல் இருந்தது. நான் பல்கூடத் தேய்க்கவே இல்லை என்ற நினைவு அப்பொழுதுதான் வந்தது. சிரிப்பு வந்தது. பல்லை நன்றாய் விளக்கிவிட்டுக் கிளம்பினேன். 'ஒரு சிறு காரியஞ் செய்யவும் மனிதனுக்குச் சக்தியில்லையே' என்று எண்ணமிட்டுக்கொண்டே மெதுவாக நடந்தேன்.

"உன்னையே நீ எண்ணிப் பாரு—இந்த
உலகத்தை உத்தாரம் நீ செய்ய லாமோ?
அன்னையும் அப்பனுமாகும் அவன்
அருளின்றித் துரும்பையும் ஆட்டிட லாமோ
—உன்னையே."

என்று ஒரு பண்டாரம் பாடிக்கொண்டு போன பாட்டு என் காதில் விழுந்தது.

✲

ராணியின் உள்ளம்

கு. ப. சேது அம்மாள்

அன்றிரவு வெகுநேரம் கழித்துப் பாதுஷா ஜோதி பாயி னுடைய அந்தப்புரத்தில் பிரவேசித்தார்.

பிரதி தினமும் எவ்வளவு நேரமாயினும் காத்திருந்து தம்மை எதிர்கொண்டு வந்து வணங்கி இன்னுரை செய்து உள்ளே அழைத்துச் செல்லும் ஜோதி பாயை இன்று அவர் காணவில்லை.

அவளுக்கு உடம்பு என்னவோ என்று திடுக்குற்ருர் அக்பர். மஞ்சத்தின் புறம் பார்த்தார். அது காலியாகக் கிடந்தது!

நின்று கொண்டு சுற்றுமுற்றும் பார்த்தார். கொஞ்ச தூரத்திற்கு அப்பால் இருந்த சாளரத்து அருகில் நின்று கொண்டு வெளி உலகைப் பார்த்துக் கொண்டிருந்தாள் ஜோதி பாய்.

அதைக் கண்டதும் க்ஷண நேரத்திற்குள் பாதுஷாவின் மனத்தில் ஆயிர எண்ணங்கள் உதித்து அவரைக் கலங்கச் செய்தன!

அவ்விதம் அவர் கலக்க முற்றது ஏன்?

ஒன்றுமில்லை!

தன் பிரிய ராணி—இங்கிதமும், மரியாதையுமே உரு வான ஜோதி பாய்—தன் வருகையை அலட்சியமாக மதித் தாளா!

ஏனே தெரியவில்லை; காரணமற்றுத் திடீரென்று, தாம் அவளைப் பலவந்தமாகக் கட்டாயப் படுத்தி மணந்து கொண்டது அவர் நினைவில் உதித்தது!

'சே! என்ன சிந்திக்கிறேம், பைத்தியக்காரத்தன மாக.' அது நடந்து எக்காலம் ஆயிற்று? இப்போது அவள்

தன் உயிரையே என்னிடம் அர்ப்பணம் செய்து ஸத்தியப் பிரேமைகொண்டு வாழும் இக்காலத்தில் இந்த ஞாபகம் என்ன, அகாரணமாக? பெரியோர்கள் மனசு ஒரு குரங்கு என்று உவமித்திருப்பது எவ்வளவு பொருத்த மானது! என் பிரிய ஜோதி, ஸ்திரீ ரத்னம் அல்லவா அவள்! நான்தான் சந்தேகி!'

இவ்வாறு சிந்தித்தபடியே அக்பர் அவள் அருகில் சென்று, மெல்ல அவளுடைய தோளைப் பற்றினர்.

திரும்பிப் பார்த்தாள் ஜோதி பாய்.

உடனே பாதுஷா அவளுடைய மோவாயைப் பற்றி, "ஜோதி!" என்ருர் அன்புப் பெருக்குடன்.

"ஹிருதயேச்வரா" என்ருள் அவள் தடுமாற்றத் துடன்.

மறுபடியும் திடுக்கிட்டார் அக்பர்.

ஜோதி பாய் அது ஒன்றையும் கவனித்தவளாகத் தெரியவில்லை.

"தமையனர் ஊரில் இருக்கிருரா?" என்று கேட் டாள்.

அதற்குப் பதிலாக அவரும், "இருக்கிருர், ஏன்?" என்று கேட்டார், வேறு ஒன்றும் வினவாமல்.

"கொஞ்சம் பார்க்கவேண்டுமே நான்?"

"திவ்யமாக இதோ சென்று அவருக்கு ஆள் அனுப்புகிறேன். சென்று வரட்டுமா?" என்ருர்.

அக்பருடைய உதாரத்வம் அவளை மயக்கத்திலிருந்து விடுவித்தது சட்டென்று.

நிமிஷ நேரத்தில் தன்னைத்தானே சமாளித்துக் கொண்டு, "அதிபதி, இப்போதே பார்க்க வேண்டு மென்பதற்காகக் கேட்கவில்லை. காலையில்..." என்று பேச்சை நடுவில் நிறுத்தினுள் ஜோதி பாய்.

குறிப்பு அறிவதில் அவளுக்கு இளைத்தவரா அவர்?

" இல்லை, ஜோதி. ராஜ காரியமாக அபுல் பஸலை இன்று இரவே பார்த்துப் பேசவேண்டும். அதன் நடுவில் உன்னைப் பார்த்துவிட்டுப் போகலாம் என்றே வந்தேன். வரட்டுமா நான்? "

பதில் பேசாமல் தலையை அசைத்து அவரை அனுப்பி விட்டுத் திரும்பி வந்தாள் ஜோதி பாய்.

மஞ்சத்தில் ஏறிச் சாய்ந்தாள். சாய்ந்துகொண்டு யோசனையில் ஆழ்ந்தாள். நீரில் அமிழ்ந்த அவளுடைய கண்கள் எட்ட இருந்த விளக்கையே பார்த்தன. அவள் சிந்தனை அலைமோதியது. எண்ணங்கள் ஒன்றன் பின் ஒன்ருகத் தோன்றி அவள் உள்ளத்தைக் குலைத்தது.

'ஆம்! மான் சிங் என் அண்ணன், என்னைக் கண் போலக் காத்தவன்! அவன் பாதுகாத்த ஜீவன் நான். ஆகையால் எனக்கு என்ற சுய விருப்பம் இன்றிப் பாதுஷாவின் மனைவியானேன்!

'ஏன் ஆனேன்? முதலில் இதற்கு இணங்கினேனு? இல்லையே! டில்லி அதிபதி; உதாரம் மிக்க பாதுஷா; கருணைக் கடலான மன்னன்; பிறருடைய சித்தம் அறிந்து பழகும் நேர்மை; இவ்வளவு பெருமையும் கொண்ட ஸாம்ராஜ்ய சக்ரவர்த்தியின் கைப்பிடிக்க ஏன் மறுத்தேன் என்பது, எனக்கு அப்போது விளங்கவில்லை......

'என் சித்தம் ஏன் இந்த ராணிப் பட்டத்தை விரும்பவில்லை என்பது இப்போது விளங்குகிறது!

'மொகல் மன்னர்கள் ஸ்திரீ சபலம் கொண்டவர்கள் என்ற உண்மை, மேகத்தில் மறைந்த சூரியனைப் போல என் சிறு மனத்திற்கு அப்பால் இருந்திருக்கிறது. உண்மை தெரியாமல் தத்தளித்துக்கொண்டு, பைத்தியக்காரிபோல, அன்று மான் சிங் என்னைக் கேட்டதும் "நான் ஒரு நாளும் அக்பரின் மனைவியாக மாட்டேன்!" என்று வீறிட்டேன்! சரிதான், புரிந்துவிட்டது. எந்த ஜாதியாளுய் இருந்தால் என்ன, 'அன்னியம்' என்பதைத் தீண்டும் துணிவு மனிதனுக்குச் சாதாரணமாக வந்துவிடுகிறதா?

'பாவம் மேஹர் ஜான்! ஐயோ, அவளும் என் போன்ற ஸ்திரீ! ஆண்கள் என்ற அசுரத் தளையினுட் சிக்கி, வலையில் அகப்பட்ட மான் போலத் துள்ளித் துடிக்கிருள்!

'துள்ளி என்ன செய்கிறது? துடித்து என்ன செய்கிறது! இனி அவளே பேதை! மேஹர் ஜான், நீ இணங்கியே தீரவேண்டும்! மகிபதியால் இச்சிக்கப் பட்டவள் என்ற ராஜ உரிமையை நீ விருப்போடு ஏற்றே தீரவேண்டும்! வேறு வழியில்லை.

'ஒன்றும் வேண்டாம், செத்து ஒழிவோம் என்ருல் அதுவும் கூட முடியாது!

'மேஹர் ஜான், நீ அழுது பலன் இல்லை, பட்டினி கிடந்து பலன் இல்லை. அக்பரின் ஆளுகைக்கு வெளியே—கன்னிப் பெண்ணுக, ரஜபுத்திரனுடைய பராமரிப்பில் ரஜபுத்திரப் பெண்ணுக இருந்த நான், ஹிந்துவான நானே-தப்ப முடியவில்லையே; நீ எம்மாத்திரம் என்று கேட்கிறேன்!

'அறிவற்ற மேஹர்! கேள், அவர் உன்மீது உள்ள பிரேமையை மறக்க இயலாமல், உன் கணவரைக் கொன்று, உன்னைச் சிறைபிடித்து வந்து தம் அரண்மனைக்குள், அந்தபுரத்திற்குள், அடைத்து வைத்திருக்கும்போது உன்ஞல் அவரை நேசிப்பதைத் தவிர்த்து என்ன முடியும்?

'தெரிகிறது, மேஹர், நானும் பெண். பெண்மை என்பதை என்ன என்று அறிவேன். உன் ஆவி என் துடிக்கிறது என்பதையும் அறிகிறேன்! உன் கொதிப்பு நியாயமானதுதான். ஆனல்?

'முடியாது! நம் அற்ப வேண்டுகோளான நிர்மல வாழ்வை நமக்கு அனுமதிக்க அவர்களால் ஆகாது. ஆனல் அவர்களுடைய வரவை நாம் அனுமதித்தாக வேண்டும் என்பது மட்டுமல்ல. மனப்பூர்வமாக, சர்வத்தையும் அவர்களுடைய காலடியில் அர்ப்பணம் செய்து "நீயே என் தெய்வம்" என்று இருக்க வேண்டும். இன்னும்......'

எண்ணத்தின் ஓட்டம் தடைப்பட்டது; நூல் அறுந்தது.

"ஜோதி பாய்" என்ற குரல் அவளை எழுப்பிற்று! அழைப்பின் தொனியிலேயே அவளுக்குத் தெரிந்து விட்டது தன் அண்ணுதான் கூப்பிடுகிருன் என்று.

எழுந்து உட்கார்ந்து, "என், அண்ணு, மான் சிங்!" என்ருள் கரகரத்த குரலில்.

"மான்சிங் கலவரம் அடைந்தவனுகத் தங்கையின் சமீபமாக வந்து அவளை உற்றுப் பார்த்தான்.

இருந்தது இருந்தாற்போல முகத்தை மூடிக்கொண்டு 'ஓ' வென்று அழுதாள் ஜோதிபாய்.

அவள் அக்பரின் மனைவி, ஹிந்துஸ்தானத்தின் மஹா ராணி என்பவை யெல்லாம் மறந்துபோய், சிறுவயதில் தான் வளர்த்த ஜோதி பாயாகத் தென்பட்டாள் மான் சிங்கின் அப்போதையப் பார்வைக்கு!

மான் சிங் துடியாய்த் துடித்தான். சின்னக் குழந்தையா அவள், அள்ளியெடுத்து அணைத்து ஆறுதல் அளிக்க?

அளவற்ற உள்ளக் குமுறலுடன், "ஜோதி பாய் என் அருமை......" என்று வாய் எடுத்தான் மான்சிங். முழுதும் சொல்ல அவனுல் இயலவில்லை. தங்கையின் அருகில் வந்து அவளுடைய இரண்டு கைகளையும் கெட்டியாகப் பிடித்துக் கொண்டான்.

அவ்வளவுதான் அவனுல் முடிந்தது!

சற்று நேரம் வரையில் இருவரும் பேசவில்லை.

மான் சிங் முதலில் திடம் அடைந்தான். மலினமான குரலில், "ஜோத்பாய், பாபியான என்னுல் உனக்கு உற்றது என்ன?" என்று கேட்டான் அவன்.

"அண்ணு, மான் சிங்," என்று விம்மினுள் ஜோதி பாய். மேலே வார்த்தைகள் கிளம்பவில்லை.

அவளுடைய கொந்தளிப்புச் சற்று அடங்கட்டும் என்று மான் சிங் அவளையும் உட்கார்த்தித் தானும் உட்கார்ந்தான் மஞ்சத்தின் மீது.

மீண்டும் கொஞ்ச நேரம் அங்கு மௌனம் நிலவிற்று. எங்கோ திருஷ்டியாக இருந்த ஜோதி பாய்; சட்டென்று மான் சிங்கின் புறம் திரும்பி முகத்தை நிமிர்த்திக்கொண்டு கம்பீரமாக, "அண்ணு, அன்று உன் முன்பு, 'ஐயோ, என்னைக் கொன்றுவிடு, நான் ஒரு நாளும் அக்பரின் மனைவியாக மாட்டேன்!' என்று கத்தினேனே; உனக்கு நினைவிருக்கிறதோ?" என்று வினவினுள்.

"என் கண்ணே, விஷயத்தைச் சொல். இந்த நிமிஷம் நீ என் குழந்தை-அக்பரின் ராணியாகப் பிறகு இரு. இப்போது சொல் உன் மனத்தில் உள்ளதை."

ஜோதி பாய் கோணலாகச் சிரித்துவிட்டு, "மனத்தில் ஒன்றுமில்லை, அண்ணு! மனசுக்கு அப்பால் இருந்த உண்மையை இப்போது, இன்று சாயந்திரந்தான், நான் கண்டேன். நீ என் குரு அல்லவா, அதனல் உடனே அதை உன்னிடம் சொல்ல அவசரப்பட்டேன்............" என்று பேச்சை வளர்த்தினுள்.

"இரு, ஏன் நீளப் பேசுகிருய்? என்ன விஷயம்?"

"விஷயம்! ஆம். விஷயத்தைச் சொல்லத்தானே கூப்பிட்டுவிட்டேன், அவர் மூலமாக. பாவம், கிடைக்கத் தக்க கணவர் அல்லதான். மகா புத்திமான்தான்! என்ன செய்கிறது? குலத்தின் புத்தி......"

"ஜோத்பாய், நீ என்ன பேசுகிருய்?"

"அவசரப்படுகிருயே, அண்ணு? பாம்பு பருவ காலத்தில்தானே சட்டை உரிக்கிறது? அதுபோல நானும் தலை கொண்டு போகிற சோகத்தில்—இந்த அர்த்த ராத்திரியில் ரகசியமாக உன்னிடம்தானே சொல்லுகிறேன்!

"குருவினிடம் பொய் பேசலாமோ? இரு, சுருக்கமாகச் சொல்லிவிடுகிறேன். பாதுஷா மறுபடி வந்தாலும் வரக்கூடும்.

"அஷ்ட ஐச்வரியமும், உதாரத்துவமும் உள்ள டில்லியின் மஹிபதியை, மணக்கும்—அதுவும் பட்டத்து ராணியாகும்—பெருமை சாதாரணமாக யாருக்கும் கிடைக்காது என்ற திருப்தி இன்று அல்ல, அன்றே எனக்குத் தெரிந்ததுதான்.

"ஆனல், ஏன், அதை விஷம்போல நான் வெறுத்தேன் என்ற சூக்ஷ்மம் எனக்கு அன்றைக்குப் புலனுகவில்லை. சாவகாசமாக இன்று தெரிகிறது, கையினில் உள்ள கண்ணுடியிற் காண்பதுபோல!

"என்ன இருந்தபோதிலும் மொகல் என்று ஜனித்த தனுல் அக்பரும், அவருடைய தூய சித்தம் மாறி, ஸ்திரீ மோகம் என்ற தாகம் தணியாத ஒரு தாகி தான்!

"நம் மாசற்ற குலப் பண்பான ஏகசித்த லயம், சுத்தாத்ம தத்துவம் ஆகியவற்றிற்கும்; சிருங்காரம், சுகம், போகம் என்பனவாகிய இவற்றிற்கும் எவ்வளவுக்கு எவ்வளவு தூரம்? அதனுலேதான் இப்படி வெருண்டு இருக்கிறேன்! விஷயம் இவ்வளவுதான், அண்ணு. டில்லீச்வரர், உன் தங்கையின் கணவன், நியாயவானுன அக்பர், ஸூர் கானே வஞ்சகமாகக் கொலே புரிந்துவிட்டு அவனுடைய மனேவியைச் சிறைப்பிடித்து வந்திருக்கிருர்! எதற்காக என்று நினேக்கிருய்? பழிவாங்க அல்ல. பாவம், ஸூர் கானே, மேஹரோ அவருடைய தாயாதிகள் அல்ல.

"சொல்லக்கூட வெட்கமாக இருக்கிறது மான் சிங்......" என்று சொல்லும்போதே கோபத்தாலும், லஜ்ஜையினுலும் அந்த வீர ஸ்திரீயின் உடல் 'வெட வெட' வென்று நடுங்கிற்று. பற்களேக் கட கடவென்று ஒரு தரம் கடித்துவிட்டு, "கேள், மான் சிங், அந்த மேஹர் அசாதாரண அழகி! உலகத்தை மயக்கும் சுந்தரி! அவள் ஏழை ஸூர் கானின் குடிசையில், அவனுடைய மனேவியாக இருக்கலாமோ, மொகலாய ராஜ்யத்தில்? ஆதலால் அந்தப் புவன மோகினி நம் அந்தப் புரத்தில் ஸ்திரீகளின் சிகரமாக இருக்க வேண்டுமென்பது மன்னருடைய இஷ்டம். அவ்வளவுதான். அவள் இன்று கைதி; நாளேக்குக் காதலி; என் பட்டத்தில் பாதி அவளுக்கு உண்டு.

"ஆம், தாராளமாக நானே கொடுப்பேன் அதை அவளுக்கு! பேதை! அழுகிருளாம், அண்ணு! நான் அழவில்லையா என்ன? அதுபோல அவளும் அழுகிரு ளாக்கும்! நான் பட்டினிகிடந்தேனே, இல்லையோ? அது போல அவளும் கிடக்கிருள்! இது எவ்வளவு நாளைக்கு மான் சிங்?

"பாவம், எனக்கு நீ இருந்தாய். அவளுக்கு யாரும் இல்லை. அக்பர் உன்னைச் சிநேகம் செய்துகொண்டு என்னை அடைந்தார். ஸூர் கானை விரோதியாக்கி வதைத்து விட்டு அவளைக் கொணர்ந்திருக்கிருர்!

"ஆதிபத்யம், அண்ணு! அதிகாரத்துவம்! சாம்ராஜ் யத்தின் அரசாட்சி, அக்பருடைய அன்பு இவைகள் எல் லாம் என்ன சாமானியமா?......"

அவள் மேலே என்ன சொல்லிக்கொண்டு போனுள் என்பது மான் சிங்குக்குத் தெரியாது. அந்த வார்த்தைகள் அவன் காதில் விழவில்லை. அவன் தலை 'கிர்'ரென்று சுழன் றது. தங்கையின் கையை இன்னும் இறுக்கிப் பற்றியுங் கூட அவனுக்கு நிலை தடுமாறிற்று.

பொறுமைக் கடலான ஜோதி பாயின் கொந்த ளிப்பைத் தாங்க இயலாதவனுக, அந்த ரஜபுத்திர வீரன் மான் சிங் பிரக்ஞை இழந்து படுக்கையில் சாய்ந்தான்.

ஜோதி பாயின் கண்கள் வெறித்தவாறு அவனுடைய பிரக்ஞையற்ற உடலைப் பார்த்தன!

*

ஒரு வருஷம்

'சுரபி'

தை 25.

காலண்டர் கண்ணில் பட்டவுடனே என் மனத்தில், ஏதோ ஒரு பலத்த வெடி வெடித்ததுபோல் அதிர்ச்சி ஏற்பட்டது. ஆமாம், என் வாழ்க்கைக்கு முற்றுப்புள்ளி வைத்த நாள் அதுதான்.

சரியாய் ஒரு வருஷமாகி விட்டது. இந்தப் பூமியும் சூரியனை ஒருமுறை சுற்றிவந்து விட்டது. இந்த முந்நூற்று அறுபத்தைந்து நாட்களில் எத்தனை பேருடைய வாழ்க்கையிலே என்ன என்ன மாறுதல்கள் நேர்ந்திருக்கின்றனவோ. ஆனால், என் வாழ்க்கைமட்டும் அணுவளவு கூட மாறினதாகத் தோன்றவில்லை. இடி விழுந்த மரத்துக்கு வளர்ச்சி ஏது?

எல்லாம் அன்று நடந்ததுதான்—ஒரே நாளில், ஒரே நொடியில். இன்றுபோல் அன்றுந்தான் நான் தனிக் கட்டை. ஆனால் அன்றிருந்த மனத்துக்கும் இன்றிருக்கும் மனத்துக்கும் எவ்வளவு வித்தியாசம்! ஒரே உள்ளந்தான். ஆனால், அன்று உதய சூரியனை வரவேற்கும் செந்தாமரைபோல் அலர்ந்திருந்தது; இன்று அந்தக் காந்தனைப் பிரிந்து வாடும் மாலை மலர்போலக் கூம்பித் தளர்ந்து கிடக்கிறது. உள்ளம் என்னுடையதுதான் என்றாலும் அன்று அதில் பொங்கியோடிய ஆனந்த வெள்ளத்தை வர்ணிக்க என்னால் முடியவில்லை. வாழ்க்கையிலே ஒரு பற்றுக்கோடும் இல்லாது, மணற்காட்டில் நிற்கும் ஒற்றைப் பனை மரம்போல் வளர்ந்துவிட்டு, திடீரென்று மன முவந்த மாதரசி யொருத்தியைக் கைப்பிடிக்கப் போகும் தடிப் பிரமசாரிகளால்தான் என் மன நிலையை உணர முடியும். காற்றிலே அலைந்துகொண்டிருந்த என் வாழ்க்கை வேர்

கள் காதற் களத்திலே ஊன்றப் போகின்றன. சுருங்கச் சொன்னால், மறுநாள் மணவினை; கிருஹஸ்தன் ஆகி விடுவேன்; உடனே கிருதார்த்தனாகவும் ஆகிவிடுவேன். எனக்கென்று ஓர் 'இல்லம்'! என் இன்ப துன்பங்களைப் பகிர்ந்து கொள்வதற்கென்று ஓர் இல்லாள்!

தோட்டத்திலே பந்தல் நிர்மாணம் ஆகிக்கொண் டிருந்தது. தோட்டத்தில் மலர்ந்திருந்த பூக்களும் பந்தல்காரன் கொண்டு வந்திருந்த செண்டுகளும் போட்டி போட்டுக் கொண்டு வீசும் வாசனை ஜன்னல் வழியாகக் காற்றில் தவழ்ந்து வந்துகொண் டிருந்தது. மேஜைமீது, சுருள் சுருளான புகைக் கரங்களை நீட்டி வான மண்டலத்தைத் தழுவ முயன்றுகொண் டிருந்த ஜவ்வாது வர்த்திகளின் வாசனை அந்த மலர் மணத்துக்குப் புனித மூட்டிக்கொண் டிருந்தது. வெளியிலே தண்ணிலவு தனியரசு செலுத்திக் கொண்டிருந்தது.எனக்கு ஓர் இடத்தில் இருப்புக் கொள்ளவில்லை. அறையிலேயே இப்படியும் அப்படியும் நடமாடி விட்டுத் தெருப்பக்கமுள்ள ஜன்னல் அண்டைப் போய் நின்று, வளர் மதியையும் அதன் தண்ணொளியில் மூழ்கிக் கிடந்த பசும்புல் தரையையும் பார்த்து அனுபவித்துக் கொண்டிருந்தேன். அந்த மாயா லோகத்திலே, என் மனம், சென்றுபோன வாழ்க்கையை அடித்தளம் போட்டு எதிர்காலத்தைக் கோட்டை கட்ட ஆரம்பித்தது.

என் தாயைப்பற்றி எனக்குத் தெரிந்த தெல்லாம் கேள்வியைக் கொண்டு உருவாக்கிய கற்பனைதான். தந்தையைப் பார்த்த ஞாபகம் இருக்கிறது. ஆனால், இரண்டு வயது பாலகனின் மூளையில் பதிந்த படம் எவ்வளவு காலம் மங்காமல் இருக்கும்? இவ்வளவு அதிர்ஷ்ட சாலியான நான் 'சொந்தக்காரர்களிடம்'மட்டும் எப்படி அன்பையோ ஆதரவையோ எதிர்பாக்கலாம்? உண்டானபோது உறவு கொண்டாடி வரும் உறவினர்களுக்குக் குறைவில்லைதான். ஒரு 'லகார'த்துக்கு மேற்பட்ட ஆஸ்திக்குத் தனி வாரிசான என்னை எடுத்து வளர்க்க எத்தனையோபேர் எத்தனையோ விதத்தில் உறவு கொண்டாடிக் கொண்டு வந்தார்கள். ஆனால், பண ஆசை படர்ந்து கிடக்கும் மனத்தில் பாசம் எப்படி வேரூன்றும்? நான் 'வயது வந்தவன்' ஆவதற்

குள்ளே என் பாடு போதும் போதும் என்றாய் விட்டது. வயதும் வந்து, ஆஸ்தியும் ஒப்படைக்கப்பட்ட அன்று, சிறைச்சாலையி லிருந்து விடுதலை பெற்றதுபோல் என் மனம் துள்ளிக் குதித்தது. அப்புறம் கிட்டத்தட்ட எட்டு வருஷங்கள் ஓடி மறைந்து விட்டன. குடும்ப வாழ்க்கையிலே என் மனம் நாட்டங் கொள்ளவேயில்லை. கயிறு தளர்த்திப் போட்ட வண்டி மாடுபோல் கட்டாந் தரையில் ஒரே கதியில் சென்று கொண்டிருந்த என் மனத்தைத் தட்டி நிறுத்தி, வேறு பாதையில் செலுத்தக்கூடிய புண்ணியவதி எவளும் அதுவரை என் எதிரே வரவில்லை.

இந்தக் 'கடலக'த்தை வாங்கி இங்கே குடிவந்த பிறகுதான் என் வாழ்க்கை புதிதாய்த் துளிர்விட ஆரம்பித்தது. அப்படி அதற்குப் பசுமை யூட்டியவள் பக்கத்துத் தெருவிலுள்ள பத்மாசனிதான். முதல் முதலில் அகஸ்மாத்தாகப் பார்த்த அன்றே அவள் என் மனத்தில் புதியதொரு கிளர்ச்சியை ஏற்படுத்தி விட்டாள். இத்தனை வருஷ காலமாக எத்தனையோ பெண்களைப் பார்த்திருக்கிறேன். ஆனால், அவர்களிட மெல்லாம் இல்லாத ஏதோ விசேஷ மொன்றை இவளிடம் என் கண்கள் கண்டுவிட்டன. அன்று முதல் என் எண்ணங்கள், கருத்துக்கள், கொள்கைகள் எல்லாம் மாறத் தலைப்பட்டன. நான் சென்றுகொண் டிருந்த பாதை சூனியத்தை நோக்கிச் செல்வது என்று அப்போதுதான் எனக்குத் தோன்றிற்று. அவள் என் மனைக்கு அதிகாரியாக வந்துவிட்டால் என் ஜன்மமே சாபல்யமாய் விடுமென்று தோன்றிற்று. அவள் பெற்றோரும் நான் கேட்டவுடனே சம்மதித்து விடவே, உடனே திருமணத்துக்கு ஏற்பாடு செய்துவிட்டேன். மேற்கொண்டு எங்கள் வாழ்க்கை நாடகத்தில் நிகழப் போகும் இன்பக் காட்சிகளை யெல்லாம் என் மனம் சித்திரித்துக் காட்டிக்கொண் டிருந்தது.

ஜன்னல் அருகில் நின்று எதிர் காலத்தை எட்டிப் பார்த்து இப்படி இன்பக் கனவு கண்டுகொண் டிருந்த சமயத்தில் யாரோ ஒரு வாலிபன் அங்கு வந்து சேர்ந்தான். சிவ பூஜையில் கரடி புகுந்ததென்றா? இதை விடப் பொருத்தமான உதாரணம் ஒன்று அதற்குச் சொல்ல

முடியாது. அவன் வேட்டியும் சட்டையும் தலையும் கிடந்த அலங்கோலத்தைக் கண்டு வெறி பிடித்தவனே என்று பயந்து போனேன். ஏக்கம் நிறைந்து கிடந்த கண்களால் எதிரில் வந்தவரை எடுத்து விழுங்கி விடுவான்போல் இருந்தது; எதையோ பறிகொடுத்துப் பரிதவிக்கும் மன நிலையின் வேகம் முக முழுதும் பரவிக் கிடந்தது. வந்தவன் சிறிது நேரம் அப்படியே ஸ்தம்பித்து நின்று விட்டான். இரண்டொரு நிமிஷங் கழித்து, இந்தப் பித்தனுக்கு இந்தச் சமயத்தில் இங்கே என்னவேலை என்று நான் எண்ணிக் கொண்டிருக்கையிலேயே, அடி வயிற்றிலிருந்து புகைச்சல் பொங்கி வந்தது: "ஐயோ, இது தர்மமா? இது நியாயமா? இப்படி இரண்டு ஜீவன்களை வதைத்துக் கொல்லலாமா? உங்களுக்குக் கண் இல்லையா? உங்கள் மனம் இரும்பா?" என்று அலறலானான். அவன் அலறலைக் கேட்டு, நான் அச்சத்தையும் மறந்து கதவைத் திறந்து கொண்டு வெளியில் வந்தேன். ஓர் அடி வெளியில் வைப்பதற் குள்ளேயே அவன் தடாலென்று விழுந்து என் காலைப் பற்றிக்கொண்டு குழந்தைபோல் விம்மி விம்மி அழ ஆரம்பித்தான். என் மனத்தில் சுழித்துக்கொண் டிருந்த மற்ற எண்ணங்களை யெல்லாம் மீறிக்கொண்டு வாஞ்சையும் பரிதாபமும் பொங்கலாயின. அவனை வாரியெடுத்து முதுகில் தட்டிக் கொடுத்துத் தேற்றி, "என்ன அப்பா உனக்கு? ஏன் இப்படிக் கலங்குகிறாய்? நான் என்ன பண்ணினேன் உனக்கு?" என்று கேட்டேன். உணர்ச்சி நெஞ்சு அடைக்க, "அண்ணா, உயிரை விட்டு உடலைப் பிரிக்கலாமா?" என்று அவன் கேட்ட கேள்வி என் மனத்திலும் ஒரு பெரிய கேள்விக் குறியைத்தான் எழுப்பியது. ஆனால், அதற்கு விடை கூறுவதுபோல், "புத்தி தெரிந்தது முதல் பிரிந்தறியாத என்னையும் என் பத்மாவையும் பிரிப்பதைவிடப் பாபமுண்டா?" என்று அவன் கதறியதைக் கேட்டவுடனே, இருளில் மின்னல் பிறப்பது போல என் மனத்தில் விஷயம் புலப்பட்டது. அந்த மின்னலை ஒட்டியே இடித்த இடிதான் என் வாழ்க்கையைப் பொட்டலாக்கி விட்டது. அடுத்த நிமிஷமே என் மனத்தில் ஓர் உறுதி பிறந்து விட்டது. "கவலைப்படாதே அப்பா, இவ்வளவு தானே? உண்மைக் காதலை வேரறுக்கும்

பாவம் எனக்கு வேண்டாம். எனக்கு உடன் பிறந்தவர் ஒருவரும் இல்லை. ஆனால் இன்று எனக்கு ஓர் அருமைத் தம்பியை நான் கண்டெடுத்து விட்டேன்'' என்று அவனைத் தைரியப்படுத்தி உள்ளே அழைத்துச் சென்றேன்.

உள்ளே போய் ஆச்வாசப்படுத்தி அவன் வரலாற்றை விவரமாய்க் கேட்டறிந்தேன். ஏழைக்குடியிலே பிறந்து வறுமையிலே கிடந்து அவன் வாடியதையும், முன்னுக்கு வருவதற்கு அவன் பட்ட பாட்டையும், அவ்வளவு பாட்டிலும் அவனுக்கு ஊன்றுகோலாய் இருந்த லக்ஷ்யத்தையும் கேட்கக் கேட்க என் உறுதி பலப்பட்டுக் கொண்டே வந்தது. பலப்படப் பலப்பட, அந்த உறுதி என் மனக் கோட்டையை இடித்துக்கொண்டே வந்தது. சில நிமிஷத்துக்கெல்லாம், உன்னதமான காதற்கோட்டை ஓங்கி நின்ற இடத்திலே, இனிமேல் பசுமைக்கே இடமில்லாத கட்டாந் தரை கண்ணை உறுத்திக்கொண்டு பரந்து கிடந்தது.

எனக்கென்று தயாரான மணப்பந்தலில் மறுநாள் காலை, பத்மாசனியும் பராங்குசனும் மாலையணிந்து மண வாழ்விற் பிரவேசித்தார்கள். தம்பதிகளான உடனே இருவரும் முதல் முதலில் என்னைத்தான் வணங்கி வாழ்த்தினர்களென்று சொல்ல வேண்டியதில்லை. பத்மாசனி என்னை ஏமாற்றி விட்டாளென்றாலும், என் மனத்தைக் கொள்ளை கொண்டவள் கொண்டவள்தான். அவள் காதலனும், எனக்குப் போட்டியாய் வந்து என் தலையிற் கல்லைப் போட்ட போதிலும் என் அன்புக்கும் ஆதரவுக்கும் பாத்திரனாய் விட்டான். அன்று அவன் கோலத்தைக் கண்ட போதே ஆசாமி ஒரே உணர்ச்சிமயம் ஆனவன் என்பதை உணர்ந்து கொண்டுவிட்டேன். அன்றுமட்டும் அவன் லக்ஷ்யம் ஈடேறாமற் போயிருந்தால் என்ன நடந்திருக்கும் என்பதைக் கற்பனை செய்து பார்க்கக்கூட என் மனம் துணியவில்லை. சின்னஞ் சிறு தீப் பொறியாலே வெடிக்கக் கூடிய வெடி மருந்துப் பெட்டியை எரிகின்ற நெருப்பிலே எடுத்தெறிந்தால் என்ன ஆகுமென்பதை ஊகிக்கக் கற்பனை வேண்டுமா? அத்தகைய விபரீதத்துக்குக் காரணமாயில்லாமல் தப்பித்துக் கொண்டோமே என்பதை எண்ணிப் பார்க்கும்போது என் மனத்தில் ஒருவித

ஆறுதல் பிறந்தது. ஏதோ பெரிய காரியத்தைச் சாதித்து விட்டவன்போல் பெருமிதப்பட்டுக் கொண்டேன். இந்தக் கட்டாந் தரைக்கு இனி எதற்கு இவ்வளவு செல்வம் என்று கொஞ்சம் பணத்தை எடுத்து அந்தப் புது நிலத் திலே எருவிட்டேன். அவர்களுடைய காதற் பயிர் தரக் கூடிய இன்ப மாசூலே எண்ணி அதற்குக் காரணமாயிருந் தவன் என்ற முறையில் திருப்தி பட்டுக் கொண்டு ஊரை விட்டுப் புறப்பட்டேன். இருந்தாலும் அந்தப் பசுமையான வயலைப் பார்த்துவிட்டு என் பொட்டல் காட்டையும் பார்க்கும் போதெல்லாம் எனக்குப் பகீரென்றதில் தப்பித மொன்றுமில்லை யல்லவா?

திடம் ஒன்றுமில்லாமல் மனம்போன போக்கில் எங் கெங்கேயோ கிட்டத்தட்ட ஒரு வருஷம் சுற்றித் திரிந்து விட்டுத்தான் ஊருக்குத் திரும்பியிருக்கிறேன். அப்படியும் மனம் நிலைகொள்ளவில்லை. பழைய வீட்டையும் பழைய சூழலையும் பார்க்கும்போது எண்ணம் எங்கெங்கோ ஓடுகிறது.

தை 25.

மறுபடியும் அந்தத் தேதி கண்ணில்பட்டது. அதைப் பார்த்த உடனே, அன்று பராங்குசன் ஓடிவந்து என் மனக் கோட்டையை இடித்தபோது ஏற்பட்டது போலவே அதிர்ச்சி ஏற்பட்டது. போதாக் குறைக்கு இன்றும் தோட்டத்திலிருந்து நறுமணம் வந்து கொண் டிருந்தது. இன்றும் ஊதுவர்த்தியின் புகை உள்ளத்தைப் புனிதப்படுத்திக் கொண்டிருந்தது. இன்றும் வெளியிலே, அன்று சாக்ஷியாயிருந்த அதே சந்திரன் மாறுதலில்லாமல் தன் அமுத கிரணங்களைப் பொழிந்து கொண்டிருந்தான்.

அறையிலே சற்று நடமாடிவிட்டுத் தெரு ஜன்னல் பக்கம் போய் நின்றேன். போன வருஷத்துச் சம்பவங்கள் சினிமாத் திரையில் தோன்றுவதைவிட வேகமாகத் தோன்றி மறைந்து கொண்டிருந்தன. மனம் சம்மட்டி யால் அடிப்பதுபோல் இடித்துக் கொண்டிருந்தது. ஆனல் கூடவே வேறு ஏதோ ஓர் உணர்ச்சி ஆறுதல் சொல்லிக் கொண்டே யிருந்தது. ஓர் இடத்தில் பள்ளம் உண்டானல்

அதே க்ஷணத்தில் மற்ருேர் இடத்தில் மேடு எழும்புகிறது என்ற சித்தாந்தம் எனக்கு ஒரு பெரிய திருப்தியைக் கொடுத்தது. என் வாழ்வு வாடி வதங்கிய அதே நிமிஷத்தில் என் அன்புக்குப் பாத்திரமான இரண்டு ஜீவன்களின் வாழ்வு மலர்ந்து இருக்கிறது அல்லவா என்ற தெய்விக உணர்ச்சி எழுந்த உடனே என் ஆத்திரம், அங்கலாய்ப்பு எல்லாம் அடங்க, என் மனம் அந்தக் காதல் தம்பதிகளின் வாழ்வைக் கற்பனைத் தூரிகைகொண்டு தீட்ட ஆரம்பித்தது. அத்தனைக்கும் சிருஷ்டிகர்த்தா நான்தான் என்ற பெருமிதத்துடன் அந்த ஆற்புதமான வண்ண ஜாலங்களை மனக் கண் கொண்டு பார்த்து அனுபவித்துக் கொண்டே மெய்ம் மறந்திருந்தேன். என் மனத்திலே இப்படிக் கொந்தளிப்பைக் கிளப்பிய இதே தை 25 அவர்கள் மனத்திலேயும் வேறு விதமான அலைகளை எழுப்பியிருக்கும் அல்லவா என்ற எண்ணம் பிறந்த உடனே மனத் திரையில் தோன்றிய உருவங்கள் பின்னும் பிரகாசமாய்த் திகழலாயின.

புதிய காட்சிகளை அனுபவித்துக் கொண்டேயிருக்கையில், திடீரென்று யாரோ 'திபு திபு'வென்று ஓடிவரும் சப்தம் கேட்டது. ஜன்னல் வெளியே தலையை நீட்டிச் சப்தம்வந்த திசையாய்த் திரும்பிப் பார்த்தேன். சந்திரன் அப்போதுதான் வேகமாய் ஓடி ஒரு கருமேகத்தினுள் தஞ்சம் அடைந்து கொண்டிருந்தான். இருந்தாலும், அந்த மங்கிய நிலவொளியிலும், ஓடிவந்தவன் பராங்குசன்தான் என்று சந்தேகமின்றித் தெரிந்தது. ஏன்? அவன் ஆடையெல்லாம் புதிய ரத்தக் கறை தோய்ந்து கிடந்ததுகூடத் தெரிந்தது. எனக்கு ஒன்றும் புரியவில்லை. சற்றுக் கூர்ந்து கவனித்தேன். அவன் கையிலிருந்த கத்தி, கறைக்குக் காரணங் காட்டிற்றே யொழிய விஷயம் இன்னதென்று விளக்கவில்லை. ஆனுல் ஓடிவந்தவன் சும்மா ஓடிவரவில்லை. என் முகத்தைப் பார்த்தவுடனே அவன், "அட பாவி! சண்டாளா! உன்னுல்தானே இந்த வாழ்க்கை! ஐயோ, என்னுல் பட முடியவில்லையே. தொலைந்தாள். தொலைத்துவிட்டேன் அவளை. இந்தா, என்னை என்ன வேண்டுமென்ருலும் செய்துகொள்" என்று பேய்போல் அலறிக்கொண்டே தடாலென்று விழுந்

தான். ஆசாமி ஓர் உணர்ச்சி மூட்டை என்பதை அறிந்திருந்த எனக்கு விஷயம் புரிந்துவிட்டது. 'மதனன் ஒரு விசித்திர தெய்வம்' என்று என் வாய் முணு முணுத்தது. பூமி ஒரு தடவை சுற்றி வருவதற்குள்ளே எத்தனைப் பேர் வாழ்க்கையிலே என்ன என்ன மாறுதல்கள் ஏற்பட்டிருக்கின்றனவோ என்று நான் எண்ணியது எவ்வளவு உண்மையாய்ப் போய்விட்டது!

ஒரு வருஷத்துக்கு முன்னே பராங்குசன் ஓடிவந்து என் காலடியில் விழுந்தபோது என் தலையில் இடி விழுந்தது என்றால், இன்று நூறு இடி ஏக காலத்தில் என் தலையில் இடித்ததுபோல் இருந்தது. அதிர்ச்சி தெளிந்து நின்ற உடனே, அன்று நான் செய்தது தியாகமா, பாவமா என்று என் மனமே என்னைக் கேட்க ஆரம்பித்துவிட்டது.



வாணியின் புதிர்*

கௌரம்மாள்

1

இந்திரா அன்றைக்கு எழுந்து வெளியே வந்தபொழுது காலியாகவிருந்த அடுத்த வீட்டுக்கு யாரோ குடி வந்திருப்பதுபோல் தோன்றிற்று. வீட்டின் எதிரில் சாமான் நிறைந்த 'லாரி' ஒன்று நின்றிருந்தது. உள்ளே இருந்து பேச்சுக் குரல் கேட்டது. அதைப் பார்த்து, ஐந்தாறு வருஷங்களாகக் காலியாகக் கிடந்த அந்த வீட்டிற்கு வந்தவர்கள் யார் என்று அறிய வேண்டுமென்ற குதூகலத்தைவிட ஆலுப்புத்தான் அதிகம் தட்டிற்று. 'அடுத்த வீட்டுப் பாட்டி போனால் அந்த இடம் கன்று கட்டுவதற்கு உபயோகமாகும்' என்னும் சுபாவம் இந்திராவுக்கு இல்லாவிட்டாலும் அந்த வீட்டிற்குக் குடி வந்தது அவளுக்குச் சந்தோஷத்தைவிட வருத்தமே அதிகமாயிற்று என்றால் தவறு இல்லை. அவளுக்கு அவ்விதம் ஆவதற்குக் காரணம் இருந்தது.

இந்திரா பிறப்பதற்கு முன்னரே தகப்பனாரையும் பிறக்கும்போது தாயாரையும் இழந்தவளாய், தாயாதிகளின் வீட்டில் எல்லோருக்கும் பாரமாக வளர்ந்து வந்தாள். இவ்வளவு மட்டும் போதாது என்றோ என்னவோ, கலியாணமாகி ஆறு மாசங்கள் ஆவதற்கு முன்னதாகவே வைதவியம் வேறு வந்துவிட்டது. இப்போது அவள் வசித்து வரும் சின்னஞ் சிறு வீடு ஒன்றுதான் ஒரு காலத்தில் அவளுக்குக் கலியாணம் ஆகியிருந்தது என்பதற்கு அடையாளம். தான் பிழைப்பது அசாத்தியம் என்று தெரிந்தவுடனே, அவளுடைய கணவன் சொற்பப் பணத்தையும் அந்த வீட்டையும் அவள் பெயருக்கு எழுதி வைத்தான். அவை கிடைத்ததாலேயோ என்னவோ

* தமிழாக்கியவர்: ஜயலக்ஷ்மி ஸ்ரீநிவாஸன்.

இந்திராவின் வாழ்க்கை, மற்றவர்கள் தயவின்றி ஒருவித மாக நடைபெற்றது.

அந்த வீட்டின்மீது அவளுக்கு ரொம்பப் பிரியம். அதை அழகாக வைத்துக்கொள்வது ஒன்றுதான் அவள் வாழ்க்கையின் லக்ஷ்யம். தான், தன்னுடையது, என்று சொல்வதற்கே வகையின்றி வளர்ந்து அலுப்புத் தட்டி இருந்த அவளுக்கு அந்த வீட்டின்மீது அவ்வளவு பிரியம் ஏற்பட்டதில் அதிசயம் இல்லே. மேலும் அவளுடைய வாழ்க்கையில் கொஞ்சமேனும் சுகம் கண்டிருந்தால் அது வும் அந்த வீட்டில்தான். கணவன் இறந்துபோனுல், தன் வாழ்க்கையே பாழாய்விடும் என்ற அறிவு உண்டா வதற்கு முன்பே அவள் கணவன் செத்துப்போய்விட் டான். கல்யாணத்தில் அவன் முகத்தை பார்ததவள் மறு முறை பார்த்தது அவன் இறந்தபின்தான். அப்படிப் பார்க்கப்போனுல் அவன் செத்தபின்தான் அவள் வாழ்க்கையிலே கொஞ்சம் சுகம் உண்டாயிற்று எனலாம். ஏன் என்ருல் அவளுக்காக அவன் வைத்துப்போன பணத்தாசையால் வீட்டிலுள்ளவர்கள் அவள்பால் அதிக அன்பு செலுத்தலாயினர். ஆனுல் இந்திரா புத்தி தெரிந்து எல்லாம் அறியக் கூடியவள் ஆனபிறகு தானே தனியாகச் சுதந்தரத்துடன் இருக்க விரும்பினுள். அவள்மீது இல்லா விடினும் அவளுடைய பணத்தின் மீதுள்ள ஆசையால் வீட்டினர், "சிறுசு, நீ போய்த் தனியாக ஒரு வீட்டில் இருப்பது சரியில்லே" என்று எவ்வளவோ சொல்லியும் இந்திரா மாத்திரம் தன் தீர்மானத்தை மாற்றவில்லே.

இது ஆறுவருஷங்களுக்கு முந்தின விஷயம். அப்போது அவளுக்கு இருபது வயது. அவள் ஊரிலிருந்து அந்த வீட் டிற்கு வருமபோதே அடுத்த வீடு காலியாகவிருந்தது. அன்று முதல் இன்றுவரைக்கும் இந்துவுக்குத் தன் வீட்டு முற்றத்தைப் போலவே சுதந்தரமாக அடுத்தவீட்டு முற் றத்திற்கும் போய் வருவது வழக்கமாகி இருந்தது. காலக் கிரமத்தில் முறிந்து விழுந்த நடு வேலியைக்கூடத் திருப்ப வும் கட்டும் அவசியம் அவளுக்குத் தோன்றவில்லே.

அவளுடையது ஏகாந்தத்தை நாடும் மனசு. பிறந்தது முதலே தன்னுடையவர்கள், தன்னுடையது என்பது

இல்லாமல் தனியாக வளர்ந்திருந்த அவளுக்குச் சுதந்தரம் ஏற்பட்ட பிறகும் இதரர்களுடைய சகவாசம், சிநேகம், அன்பு ஆகிய எதுவும் அவசியமாகத் தோன்றவில்லை. அப்படி என்றைக்காவது தோன்றி இருந்தாலும் தானுகவே போய் இன்னொருவரின் சிநேகத்தைக் கோருவதற்கும் சங்கோசம் உள்ள சுபாவம் அவளுடையது. ஆகலால் சுயேச்சையாக விருந்த அவளுக்கு அடுத்த வீட்டுக்குக் குடி வந்திருக்கிருர்கள் என்று தெரிந்தபோது சந்தோஷம் ஏற்படாமல் இருந்ததில் ஆச்சரியம் இல்லை. ஆனல், அவளது சந்தோஷத்தை யொன்றும் அடுத்தகத்துக் குடித்தனக்காரர்கள் பறித்துக் கொள்ளவில்லை. அதை அவளும் அறிந்திருந்தாள். ஆனலுங்கூட, "வந்துவிட்டார்களே" என்று மாத்திரம் தோன்ருமல் இருக்கவில்லை. இனி முறிந்த வேலியை மறுபடியும் போடாவிட்டால் தன் ஏகாந்தத்திற்குப் பங்கம் ஏற்படும் என்று எண்ணிக் கொண்டே உள்ளே சென்றவள் அன்றைக்கு மறுபடியும் புறக்கடைப் பக்கம் போகவே இல்லை.

2

மறுநாள் இந்து முறிந்த வேலியை 'ரிபேர்' செய்வித்துக்கொண் டிருந்தபோது அடுத்த வீட்டு முற்றத்தில் கிணற்றண்டை தன் வயசுப் பெண் ஒருத்தியைப் பார்த்தாள். அவளும் இவளைப் பார்த்தாள்; பார்த்துப் புன்சிரிப்புப் பூத்தாள். அந்தச் சிரிப்பின் பிரதிபிம்பம் இந்துவின் முகத்திலும் பரவிற்று. சரி, இன்னும் இரண்டு நாள் வேலை இருந்துங்கூட வேலியின் காரியம் அதன் பிறகு நடை பெறவில்லை.

இவ்வாறு சிரிப்பிலிருந்து இந்துவுக்கும் அடுத்த வீட்டு வாணிக்கும் ஆரம்பமான உறவு ஒரு வாரம் முடிவதற்குள் சிநேகமாக உருவாயிற்று. யார் நட்பையும் விரும்பாத இந்துவுக்கு வாணியின்பால் தனக்கு உண்டான ஆதரவைக் கண்டு ஆச்சரியம் உண்டாயிற்று. வாணி என்னவோ ஊருக்குப் புதியவள். யாருடைய அறிமுகமும் அவளுக்கு இல்லை. தினம் விடிந்தவுடன் அடுத்த வீட்டு இந்துவின் முகத்தைப் பார்ப்பாள். வாணிக்கு இந்துவின்

அறிமுகம் கிரமமாக நட்பாக மாறியதில் அதிசயம் ஒன்றும் இல்லை. ஆனால் அந்தமாதிரியான சகஜமான நட்பின் சாயையே அறிந்திராத தன் இதயத்தில் அந்த நட்பு உருவாகக் கூடுமென்பதை மாத்திரம் இந்து அறியாள்.

அந்த அகத்தில் வாணி, அவள் கணவன் ரத்தினம் ஆகிய இருவர்தாம் இருந்தார்கள். ரத்தினம் அந்த ஊருக்குப் புதிதாக மாற்றலாகி வந்திருக்கும் டாக்டர். ஊருக்கு ஒருவனே டாக்டர். ஆகையால் சாப்பிடுவதற்குக்கூட அவகாசம் கிடைக்காத அளவு வேலை அவனுக்கு. வாணிக்கும் வீட்டில் தனியாக இருப்பதற்கு அருவருப்பு. ஆதலால் அவளுடைய முக்கால்வாசிப் பொழுதெல்லாம் இந்துவின் அகத்திலேயே கழிந்துவிடும். இந்துவும் இரண்டொரு தடவை அவள் வீட்டிற்குப் போயிருந்தாள்.

இந்து முதல் முதல் வாணியின் வீட்டுக்குப் போன போது துணி, மணி, பாத்திரம், பதார்த்தங்கள் எல்லாம் வீடு நிறையக் 'கன்னா பின்னா' வென்று விழுந்திருந்தன.

வாணி என்னவோ, "புதிசாக வந்ததினால் வீட்டை இன்னும் சீர் செய்வதற்கு ஒழியவில்லை" என்றாலும், வீட்டை எப்போதும் பரிசுத்தமாக வைத்துக்கொள்ளும் இந்துவுக்கு, "வந்து பதினைந்து நாள் ஆகியும் இன்னும் ஒழியவில்லையா?" என்று ஆச்சரியம். அன்று எல்லாவற்றையும் ஒழுங்கு படுத்துவதில் வாணிக்கு உதவி செய்தாள். பகல் இரண்டு மணிக்கு ஆரம்பித்து எல்லாவற்றையும் ஒழுங்கு செய்யும் வேளைக்கு இருட்டும் சமயம் ஆகிவிட்டது. ஆகக்கூடி எல்லாம் முடிவுறும் வேளைக்கு வீடு பரிசுத்தமாகவும், அழகாகவும் விளங்கிற்று.

அந்தக் காரியத்தில் வாணிக்கு இந்து உதவினாள் என்பதைவிட இந்துவுக்கு வாணி உதவினாள் என்பதே பாந்தமாகவிருக்கும். முக்கால்வாசிக் காரியங்களைச் செய்தவள் இந்து. எந்த எந்த வஸ்துவை எங்கே எங்கே வைக்க வேண்டும்; எப்படி வைத்தால் அதிக அழகாக, கவர்ச்சிகரமாக இருக்கும் என்று ஆலோசித்து ஒழுங்காக வைத்தவள் இந்து. இந்துவால் தூக்க முடியாத பெரிய பெரிய சாமான்களை எடுத்துவைக்க உதவி புரிவது, அல்லது

அவள் சொல்லும் சாமான்களைக் கொணர்ந்து கொடுப்பது போன்றவைகளைச் செய்தவள் வாணி. அவர்கள் காரியம் முடியும்போது வீடு ஒருவித நூதனக் களையுடன் விளங் கிற்று. வாணிக்கோ புத்துரு பெற்று விளங்கும் தன் வீட்டைக் கண்டு அளவற்ற ஆச்சரியமும், ஆனந்தமும் ஏற்பட்டது.

அவள் பிறவிச் சோம்பேறி. எந்தக் காரியத்தையும் நாளைக்குச் செய்தால் போகிறது என்கிற சுபாவம். நாளைக்கு நாளைக்கு என்று எப்போதும் அவள் காரியங் கள் நடைபெறுமலே விழுந்துகிடக்கும். ஆதலால் சகஜ மாகவே அவள் வீடு என்றைக்கும், அன்று இருந்தாற் போல் அழகாக விளங்கியது இல்லை.

அன்று சாயந்திரம் ரத்தினம் கொஞ்சம் சீக்கிரம் வந்தான். அவனுக்கும் தன் வீடு நிர்மலமாகக் காணப் படுவதைக்கண்டு ஆச்சரியம் உண்டாகாமல் இல்லை. ஆனல், காபி சாப்பிட்டு முடிப்பதற்கு முன்பே, வாணியின் வாய் மூலம் வீடு அவ்வளவு அழகு பெறுவதற்குக் காரண கர்த்தா அடுத்த வீட்டு இந்துதான் என்பதை அறிந்தான். அறிந்தவுடனே, 'என் வாணியும் குடும்ப நிர்வாகத்தில் அதிக ஆர்வம் செலுத்துபவளாக விருந்தால்?' என்று தோன்றிற்று அவனுக்கு. தன் விருப்பங்கள் நிறைவேறு வது தான் விரும்பிய அளவு சுலபமல்ல என்பது ரத்தினத் தின் ஐத்து வருஷ தாம்பத்திய வாழ்க்கையின் அநுபவம். ஆனல், இன்னும் ரத்தினத்திற்கு, 'அப்படி ஆகி இருந் தாலோ, இப்படி ஆகி இருந்தாலோ' என்று எண்ண முடியாத அளவு நிராசை ஆகிவிடவில்லை.

ரத்தினம் வேலை முடிந்து அலுத்து வீடு வரும்போது வாணியோ இந்துவின் அகத்தில் அரட்டை அடித்து கொண்டு உட்கார்ந்திருப்பாள். ரத்தினம் வந்த பிறகு ஓடிப் போய், பிறகு காபி தயாரிக்க வேண்டும். வாணி காபி போடுவதற்குள் ரத்தினத்தை அழைப்பதற்கு யாராவது வந்து விடுவார்கள். எவ்வளவோ தடவை அவன் ஒன்றையும் சாப்பிடாமல் அப்படியே சென்றுவிட வேண்டி வரும். அப்புறம் கொஞ்ச நாழிகை, 'ஐயோ,

சீக்கிரம் காபி பலகாரம் தயாரித்து வைத்து இருந்திருக்க லாகாதா?' என்று வாணி உண்மையாக வருந்துவாள். ஆனால் கொஞ்ச நேரம் மட்டுந்தான் அந்த வருத்தம். மறு நாள் பழையபடி ரத்தினத்தின் துணிமணி முதலியன போட்டவை போட்ட வாக்கில்தான்-அவனுக்கு வேண்டிய அளவு துணிமணிகள் இருந்தும் அவனுக்கு அவசிய மானபோது ஒரு 'டை' கூடக் கிடைப்பது சிரமம் ஆகி விடும். கல்யாணம் ஆன புதிதில் ரத்தினத்திற்குப் புது மண வாழ்க்கையின் கோலாகலத்தில் வாணியின் இந்தக் குறை பாடுகள் ஒன்றும் தெரியாமல் போனாலும், நாட்கள் செல்லச் செல்ல அவனுக்கு, 'வாணி ஏன் இப்படி இருக்கிறாள்?' என்பது தோன்றாமல் இருக்கவில்லை. ஆனால் அவளுடைய பச்சாதாபத்துடன் கூடிய முகத்தையும், ஜலம் ததும்பும் கண்களையும் பார்க்கும்போது அவனுக்கு ஏதும் சொல்வதற்குத் தோன்றாமல், அவளைச் சமாதானம் செய்து, சிரிக்கவைத்துச் சிரித்து மகிழ்வான். "இனிமேல் இப்படிச் செய்யாதே" என்று சொல்லிக் கொஞ்சம் கோபித்துக்கொண்டு வாணிக்குப் புத்தி கற்பிக்கவேண்டு மென்ற அவன் முயற்சிகள் முழுதும் இந்த மாதிரியே முடிவுறும்.

நாட்கள் கழியக் கழிய, அவர்கள் நட்பு வளர வளர, வாணியின் இத்தகைய அசட்டுத்தனங்கள் இந்துவுக்குத் தெரியாமல் இல்லை: அவளுக்குத் தெரியாமல் போனாலும் இவ்விதம் ஏதாவது நடந்தபோதெல்லாம் வாணியே இந்து விடம் சொல்லிக் கொள்வாள்; தன் அறியாமையைத் தூற்றிக்கொள்வாள். முதலில் இந்து அவளைச் சமாதானப் படுத்தி வந்தாள். ஆனால், அவள் சுபாவமே இப்படி என்பது தெரிந்த பிறகு, இந்துவுக்கு, 'ரத்தினத்தைப் போன்ற கணவனைப் படைத்தும் அவனைச் சுகமாக வைத்து கொள்ளத் தெரியவில்லையே இந்த வாணிக்கு!' என்ற ஆதங்கம் ஏற்பட்டது; 'என் கணவனாக இருந்திருந்தால், நான் எப்படி நடந்துகொண் டிருப்பேன்?' என்ற ஒரு பெருமூச்சு. மறுபடியும், 'தூ, என்ன பைத்தியக்கார யோசனை?' என்று மோடம் மறைத்தது போன்ற இளநகை.

3

ஒரு நாள் காலையில் பதினொரு மணி இருக்கும், இந்து சமைத்துக்கொண்டிருந்தபோது வாணி வந்தாள். இந்துவின் வீட்டுக்கு வாணி வருவதற்குச் சமயா சமயங்களின் கட்டு திட்டம் ஒன்றும் இல்லை. காலையில் எழுந்தது முதல் இரவு படுக்கும் வரைக்கும் அந்த வீட்டிலிருந்து இந்த வீட்டிற்கும், இந்த வீட்டிலிருந்து அந்த வீட்டிற்குமாக ஓடியாடுவதுதான் அவளுடைய வழக்கம். அவள் வந்து போவதில் விசேஷம் ஒன்றும் இல்லை. ஆனல் அன்றைக்கு வாணியின் வரவு இந்துவின் அமைதியான வாழ்க்கைப் பிரவாகத்தை அல்லோல கல்லோலம் ஆக்குவதற்குக் காரணமாயிற்று. வாணி வந்ததற்கு முக்கியமான காரணம் ஒன்றும் இல்லை. ரசத்திற்குப் பருப்பு வேகப் போட்டு விட்டு, அது வேகும் வரைக்கும் சும்மா உட்கார்ந்திருக்க வேண்டுமே என்று இந்துவின் அகத்திற்கு அரட்டை அடிக்க வந்தாள்.

மத்தியானம் ரொம்பக் காரியம் இருந்ததால், ரத்தினம் சீக்கிரம் சாப்பாட்டை முடித்துக்கொண்டு போக வேண்டுமென்று அன்றைக்குச் சீக்கிரமே வீட்டிற்கு வந்தான். வீட்டில் வாணியைக் காணவில்லை. இரண்டொரு தடவைகள் கூப்பிட்டான். பதிலைக் காணோம். கடைசியில் புறக்கடையில் இருக்கிறளோ என்னவோ என்று வந்து பார்க்கையில் இந்துவின் அகத்திலிருந்து வாணியின் பேச்சுக் குரல் கேட்டது. காலை வேளையில் செய்ய வேண்டிய வேலையை விட்டு, அடுத்த வீட்டில் போய்க் காலம் கழிக்கிறளே என்று கொஞ்சம் கோபம் வந்தது. "வாணீ!" என்று சற்று உரக்கவே கூப்பிட்டான். பேச்சுச் சம்பிரமத்தில் அவளுக்கு அது கேட்கவில்லை. அவள் பேச்சுச் சத்தத்தில் இந்துவுக்கும் கேட்கவில்லை. ஆகவே பேச்சில் மூழ்கிக் கிடந்த அவர்களுக்கு, ரத்தினம் புறக்கடைப் புறம் வேலியின் அருகில் வந்து மறுபடியும் இரைந்து "வாணீ" என்றபோதுதான் கேட்டது. உடனே அவர்களுக்குத் திகிலும் ஏற்பட்டது. வாணியோ, "ஐயோ, இந்து, இன்னும் சமையலே ஆகவில்லையே!" என்று அவசரமாக வெளியே வந்தாள். இந்துவும் அவளைப் பின்

தொடர்ந்து கதவு அருகில் வரும்போது, வேலியின் பக்கம் நின்றிருந்த ரத்தினத்தைப் பார்த்தாள். அவன் முகம் சோர்ந்திருந்தது. வாணி தன் கணவனைப் பார்த்து, "எத்தனை நாழிகையாய் விட்டது, நான் வந்து? இப்பொழுதே மறுபடியும் ஆஸ்பத்திரிக்குப் போகவேண்டுமா?" என்று கேட்டுக் கொண் டிருந்தாள். இந்து அவள் வார்த்தைகளைச் செவியுற்று ரத்தினத்திற்கு மறுபடியும் உபவாச விரதந்தான் என்று அறிந்து கொண்டாள். ரத்தினத்திற்கு என்னவோ முன்பு பலதடவை இத்தகைய அனுபவங்கள் ஆகி இருந்தாலுங்கூட இந்துவுக்கு அப்போதுதான் அதன் பிரத்தியக்ஷ அநுபவம். 'நான் வாணியின் பொழுதைப் பாழும் அரட்டையில் கழித்ததற்கு இலக்கு ஆனேனே' என்று ரொம்பவும் அலுத்துக் கொண்டாள். கதவு இடுக்கின் வழியாகக் களைத்துச் சோர்ந்துபோயிருக்கும் ரத்தினத்தைப் பார்க்கையில் அவள் உள்ளத்தில் இவ்வித எண்ணங்கள் தோன்றின. மேலும், என்றும் இல்லாத ஏது ஏதோ சிந்தனைகள் ஒன்றன் பின் ஒன்ருகத் தோன்றத் தொடங்கின. அவைகளைத் தொடர்ந்தாற்போல, நீண்டதொரு பெரு மூச்சும் வெளிப்பட்டது. கண்ணீர் பிரவகிக்க இவ்வளவே போதும். "ஐயோ, கடவுளே!" என்று பொங்கி வந்த அழுகையைப் புடைவைத் தலைப்பால் துடைத்தவாறு உள்ளே வந்தாள். அந்த வேளைக்கு வாணியும் ரத்தினமும் தங்கள் வீட்டுக் கூடத்தை அடைந்திருந்தனர்.

4

இந்து உள்ளே வந்தாள். ஒரே ஒரு விநாடிக்கு முன் அவளுடைய வாழ்க்கையில் அமைதியிருந்தது; சந்தோஷம் இருந்தது; ஏதோ ஒருவிதத் திருப்தியும் இருந்தது. மேலும் தன் வீடு, அதன் அழகு, பரிசுத்தம் இவைகளைக் கண்டு பெருமையும் இருந்தது. ஏனோ அந்த ஒரு விநாடிக்கு முன் இருந்த அந்த ஆனந்தம், அமைதி, திருப்தி எல்லாம் இந்து உள்ளே வரும்பொழுது மாயமாகி விட்டன. அவற்றுக்குப் பதிலாக, அந்த இடத்தில் முன்பு என்றும் இந்துவைப் பாதிக்காத கேள்விகள் வந்து இடம் பெற்றன. 'வாணிக்கு—எதன் மதிப்பையும் உணராத வாணிக்கு—எல்லாவற்றை

யும் அளித்த கடவுள், தன் வாழ்க்கையை மாத்திரம் ஏன் இவ்விதம் அந்தகார மயமாகச் செய்தான்?' என்பது எல்லாவற்றையும்விட மிகப் பெரிய கேள்வியாக அவளுக்குத் தோன்றிற்று. எவ்வளவு யோசித்தும் பதில் கிடைக்காத இந்தக் கேள்விகளுக்கு உரிய பதிலைக் கண்டுபிடிப்பதிலேயே லயித்திருந்த இந்து, அன்று சாயந்திரம் மறுபடியும் வாணி வரும் வரைக்கும் உட்கார்ந்த இடத்தை விட்டு எழுந்திருக்கவில்லை. செய்து வைத்திருந்த சமையலும் அப்படியே கிடந்தது.

வாணியின் பரிதாபகரமான முகத்தைக் கண்டு, முன்பு இரக்கப்பட்டுக் கொண்டிருந்த இந்துவுக்கு அன்று அவளுடைய அழுமூஞ்சியைக் கண்டு சந்தோஷமே ஏற்பட்டது. 'கடவுள் தன் ஒருத்திக்கு என்றே துயரத்தை ஒதுக்கிவைக்க வேண்டுமா? வாணிக்கும் அதன் ருசி கொஞ்சம் தெரியட்டும்' என்று மனத்திற்குள்ளாகவே எண்ணினாள். தான் அவ்வாறு விரும்புவது தன்னலத் தன்மை யென்றும், தன் துயரத்திற்குக் காரண கர்த்தா வாணி அல்லவென்றும் இந்து அறிந்திருந்தாளானாலுங்கூட வாணியின் வாடிய முகம் அவள் உள்ளத்தில் கருணையை உண்டாக்கவில்லை. வாணி அழுதுகொண்டே, "என்றைக்கும் ஒன்றும் சொல்லாதவர் இன்றைக்குக் கோபித்துக் கொண்டு போய்விட்டார்" என்று சொல்லும்போது இந்துவுக்கு ஒருவித ஆனந்தமே உண்டாயிற்று. ஆனால், மறுகணமே என்றைக்கும் அத்தகைய எண்ணங்களுக்கு இடம் தந்திராத இந்துவின் உள்ளம் இவ்விதம் சந்தோஷப்படுவது தவறு என்று எச்சரிக்கை கொடுத்தபோது அவளுக்கே தன் நீச எண்ணத்தைக் கண்டு வெட்கமும் உண்டாயிற்று. அந்த எண்ணத்துக்கு இடம் அளித்த பாவத்திற்குப் பிராயச்சித்தமாக வாணியைச் சமாதானப்படுத்தி அவள் காரியத்தில் தானும் உதவி புரியலானாள்.

எல்லாக் காரியங்களையும் முடித்துக்கொண்டு இந்திரா வீட்டிற்கு வருவதற்கும் ரத்தினம் தன் வீட்டுக்கு வருவதற்கும் சரியாக இருந்தது. அவனுக்கும் மத்தியானத்திலிருந்து நிம்மதி கிடையாது. என்றைக்கும் வாணி

யைக் கோபித்துக் கொண்டவன் அல்ல அவன். வெகு நாட்களாகத் தடுத்துக் கொண்டிருந்த அவன் பொறுமை யின் எல்லை அன்று பசியின் வேகத்தில் தடுக்கமாட்டாமல் கோபத்திற்கு இடம் கொடுத்தது. கோபம் இறங்க இறங்க அவனுக்குத் தன் நடத்தையால் வெட்கம் ஏற்பட்டது. வாணி எவ்வளவு மனம் நொந்து கொண்டாளோ என்று 'கிளப்பு'க்குக்கூடப் போகாமல் வீட்டிற்கே நேராக வந் தான். ஆனால், அவன் எண்ணிக் கொண்டிருந்தது போல், வாணி விளக்குக்கூட ஏற்றாமல் அழுதுகொண்டு படுத் திருக்கவில்லை. அவன் வீடு இந்துவின் வேலைத்திறனால் நூதன ரூபந் தாங்கி, விளக்கின் வெளிச்சத்தில் பிரகாசித் துக் கொண்டிருந்தது. சிரித்த முகத்துடன் வாணி அவனுடைய வரவையே எதிர்பார்த்தவளாய், சமையல் செய்துவிட்டுக் காத்திருந்தாள்.

ஆனால், இவ்வளவையும் பார்த்து அவனுக்கு உண் டான ஆச்சரியமும் ஆனந்தமும் கேவலம் ஒரே ஒரு வினாடிப் பொழுது மாத்திரந்தான். வாணி பரிமாறிக் கொண்டிருந்த சமையலைச் சாப்பிடும்போதே அடுத்த வீட்டு இந்துவின் கைத்திறன் அது என்பது அவனுக்குத் தெரியாமல் போகவில்லை. தெரிந்ததும் முன்போலவே, 'என் வாணியும் இது போலவே வேலையில் திறமைசாலியாக விருந்திருந்தால்—' என்று நினைப்பதற்கு மாறாகத் தான் என்றைக்கும் பார்த்திருக்காத இந்துவின் அழகைக் கற் பனை செய்ய ஆரம்பித்தான். அவளை மெச்ச வைக்க வேண்டுமென்று அன்று வாணி பேசிய பேச்சு முழுதும் அவனுக்கு வெகு தொலைவிலிருந்து கேட்கிறதைப்போல் இருந்தது. அவனுடைய அந்நிய மனப்பான்மையைக் கண்டு வாணி, 'காலையிலிருந்து சாப்பாடு இல்லாததால் ரொம்பவும் களைத்துப் போயிருக்கிறார்' என்று மனத்திற் குள்ளேயே புலம்பினாள். "இனிமேல் என்றைக்கும் இப்படி ஆவதற்கு இடம் கொடுப்பதில்லை" என்று பிரதிக்ஞை செய்துகொண்டாள். முன்பு எவ்வளவோ தடவை வாணி இதைப்போலப் பிரதிக்ஞை செய்து கொண் டிருந்தாலும் அவை என்றும் நிறைவேறவில்லை. ஆனால், இந்தத் தடவை தினமும் விடிந்தவுடனே காரியத்தில் இந்து

உதவி புரிந்து வந்ததால், வாணிக்குப் பிரதிக்ஞையை நிறைவேற்றுவது சிரமமாகத் தோன்றவில்லை. பார்க்கப் போனால் உண்மையாக இந்துதான் வாணியின் பிரதிக்ஞையை நிறைவேற்றிக் கொண்டிருந்தாள்.

5

சிந்தனைகளுக்கு இடம் கொடுக்கக்கூடாதென்று இந்து தன் ஓய்வு நேரத்தை வீணாக்காமல் வாணியின் குடித்தனக் காரியங்களைக் கவனிக்க ஆரம்பித்தது முதல் அவர்கள் குடித்தன நிர்வாகம் சுமுகமாக நடைபெற ஆரம்பித்தது. தன் வீட்டில் ஏற்பட்ட இந்த மாறுபாட்டை ரத்தினம் உணராமல் இல்லை. கவனித்து வருகையில் தான் எப்போதும் பார்த்திராத இந்துவின் காரியத் திறமையைக் கண்டு மேலும் மெச்சலானான். வீட்டின் ஒவ்வொரு பொருளும் இருக்கும் ஒழுங்கைக் கண்டு அவனுக்கு இந்துவின் நினைவு உண்டாகும். அவளை அவன் நேருக்கு நேராகப் பார்த்திராவிடினும் அவள் சொரூபத்தைக் கற்பனை செய்துகொண் டிருந்தான்: அவனுடைய அந்தக் கற்பனை இந்துவும் ஆதர்சப் பெண்ணாகவே இருந்தாள். உத்தம கிருஹிணியாக இருப்பதற்கு அவசியமான எல்லாச் சற்குணங்களையும் பெற்றுள்ள அவளுக்கு அபூர்வ சௌந்தரியமும் இருந்தது. ஆனால், ஏனோ இவ்வளவு சௌந்தரியத்துடன் சித்திரித்த அந்த இந்துவின் முகத்தில் சிரிப்பு இல்லை. அவள் கண்களில் ஆனந்தம் இல்லை. ஒருகால் எப்பொழுது பார்த்தாலும் சிரித்த முகத்துடன் இருக்கும் வாணியைப் பார்த்துக் கொண்டிருப்பதனாலோ என்னவோ, அவளைவிட எல்லா விஷயத்திலும் மாறுபாடுடன் அமைந்திருக்கும் இந்துவின் முகத்தில் சிரிப்பு இருக்கக் கூடாதென்று அவ்விதம் சித்திரித்தான் போலும்.

முதல் முதலில் அவள் காரியங்களைக் கண்டு மெச்சி, இவ்வளவு திறமைசாலியான இந்து எப்படி இருப்பாள் என்று ஒருவிதக் குதூகலத்துடன் அவள் ஓவியத்தை மனத்திலே சித்திரிக்கத் துவங்கிய ரத்தினத்திற்கு வர வர

எப்போது பார்த்தாலும் அவளைக் கற்பனையில் சித்திரிப் பதே வழக்கமாகிவிட்டது. ஒவ்வொரு தடவை அதிகமான வேலையின் நடுவில்கூட அவனுக்கு இந்துவைப் பற்றிய சிந்தனை தோன்றும். தான் முயற்சிக்காவிட்டாலும் தனக் குத்தானே ஏற்படும் அவளைப் பற்றிய சிந்தனைச் சித்திரங் களால் அவனுக்கே வியப்பு உண்டாகும். இது எத்தகைய பிராந்தி என்று கொஞ்சம் கோபமும் வரும். ஆனால், இவை யெல்லாம் வாணியின் பிரதிக்ஞைகளைப்போல் கொஞ்ச நாழிகைக்குத்தான். பிறருடைய அசாத்தியமான நோய் களைத் தன் ஔஷத பலத்தால் குணமாக்கிக் கொண்டிருந்த ரத்தினத்திற்குக் கடைசியில் இந்துவை மனத் திரையில் சித்திரிக்கும் நோயிலிருந்து விடுபடுவது அசாத்திய மென்று தோன்றிற்று. என்னென்ன செய்தும் தன் மனோ ராஜ்யத்திலிருந்து அழியாத இந்துவின் கற்பனைச் சொரூ பத்தை முழுதும் அழித்து விடுவதற்கு அவனுக்குக் கடைசியில் தோன்றிய ஓரே ஒரு உபாயம் எது வென்றால், அவளைப் பிரத்தியக்ஷமாகப் பார்த்துவிடுவதுதான். தான் சித்திரித்த அளவு அழகாக இல்லாத அவளைச் சுயமாகப் பார்த்தால் தன் பிராந்தி போய்விடுமென்று அவனுக்குத் தோன்றிற்று.

ரத்தினத்திற்கு இந்துவைப் பிரத்தியக்ஷமாகப் பார்ப் பது ஒன்றும் சிரமமாக இருக்கவில்லை. தான் வீட்டில் இல்லாத சமயத்தில் எல்லாம் அவள் தன் வீட்டிற்கு வரு கிறாள் என்பது அவன் அறிந்த விஷயம். எதிர்பாராமல் தான் வீட்டிற்கு வந்தால் அவளைப் பார்க்கலாம் என்றும் அவன் அறிவான். அதனாலேதான் ஒரு நாள் சாயந்திரம் வீட்டிற்கு வருவதற்கு நாழிகையாகும் என்று சொல்லி விட்டுப் போனவன் மணி மூன்று அடிப்பதற்குள்ளாகவே வீட்டிற்கு வந்தான். தான் நினைத்தபடியே இந்து தன் வீடடில் இருந்தாள் என்பதை வாசற்படியை மிதிக்கும் போதே வீட்டினுள் கேட்கும் பேச்சுக் குரலிலிருந்து தெரிந்துகொண்டான். நிதானமாக உள்ளே போனான்.

கூடத்தில் வாசற்புறம் முதுகைத் திருப்பிக் கொண்டு மேஜைமீது விழுந்திருந்த ஒரு மூட்டை துணிமணிகளை

'இஸ்திரி' செய்து மடித்து வைத்துக் கொண்டு நின்றிருந்தாள் இந்து. வாணி அதே மேஜையின் ஒரு நுனியில் கால்களைத் தொங்கவிட்டுக்கொண்டு உட்கார்ந்தவளாய், பேச்சுச் சுவாரஸ்யத்தில் மெய்ம் மறந்திருந்தாள்.

கதவு அருகிலேயே ஐந்தாறு நிமிஷங்களாக ரத்தினம் நின்றிருந்தாலும் இருவருக்கும் அவன் வந்தது தெரியாது. சொல்மாரி பொழிந்து கொண்டிருந்த தன் மனைவியையும், காரியத்தில் கண்ணுகவிருந்தாலும் அவளுக்குச் சமயோசிதமாகப் பதில் அளித்துக்கொண்டிருந்த இந்துவையும் ரத்தினம் சேர்த்துப் பார்த்தான். அவர்கள் இருவருக்கும் இடையில் உள்ள அஜகஜாந்திர வித்தியாசத்தையும் கண்டு, இந்துவின் கற்பனைச் சித்திரத்தைச் சம்பூர்ணமாக அழித்துவிட வேண்டுமென்று வந்தவன், புதிதாகச் சித்திரிக்கத் துவங்கினன். ஆமாம், அவனுடைய கற்பனை இந்துவின் அபாரமான சௌந்தரியம் உண்மையான இந்துவிடம் இல்லாவிடினும் அவளுடைய காரியத் திறமையானது அந்தக் குறையை நிறைத்துவிட்டது. ஐந்து, பத்து, பதினைந்து நிமிஷங்கள் ஆனுலும் ரத்தினம் நின்ற விடத்திலிருந்து நகரவில்லை. இதன் நடுவில் வாணி எதற்காகவோ கதவின்புறம் திரும்பினவள் ரத்தினத்தைப் பார்த்து, "என்ன, இவ்வளவு சீக்கிரம்? சினிமாவிற்குப் போவதற்காகவா...?" என்று மேஜைமீதிருந்து இறங்கினுள். அதற்குள்ளாகவே இந்துவுக்கும் ரத்தினம் வந்திருப்பது தெரிந்தது. அவனுடைய எதிர்பாராத வரவினுல் திடுக்கிட்ட அவள் 'சட்' என்று 'இஸ்திரி'ப் பெட்டியைக் கீழே வைத்து விட்டுத் திருப்பினுள். சரி, ரத்தினத்தின் சிந்தனை ஓவியத்தில் குறைவுபட்டிருந்த முகமும் இப்போது முழு வடிவம் அடைந்தது.

திரும்பிய இந்து, கண் கொட்டாமல் தன்னை நோக்கும் ரத்தினத்தைக் கண்டு சங்கோசத்துடன் செய்து கொண்டிருந்த காரியத்தை அவ்வளவோடு நிறுத்திவிட்டுப் புறக்கடைக் கதவைத் தாண்டித் தன் வீட்டிற்கு நடை கட்டினுள். தன்னைச் சினிமாவிற்கு அழைத்துக் கொண்டு போவதற்குத்தான் ரத்தினம் சீக்கிரம்

வந்திருக்கிருன் என்று எண்ணிய வாணி அவனுடன் கேள்வி கேட்கும் மும்முரத்தில் இந்துவை தடுக்கவும் இல்லே.

பிறகு ஒன்றரை மணிநேரம் கழித்து வாணி இந்துவையும் தங்களுடன்கூடச் சினிமாவிற்கு அழைத்துச் செல்வதற்காக அவள் வீட்டிற்குப் போனபொழுது இந்து தலே வலி என்று படுத்திருந்தது என்னவோ நிஜம். ஆனல் அந்தத் தலேவலி வருவதற்குக் காரணம் இந்துவுக்கே தெரியாத ஒரு புதிர் என்பதை வாணி அறியாள். தெரிந்திருந்தாலோ, அவள் சினிமாவிற்குப் புறப்பட்டிருந்த ரத்தினத்தை இந்துவின் வீட்டுக்கு அழைத்து வந்திருக்க மாட்டாள்.

சினிமாவைப் பார்த்தாவாவது இந்துவின் ஓவியம் அழிந்துவிடலாமென்று ரத்தினம், வாணியின் விருப்பம் போல் சினிமாவுக்குக் கிளம்பினன். ஆனல், அதற்குள்ளாகக் குழந்தை உள்ளம் படைத்த வாணி சும்மா இராமல் ரத்தினம் தடுத்துக் கொண்டிருக்கும் பொழுதே, 'இந்துவையும் அழைத்துக் கொண்டு போகலாம்' என்று அவளே அழைத்துவர ஓடினள். வாணி திரும்பி வரும் பொழுது இந்து அவளுடன் கூட இல்லாததைக் கண்டு ரத்தினத்திற்குச் சமாதானம் ஆயிற்று. ஆனல், வாணி வந்து, "இந்துவைக் கொஞ்சம் பார்த்துவிட்டு மருந்து கொடுங்கள்" என்றபொழுது அவனுக்கு வாணியின் குழந்தை மனத்தைக் கண்டு கோபம் வந்தது. "கொஞ்சம் தலே வலித்தால் என்ன? 'ஆஸ்பிரின்' மாத்திரை ஒன்றைக் கொடுத்துவிட்டுச் சீக்கிரம் வா, நேரம் ஆகிவிடுகிறது" என்று கொஞ்சம் கடுமையாகவே சொன்னன். வேறு சமயமாக இருந்திருந்தால் இந்துவைப் பார்த்து, மருந்து கொடுப்பதற்கு அவனுக்கு யாதொரு தடையும் இருந்திருக்காது. பொழுது விடிந்தால் பார்க்கும் மற்ற நோயாளிகளுடன் அவளும் ஒருத்தியாகச் சேர்ந்து விடுவாள்.

ஆனல், அப்போது, இந்துவை மறக்க வேண்டுமென்று முயற்சித்துக் கொண்டிருக்கையில், அவள் வீட்டிற்கே போய் மருந்து கலந்து கொடுக்க வேண்டுமென்று

வற்புறுத்தும் வாணியின் பேச்சைக் கேட்டு அவன் வெறுப்புற்றான். இது அறியாப் பெண்ணும், குழந்தை மனம் படைத்தவளுமான வாணிக்கு எப்படித் தெரியும்? ஒரே பிடிவாதம் பிடித்துக் கடைசியில் ரத்தினத்தை இந்துவின் வீட்டுக்கு இழுத்துச் சென்றாள்.

ஒரே நாளில், கொஞ்ச நேரத்துக்குள் அதுவும் அவளுடைய வீட்டிலேயே நோயாளியின் அவஸ்தையில் இந்துவைத் திரும்பவும் பார்க்கும் சந்தர்ப்பம் வருமென்று ரத்தினம் ஒருபொழுதும் நினைக்கவில்லை. அதிலும் தான் மற்றொரு முறை பார்க்கும்போது அவள் அழுது கொண்டிருப்பதைப் பார்ப்பான் என்று அவன் கனவிலும் நினைத்திருக்கமட்டான். ஆமாம்; இந்து அழுதுகொண்டிருந்தாள். கேவிக் கேவிச் சிறு குழந்தையைப்போல் அழுதுகொண்டிருந்தாள். தலைவலியால் தான் அழவில்லை என்று அறிந்திருந்தாலும், அழுவதற்குக் காரணம் எது வென்பது அவளே அறியமாட்டாமல் அவ்வளவு மர்மமாக இருந்தது.

வாணி முதல் தடவை வந்து போன பிறகு அவளுடைய அழுகை ஆரம்பமாயிற்று. தான் அழுதாலும், செத்தாலும் கேட்பவர் யாரும் இல்லையென்ற தைரியத்தினால் தான் அழுகையும் தங்கு தடையின்றி வந்தது. அவள் நினைத்தமாதிரி வாணி சினிமாவுக்குப் போகாமல் ரத்தினத்தை அழைத்துக் கொண்டு தன் வீட்டிற்கு வருவாள் என்று அவளுக்கு எப்படித் தெரியும்?

அவள் அழுகைக்கு வாணிக்கும் ரத்தினத்திற்கும் தோன்றின ஒரே ஒரு காரணம், அவளுடைய அசாத்தியத் தலை வலி ஒன்று தான். எவ்வளவு அகஸ்மாத்தாக இந்துவின் அழுகை ஆரம்பமாயிற்றோ அவ்வளவு சீக்கிரமாகவே ரத்தினத்தையும் வாணியையும் கண்டதும் நின்றுவிட்டது. தான் சிறு குழந்தையைப்போல் அழுதுகொண்டிருந்ததை அவர்கள் பார்த்து விட்டார்களே என்று அவளுக்கு வெட்கமாகப் போய் விட்டது. மேலும் தனக்குச் சொல்லாமல் கொள்ளாமலேயே வாணி ரத்தினத்தை அழைத்துக் கொண்டு வந்து விட்டாளே என்று வேறு. ரத்தினத்

திற்கும் அப்படித்தான். இந்துவை—அழுதுகொண்டிருக்கும் இந்துவை — பார்த்து உள்ளத்தின் மற்ற யோசனைகள் எல்லாம் மாயமாகிச் சிறு குழந்தைகளைச் சமாதானப் படுத்துவதுபோல், அவளையும் சமாதானப்படுத்த வேண்டுமென்று தோன்றிற்று. ஆனால், அருகிலேயே இருந்த வாணியின் பிரசன்னமும் ஐந்தாறு வருஷமாக நோயாளிகளைப் பார்த்துவந்த அவனுடைய அப்பியாச பலமும் சேர்ந்தே அவனைக் காப்பாற்றின. உள்ளத்தினுள் சிந்தனைகளின் யுத்தமே நடந்துகொண்டிருந்தாலும் வெளிக்குக் கம்பீரமாக அவள் தலையைத் தொட்டுப் பார்த்தான். பிறகு வாணியைப் பார்த்து, "ஜுரமும் இருக்கு" என்றான். அதற்கு வாணி, "நீங்கள் மருந்து கலந்து கொடுத்துவிட்டுச் சினிமாவுக்குப் போங்கள். நான் இங்கேயே இருக்கிறேன்" என்று அங்கேயே உட்கார்ந்துவிட்டாள். இந்து தடுத்ததையும் லக்ஷ்யம் செய்யவில்லை. ரத்தினம் தனியாகவே சினிமாவுக்குப் போனான். ஆனால், அன்று இரவு வாணி, "நீங்கள் பார்த்துவந்த படம் என்ன?" என்று கேட்டிருந்தால் "அழுது கொண்டிருந்த இந்துவின் முகம்" என்றுதான் அவன் சொல்லவேண்டி இருந்திருக்கும்.

6

அன்றைத் தலைவலி இந்துவுக்கும் ரத்தினத்திற்கும் பரிசயம் ஏற்படுவதற்கு அஸ்திவாரமாயிற்று. முதல் முதலில் ரத்தினத்தின் எதிரில் போகவே வெட்கப்பட்டுக் கொண்டிருந்த இந்து, இப்போது அவனுடன் சங்கோசமின்றிப் பேசிக்கொண்டிருந்தாள். அவ்விருவர்களுடன் சினிமாவிற்குப் போய்வருவதுங்கூட அவள் காரியங்களில் ஒன்றிப்போயிற்று. இவ்வாறு அடுத்த வீட்டுக்குக் குடி வந்து ஆறுமாசங்கள் நிறைவதற்குமுன் இந்துவின் ஏகாந்த வாழ்க்கை முற்றிலும் மாறுதல் அடைந்தது. அவ்வளவு தான். அதனால் அவளுக்கு அதிக அமைதியோ சுகமோ கிட்டவில்லை. சொந்த வீட்டிற்கு முன்னர் வந்தபோது அது தன் வீடு, தான் சுதந்தரமாக இருக்கிறாள் என்று இருந்த அபிமானமும் திருப்தியும் இப்போது இருக்கவில்லை. நான் சுகமாகவிருக்கிறேன்-இருப்பேன் என்றிருந்த அவள்

எண்ணம் அதற்குள்ளாகவே மாறிவிட்டது. வாணி, ரத்தினம் ஆகியவர்களின் குடித்தனத்தைப் பார்த்த அன்று முதல் தன் வாழ்விலும் பெரியதொரு குறை இருக்கிறதென்று அறிந்துகொண்டாள். முதலில் தெளிவு இல்லாமல் உதித்த இந்த எண்ணம் வாணி, ரத்தினம் ஆகியவர்களுடன் பழகப் பழகத் தளிர்த்துக்கொண்டே வந்தது. மேலும் ரத்தினமும் சதா காலமும் இவளைப் பற்றியே யோசித்துக்கொண் டிருந்ததனுலோ என்னவோ, அவள் மனசு தன் விருப்பத்திற்கு மாருக ரத்தினத்தின் மீது இச்சைகொள்ள வாரம்பித்தது

இந்து, ரத்தினம் ஆகிய இருவர் மனத்திலும் அவர்கள் அறியாவண்ணம் இவ்வித எண்ணங்கள் தோன்றி முளைத்துக்கொண் டிருக்கையில் வாணி திடீரென்று பிறந்த கம் போகவேண்டிவந்தது. கோடையில் ஒரு மாதம் 'லீவ்' வாங்கிக்கொண்டு தம்பதிகள் இருவரும் ஒன்ருகச் செல்வ தென்று முன்னரே தீர்மானம் ஆகி இருந்தது. ஆனல் திடீரென்று அவள் தாயாருக்கு நோய் கண்டிருக்கிற தென்று அவள் தமையன் அவளை அழைத்துச் செல்வதற்கு வந்துவிட்டான். ரத்தினத்திற்கு அப்போது 'லீவ்' கிடைப்பதாகத் தோன்றவில்லை. ஆகையால் வாணி தனியே தன் தமையனுடன் புறப்பட்டுப் போனுள்.

அசட்டுப்பெண்! போகும்போது இந்துவிடம் வந்து, "இந்து, அம்மாவுக்கு ஜுரம். குணமானவுடன் வந்து விடுகிறேன். நான் வரும்வரைக்கும் கொஞ்சம் எங்கள் வீட்டையும் கவனித்துக்கொள்" என்ருள். ரத்தினமும் அங்கேயே நின்றுகொண் டிருந்தான். இந்து வேறு ஒன்றும் சொல்லமாட்டாமல், "ஊம்" என்ருள். ஆனல் வாணியுடன், "ஊம்" என்றது எவ்வளவோ அவ்வளவு தான். அவள் புறப்பட்டுப் போனபிறகு இந்து அந்தப் பக்கமே போகவில்லை. அவள் சுபாவமாகவே பாவத்தைக் கண்டால் நடுங்குபவள். சமூகத்தின் கட்டுதிட்டங்களையே கடவுளின் நியமங்கள் என்று நம்பி வளர்ந்தவள். அவளுக்குத் தன் இச்சை ரத்தினத்தின்பால் திரும்பி இருக் கிறது என்ற அறிவு ஏற்பட்டதுமே, திகில் உண்டாயிற்று. வாணி புறப்பட்டுப்போன பிறகோ அவளுடைய திகில்

ஒன்றுக்குப் பத்துமடங்காக அதிகரிக்கலாயிற்று. 'சாந்தமான வாழ்க்கைப்பிரவாகம் கலங்கிப் போகும்படியான யோசனைகளுக்கு என் உள்ளத்தில் எப்படி இடம் தந்தேன்?' என்ற கேள்வி சதா அவளைப் பீடித்தது. ஆனல் அந்த யோசனையுடன் கூடவே ரத்தினத்தின் உருவமும் அவள் இதயத்தில்பதிந்துவிட்டிருந்தது. வாணியின்கணவன் பால், தான் அன்பு செலுத்துவது அநுசிதம் என்று அவள் அறிந்திருந்தாலும் அந்தவிஷயத்தில் அவள் ஒன்றும் செய்ய மாட்டாதவளாக இருந்தாள். அவன்பால் அன்பு செலுத்தாமலிருப்பது அவள் சக்திக்கு மீறின காரியமாக இருந்தது. தன்னுடைய இந்த அநுசிதமான பிரேமை ரத்தினத்திற்கு எங்கே தெரிந்துவிடுமோ என்ற பயத்தினல்தான் அவள் வாணிபுறப்பட்டுப்போனபிறகு அந்தப்பக்கங்கூடப் போகவில்லை. புறக்கடையில் இருந்த புஷ்பச்செடிகளைக் கூடக் கவனிக்காமல் விட்டுவிட்டாள். தான் அங்கே இருக்கும் சமயத்தில் அடுத்த வீட்டு முற்றத்தில்ரத்தினத்தைச் சந்திக்க நேரிடலாம் என்ற பயமே இதற்குக் காரணம்.

இப்பொழுதோ எனில் பொழுது போகாத நாழிகையைக் கழிப்பதற்கு இந்துவிற்கு எஞ்சிய ஒரேஒரு சாதனம் என்னவென்றல், கற்பனை லோகத்தில் பகற் கனவுகளைப் பிணைப்பதும், என்னவானலும் இது முழுவதும் கனவு தானே என்று கண்ணீர் பெருக்குவதுமே.

வாணி இருந்தபொழுது தினந்தோறும் இந்துவைப் பார்த்துக்கொண்டிருந்த ரத்தினத்திற்கு இப்பொழுது அவர்கள் இருவரும் சேர்ந்து இல்லாமற் போனமாதிரி ஆனதால் ரொம்பக் கஷ்டமாகப் போயிற்று. தினந்தோறும் இந்து அவர்கள் அகத்திற்குப் போய் வந்துகொண்டிருந்தபொழுது கொஞ்சம் கொஞ்சமாக அவன் இதயத்தை ஆக்கிரமித்துக் கொண்டிருந்தாள் என்ற அறிவு உண்டானது, அவள் கட்டோடு அந்தப்புறம் போவதை நிறுத்தின பொழுதுதான். அப்பொழுது அவனுக்கும் அவள் தன் வீட்டிற்கு வராமல் இருப்பது நன்மைதான் என்று தோன்றினலும் சபலம் மாத்திரம் அவள் தரிசனத்திற்காகத் தவித்தது.

வாணி, புறப்பட்டுச் சென்ற பிறகு அவனுக்கு 'ஓட்டலில்' சாப்பாடு; கிளப்பில் வாசம். வீட்டிற்கு வரவேண்டியது எதற்கு என்றால் உடைமாற்றிக் கொள்வதற்கும், இரவு தூங்குவதற்கும். அவ்வளவே. 'கிளப்'பிலிருந்து கடைசி மனிதன் செல்கிற வரைக்கும் அவன் அங்கேயே இருப்பான். பிறகு 'ஓட்டலு'க்குப் போய்ச் சாப்பிட்டு விட்டு, வீடு திரும்பும்பொழுது பதினொருமணி அடித்து விடும். அன்றி, பகலில் எப்பொழுதாவது வீட்டிற்கு வந்தால் புறக்கடைப் பக்கம் போய் இந்து எங்கேயாவது இருக்கிறாளோ என்று பார்க்காமல் இரான்.

வாணி சென்று இரண்டு மாசங்கள் ஆகியுங்கூடச் சமீபத்தில் வருகிற அறிகுறியைக் காணோம். ஒருநாள் காலையில் இந்து ஜலம் இழுத்துக் கொண்டிருந்தபோது ரத்தினம் முற்றத்து வேலியண்டை வந்தான்; வாணி புறப்பட்டுப் போன பிறகு, அதுவே அவர்கள் முதல் தடவை ஒருவரை ஒருவர் பார்த்தது. அவள் இருக்கும் பொழுது சங்கோசமின்றிப் பேசிக்கொண்டிருந்த அவர்களுக்கு அப்பொழுது பேச நா எழவில்லை. ஆனால் இந்து, தான் சும்மா இருந்தால் மனத்தின் பாவம் எங்கே புலப்பட்டு விடுமோ என்ற பயத்தினால், "வாணி என்றைக்கு வருகிறாள்?" என்று கேட்டாள். அவளுடைய அந்தக் கேள்விக்குப் பதில் கொடுப்பதற்குப் பதிலாக ரத்தினம், "ஆரோக்கியமாக இருக்கிறாயா, இந்திரா? இதென்ன, இந்தப் பக்கம் உன்னைக் காணவே காணோம்?" என்றான்.

அதுதான் முதல் தடவையாக அவள் அவன் வாய் மூலம் தன் பெயரைக் கேட்டது. அன்றுவரைக்கும் அவளுக்குத் தன் பெயர் அவ்வளவு அழகானதென்று தெரிந்திருக்க வில்லை.

ரத்தினத்தின் வாயிலிருந்து கிளம்பின மாத்திரத்திலேயே தன் பெயரில் ஏற்பட்ட மாறுதலினால் அவள் முகம் மலர்ந்தது. கண்கள் உள்ளத்தின் ரகசியம் முழுவதையும் வெளிப்படுத்தி அவன் முகத்தை நோக்கின. ரத்தினத்தின் கண்களும் உள்ளத்தின் உணர்ச்சிகளை மூடி வைத்துக் கொண்டிருக்கவில்லை. அவனுடைய அந்தப் பார்வையே பூமியிலிருந்து மேலே பறந்து போயிருந்த

இந்துவைப் புவியில் இறக்கி மறந்திருந்த கடமையை நினைவூட்டிற்று. மறுகணம் இழுத்து வைத்திருந்த ஜலத்தைக் கூட எடுத்துக் கொள்ளாமல் உள்ளே சென்றுவிட்டாள் அவள். ரத்தினம் வெகு நேரம் அங்கேயே நின்றிருந்தும் திரும்பவும் அவள் வெளியே வரவில்லை.

பிறகு ரத்தினம் சேர்ந்தாற்போல் மூன்று நாள் இந்துவை எதிர்பார்த்தும் அவள் தரிசனம் கிடைக்கவில்லை. நான்காம் நாள் தபாலில், இந்துவுக்கு கடிதம் வந்தது. ரத்தினத்தின் எழுத்துப் பரிசயம் உள்ள அவளுக்கு அதை பார்த்ததுமே அவனுடையதென்று தெரிந்து விட்டது. வெகு நாழிகை வரைக்கும் அதை உடைத்துப் பார்க்காமலே கையில் வைத்துக்கொண்டு சிந்தித்த வண்ணம் உட்கார்ந்திருந்தாள். நீண்ட நேரம் கழித்து அவள் அங்கிருந்து எழுந்த பொழுதும் அது உடைக்கப்பட் டிருக்கவில்லை. ஆனால் அவள் கண்ணீரினால் அது நனைந்து போயிருந்தது. எழுந்தவள் அப்படியே அந்தக் கடிதத்தைப் பிடித்த வண்ணம் சமையல் அறைக்குள் சென்றாள். மறுகணம் அது எரிந்துக்கொண் டிருந்தநெருப்பில் சாம்பலாகிவிட்டது.

மற்றும் ஒரு வாரத்திற்கு அப்புறம் வாணி பிறந்தகத்திலிருந்து வந்தாள்; வந்தவள் நேராக இந்துவின் வீட்டிற்குத்தான் போனாள். ஆனால் இந்துவின் வீடு பூட்டிக் கிடந்தது. அதைப் பார்த்த வாணியின் ஆச்சரியத்திற்கு அளவே இல்லை! திக்கற்ற இந்து எங்கே போயிருப்பாள் என்று அவளுக்கு விளங்கவில்லை. எதிர் வீட்டில் விசாரித்தாள். இந்து தன்னை வளர்த்தவர்களின் வீட்டிற்குப் போயிருக்கிறாள் என்பது தெரியவந்தது. இதைக்கேட்டு அவளுக்கு இன்னும் அதிக ஆச்சரியம். தான் என்றைக்கும் அவர்களிடம் போகப்போவதில்லை என்று சொல்லிக்கொண் டிருந்த இந்து, இப்பொழுது ஏன் தானாகவே அங்கே போனாள் என்பதை அறிவது வாணியின் சரள சுபாவத்திற்கு மீறின விஷயம். எப்படியும் அவளுக்கு இந்துவின் வியக்கத்தக்க நடத்தையின் காரணம் தெரியவில்லை. தெரிந்திருந்த ரத்தினமும் அதைச் சொல்வதற்கு முயற்சிக்கவில்லை. கடைசிவரைக்குப் வாணிக்கு அது புதிராகவே இருந்தது.

உள்ளும் புறமும்

பூவாளூர் சுந்தரராமன்

மணி பத்து அடிக்கப் பத்து நிமிஷம் இருந்தது. ஆபீசுக்கு நேரமாகிவிட்டது என்ற ஆத்திரம் ஒரு புறத்திலும், குழம்பை உப்புக் கஷாயமாக்கி வாயில் வைக்க முடியாமல் செய்ததில் ஏற்பட்ட கோபம் மற்ருெரு புறத்திலுமாக, நாராயண ஐயரை நரசிம்மாவதாரமாக மாற்றிவிட்டன. அதனுல் நாயைப்போல் சாதத்தை நாலு புறங்களிலும் குதறிக் குதறி எறிந்துகொண்டே லக்ஷ்மியின் மீது வசைபாட ஆரம்பித்தார்.

"இந்த எழவை எல்லாம் கட்டிக்கொண்டு இன்னும் எத்தனை நாள் அழவேண்டுமோ? கழுத்தறுப்பு! ஒருநாள் சரியாகச் சமைத்தோம், போட்டோம் என்பது உண்டா? ஏதோ சத்திரத்தில் கடன் எழவுக்குப் பொங்கிப் போடுவதுபோல் சமைத்துக் கொட்டுகிறது! கர்மம்! பதினெட்டு முழப் புடவையைக் கட்டிக்கொண்டு 'பொம்மனுட்டி' என்று சொல்லிக் கொள்வதைவிட நாக்கைப் பிடுங்கிக் கொண்டு சாகலாம்!''

லக்ஷ்மிக்கு இந்த மரியாதைகள் வெகு சகஜம்; ஒரு நாளா, இரண்டு நாட்களா? இந்தப் பதினைந்து வருஷத் தாம்பத்ய வாழ்க்கையில் நாராயண ஐயருடைய வசவுகளைக் கேட்டுக் கேட்டு அவளுடைய காதுகள் மரத்துவிட்டன; 'ரோஷம்' வறண்டு, தோல் தழும்பேறிவிட்டது. பொழுது விடிந்து, பொழுது போவதற்குள் அவளுக்கும் அவள் புருஷனுக்கும் எங்கே, எங்கே என்று சண்டை காத்துக் கொண்டிருக்கும். அத்தி பூத்தாற்போல, என்ருவது ஒரு நாள் சண்டை இல்லாமல் இருப்பதுதான் அபூர்வம்.

"நான் என் நாக்கைப் பிடுங்கிக்கொண்டு சாக வேண்டும்? தூங்கும்பொழுது கல்லைத் தூக்கித் தலையில் போட்டுவிடுவதுதானே! வீட்டில் இருக்கிற சாமான்களின் லக்ஷணத்திற்கு சமையல் நளபாகமாகத்தான் இருக்கும்!" என்று 'வழக்கம்போல்' காரணத்துடன் பதில் சொன்னாள் லக்ஷ்மி.

ஈர விறகு; ரேஷன் அரிசி; வேகாத பருப்பு; இப்படி எல்லாம் த்வஜம் கட்டிக்கொண்டு நிற்கையில் அவள் ஒன்றியாளாக எதற்குத்தான் ஈடுகொடுக்க முடியும்?

"ஆடத் தெரியாத தேவடியாளுக்கு முற்றம் கோணலாம்! சமைக்கவும் வராது; கவனமும் கிடையாது. சாமான்களின் மேல் குறை; அதை வாங்கிக் கொண்டு வந்தவன் மீது சாக்கு; தரித்திரம்! பீடை!" என்று பல்லவியை முடித்தார்.

"யார் தரித்திரம், பீடை என்பது ஊராரைக் கேட்டால் தெரிகிறது!" என்றாள் அம்மாள் விடாமல்.

"அடி, மானம் கெட்டவளே! மரியாதை இல்லாமல் எதிர்த்து எதிர்த்து என்னடி பேச்சு?"

"உங்களைக் கட்டிக்கொண்ட பிறகு எனக்கு மானம் எங்கு இருக்கப் போகிறது?" என்றாள் பதற்றமில்லாமல்.

"சட், உங்கக் குடும்ப 'வாசி'ன்னா அது! மூத்தது மோளை; இளையது காளை யின்ன மாதிரி மூத்தவள் வீட்டை விட்டே ஓடிவிட்டாள்; நீ தேவதை! என்னை வீட்டை விட்டுத் துரத்திவிட்டு மறு காரியம் பார்க்கப் போகிறாய்!" என்று படபடப்பாக வார்த்தைகளைக் கொட்டுவதற்கும், வாசலில் 'தபால், லக்ஷ்மி அம்மாள்' என்று தபால்காரன் கூப்பிடுவதற்கும் சரியாக இருந்தது.

2

என்றும் இல்லாத புதுமையாக அன்று லக்ஷ்மியின் பெயருக்கு ஒரு கவர் வந்திருந்தது. விவாகம் ஆகி, புக்ககம் வந்த பிறகு அவளுக்கு எவருமே கடிதம் எழுதினது இல்லை.

கடிதத்தைப் பிரித்துப் பார்த்ததுமே அவளுடைய முகம் வெளுத்து விட்டது. அவளுடைய தமக்கை—ஓடிப் போனவள்தான்!—எழுதியிருந்தாள்.

"யார் எழுதியிருக்கிறார்கள்?" என்று கையை அலம்பிக் கொண்டே கேட்டார் நாராயண ஐயர்.

தொண்டையை விட்டு வார்த்தைகள் வரமாட்டாமல் மென்று விழுங்கிக்கொண்டே, "கோமளம் எழுதியிருக்கிறாள்" என்று மெதுவாகச் சொல்லி நிறுத்தினாள்.

"கோமளமா!" அவருடைய முகத்தில் ஆச்சரியமும் அருவெறுப்பும் புகைய ஆரம்பித்தன. இருவரும் ஒருவரை ஒருவர் பார்த்துக் கொண்டே நின்றனர்.

"என்ன எழுதியிருக்கிறாள்?"

லக்ஷ்மி கடிதத்தை ஓர் ஓட்டத்தில் படித்துவிட்டு, "அவள் 'கஜேந்தர பவனி'ல் இறங்கி இருக்காளாம்; இன்று இரவு பம்பாய்க்குப் புறப்படுகிறாளாம். போவதற்குமுன் என்னைப் பார்க்க வேண்டுமாம்......" என்று இழுத்தாற்போலச் சொன்னாள்.

"அவசியம் போய்ப் பார்த்துவிட்டுவந்து மறு காரியம் பார்!" என்று கோபத்துடன் கத்தினார் ஐயர்.

லக்ஷ்மி வாயைத் திறக்காமல் இருக்கவே, "கடிதம் வந்தது வெளியே தெரிந்தால்கூட மானக் கேடு!" என்று தலையில் அடித்துக்கொண்டார்.

உண்மையாகவே லக்ஷ்மியின் வாழ்க்கைக் கோணமே மாறினதற்குக் கோமளம் வீட்டைவிட்டு ஓடினதுதான் காரணமாக இருந்தது. அவளுடைய 'கன்னி உள்ளத்து' ஆசாபாசங்களைப் பங்கப் படுத்தினதற்கு அதுதான் மூலம். அவளுடைய கண்களைக் கலங்கவைக்க, மனத்தைப் புண்படுத்த,-ஏன், தலையைக் கவிழ்க்கச்செய்ய,-அந்த ஓர் அஸ்திரம் போதும். அதனால் அவள் எவருடனுமே அதிக சௌஜன்யமாகப் பழகுவது இல்லை.

"சரி, ஆபீசுக்கு நேரமாகிறது. நீ என்ன போய்ப் பார்த்துவிட்டுத்தானே வரப்போகிருய்?" என்று கேட்டார் அவர், பார்வையில் சந்தேகம் துலங்க.

"ஆமாம்! போய்......"

"இத்தனை வருஷங்களுக்குப் பிறகா?"

உண்மையில் கோமளத்தைப் பார்க்க லக்ஷ்மிக்கு ஆசை இல்லை; தைரியமும் இல்லை. ஆனுல், நாள் தவருமல் எதைச் சாக்குவைத்துக் கொண்டாவது கச்சம் கட்டிக்கொண்டு வீண் சச்சரவுக்கு வரும் தன் கணவனுக்கு நேர் எதிரிடையாக ஏதாவது சொல்லவேண்டும், செய்யவேண்டும் என்கிற வக்கிர மனேபாவத்தின் எதிரொலிபோல, வேண்டுமென்றே அப்படிச் சொன்னுள்.

"நீயே முன் ஒரு தடவை சொன்னது ஞாபகம் இருக்கிறதா? 'அவள் என்னுடன் பிறந்தவளே யல்ல. இனி அவள் முகாலோபனமே செய்யமாட்டேன்' என்ருயே?"

"அதெல்லாம் சரி. இன்று என்னவோ அவளைப் பார்த்துவிட்டு வரலாம் என்றுதான் இருக்கிறேன்."— லக்ஷ்மியினுடைய குரலில் அழுத்தமும் திருத்தமும் தென்பட்டன.

"மானம்கெட்ட அந்தப் பழிகாரியையா?"

அப்போதுதான் லக்ஷ்மிக்குப் பிடிவாதமும் ஆத்திரமும் வந்துவிட்டன. "யார்தான் பழி இல்லாதவர்கள்? உங்கள் மனிதர்கள் மட்டும் புண்யாத்மாக்களா? சென்ற வாரம் ஜெயிலில் இருக்கும் உங்கள் தமக்கை மாப்பிள்ளையைப் போய் நீங்கள் பார்த்துவிட்டு வரவில்லையா?" முகத்தில் ரோஷம் கொதிக்க உதடுகள் துடித்தன.

நாராயண ஐயர் வாய் அடைத்து அப்படியே நின்றுவிட்டார். லக்ஷ்மியை என்றுமே கெட்டிக்காரி என்று அவர் நினைத்தது இல்லை. தம்முடைய தமக்கையின் மாப்பிள்ளை, பாங்குப் பணத்தைக் கையாடிவிட்டுச் சிறைவாசம் அநுபவிப்பதை இந்தச் சமயத்தில் அவள் எடுத்

துக் காட்டித் தம் முகத்தில் கரியை அப்பிவிடுவாள் என்று அவர் சிறிதும் எதிர்பார்க்கவில்லை.

அதற்குள் கடிகாரம் 'டாண்...டாண்' என்று பத்து அடித்தது.

"எல்லாம் ஒரு சூளைக் கல்லுதானே? நீ என்ன அவளுக்குச் சளைத்தவளா" என்று கருவிக்கொண்டே 'பஸ்'ஸைப் பிடிக்க ஓட்டம் பிடித்தார் ஐயர்.

3

ஒரு காலத்தில்—லக்ஷ்மிக்கு அதிகமாக விவரம் தெரியாத காலத்தில்—அவளுக்கு இந்தப் பிரபஞ்சமே கோமளம் மயமாக இருந்தது. கோமளத்தின் அழகிற்கு முன்னால் வேறு எவரையும் அழகு என்று ஒப்புக்கொள்ளவே மாட்டாள். கோமளத்திற்குப் பிடித்தது லக்ஷ்மிக்கும் பிடித்தது. கோமளத்தின் பக்கத்திலேயே எப்பொழுதும் இருக்க வேண்டும் என்று ஆசை; அவள் சொன்ன எந்தக் காரியத்தையும் தட்டமாட்டாள். அவளுக்காகவே தான் வாழ வேண்டுமென்ற ஒரே எண்ணத்துடன் இருந்த காலம் அது.

'கோவாப்ரேடிவ் ஸ்டோர்ஸி'ல் கிளார்க்காக இருந்த வாஞ்சிநாத ஐயர் தம் சக்திக்குமீறியே கோமளத்தின் விஷயத்தில் செலவு செய்து வந்தார். அவளுடைய பள்ளிக்கூடச் சம்பளம், பாட்டுக்கு 'ட்யூஷன்', பூவேலைக்கு நூல், என்று இப்படி அவருடைய சம்பளத்தில் பெரும் பகுதி போய்விடும். வீட்டில் கோமளத்திற்கு அவ்வளவு அருமை, பெருமை.

கோமளம் படிப்பில் அசாத்திய சூடிகை; பாட்டும் நன்றாக வந்தது. குரலும் மதுரமாக இருந்ததால், ரேடியோவில் அடிக்கடி பாடச் சந்தர்ப்பங்கள் ஏற்பட்டன. பத்திரிகைகள் அவளுடைய பாட்டைப் புகழ்ந்தன.

இந்தப் பாட்டும் புகழுமே அவளுக்குத் தீம்பாக முடிந்தன. அது கள்ளைப்போலப் போதையை ஏற்றிவிட்டுக் கடைசியில் அதபாதாளத்தில் தள்ளிவிட்டது.

ரேடியோவில் அடிக்கடி பாடப்போனதில் எவனே சினிமா நடிகனுடைய சிநேகம் பிடிபட்டது. அது வளர்ந்தது. பிறகு, அது பிரிக்கவும், பிரியவும் முடியாத தொந்தமாக மாறி அம்பலத்திற்கு வந்தது. கடைசியில் கோமளம் அந்தச் சினிமா நடிகனுடன் வீட்டைவிட்டு ஓடியே விட்டாள்.

இந்த மானக்கேடான காரியத்தினல் அவளுடைய வீட்டார் வெளியில் தலை காட்டவே முடியாமல் இருந்த போது லக்ஷ்மி மட்டும் தன் தமக்கையை நினைந்து நினைந்து உருகினள். அந்தப் பிரிவின் பிரமை அவளைவிட்டு நீங்க வெகுகாலம் பிடித்தது.

காலம் மாறிற்று; லக்ஷ்மிக்கு வயது வந்தது. கோமளம் விட்டுப்போன ஆடைகளையும் நகைகளையும் அணிந்துகொண்டு தன்னை அழகு பார்த்துக்கொள்ள ஆரம்பித்தாள். தன் தமக்கையினுடைய மறைவுக்கு அன்று அழுதவள், விவரம் தெரிந்த பிறகு வெட்கித் தலை குனிந்தாள்; அவளை மன்னிக்கக்கூடத் தன் மனத்தில் இடம் வைத்துக் கொண்டாள் இல்லை.

லக்ஷ்மியின் அழகுக்கும் அவள் தகப்பனர் செய்ய விருந்த சீருக்கும் நல்ல இடமாகவே கிடைத்திருக்க வேண்டும். ஆனல் கௌரவம் போன குடும்பத்தின் மாப்பிள்ளையாக வர ஏழையிடத்து நாராயண ஐயரைத் தவிர வேறு எவரும் முன் வரவில்லை. இவ்வாறு தன் பாக்யத்தைப் பாழ்படுத்தின தன் தமக்கையை லக்ஷ்மி தன் மனத்திற்குள் அநேக முறை வைததும் உண்டு.

இவ்வாறு ஆரம்பித்த லக்ஷ்மியின் இல்லற வாழ்க்கை மலர்ப்படுக்கையாக இருக்கவில்லை. நாராயண ஐயருடைய அறுபது ரூபாய்ச் சம்பளத்தில் ஐந்து குழந்தைகளையும் அவற்ருேடு பிறந்த வியாதிகளையும் வைத்துக்கொண்டு போராடினள் அவள். போதாக் குறைக்கு நாராயண ஐயருடைய முன்கோபத்தால், மானக்கேடான ஏச்சுகளுக்கும் பேச்சுகளுக்கும் குறைவு இல்லாமல் இருந்தது.

தினம் தவருமல் வீட்டில் சண்டைகளும் பூசல்களுமாக நாட்கள் ஓடிக்கொண் டிருந்தன.

இத்தனை வருஷங்களாகத் தனக்கோ, தன் பிறந்த வீட்டிற்கோ கோமளத்தி னிடமிருந்து ஒரு கடிதம் வந்ததும் இல்லை. அவளைப் பற்றிய விஷயமே தெரியாமல் இருந்தது. கால வெள்ளத்தில் அந்தச் சம்பவம் மண்ணில் புதைந்த சமாதி என்றே நினைக்கப்பட்டது. ஆனுல் அன்று வந்த கடிதத்தைப் பார்த்ததும் எல்லாம் ஒரே குழப்பமாகி விட்டது. புகைமூட்டம் மறைந்து வெளிப்படும் தூமகேது போல அந்தக் கடிதம் வந்து, புதிது புதிதான அநேக எண்ணங்களை அவள் மனத்தில் ஓடச் செய்தது.

4

கோமளம்! என்ன அழகு, என்ன அழகு! அந்த எடுப்பான மூக்கும், அகன்ற கண்களும், கதுப்பான கன்னங்களும்...கருநாகம் போலத் தொங்கும் அந்தப் பின்னல் ...காற்றில் ஆடும் கொடிபோன்ற அவளுடைய தேகக் கட்டு...அந்தப் புன் சிரிப்பும் கண்ணிமைப்பும் அப்படியே அவளுடைய மனத்தில் நின்று கொண்டிருக்கின்றன!

"எச்சு, எச்சு!" தன்னை அழைக்கும் அந்த வெண்கலத்தொனி...ஹூம், இனிமேல் யார் அவ்வளவு அருமையாகக் கூப்பிடப் போகிருர்கள்? காமவர்த்தினி ராகத்தில் 'என்ன கானு ராம பஜன' கீர்த்தனை, இன்னும் அவளுடைய காதில் ஒலித்துக் கொண்டிருக்கிறது!

அழகு இருந்தது; அருமை பெருமையும் இருந்தன! ஆனுல், பாரம்பர்ய தர்மஞானம் இல்லை! அதனுல் குடும்பத்தின் கௌரவமே நசித்து விட்டது. அவளுடைய பெயர்கூட அவமானத்தின் சின்னமாக அல்லவா நின்று விட்டது! பழிகாரி!

அவளுக்கு என்ன, யார் எப்படிப் போனுல்? குடும்பத்தின் கௌரவம் அழிந்தால் என்ன? அவளுக்குப் பின்னுல் நிற்கும் என் கதி என்னவானுல் என்ன? அவளுக்கு மனம் பிடித்த கணவன் அகப்பட்டு விட்டான்; காசு

பணத்திற்கோ, நகை நட்டுக்கோ குறைவில்லை! எல்லாம் சுயநலம்! தன் ஒருத்தியினுடைய சுகம்தானே பெரிது என்று நினைத்து இவ்வளவு மனக்கேடான காரியம் செய்து விட்டாள்! சீ...போய்ப் பார்த்தால்கூடத் தோஷம்!!

பாவம்! அவளைக் குற்றம் சொல்லி என்ன பயன்? அவளுக்குப் புத்தி அப்படிப்போய்விட்டது. இல்லாமலா சொல்கிறார்கள், பெண்களுக்கு அவ்வளவு அழகும் படிப்பும் கூடாது என்று! அந்தக் காலத்தில் என்மீதுதான் எத்தனை வாஞ்சையாக இருந்தாள்! கடிதத்தில் கூட அதே 'எச்சு'தான்! என்னவோ போய் விட்டுத்தான் வரலாமே! போய்ப் பார்த்துவிட்டு வந்தால் அவளுடைய பழியும் பாவமும் நம்மை வந்து ஒட்டிக்கொள்ளவா போகின்றன?

இந்தப் போராட்டத்தின் முடிவில்போய்ப் பார்த்து விட்டு வருவது என்று தீர்மானித்தாள். அவள் மகோன்னத ஸ்திதியில் இருப்பாள்!...தன் பஞ்சைப்பாட்டை அவளிடம் ஏன் தெரிவிக்க வேண்டும்? கொஞ்சத்திற்குக் கொஞ்சமாவது ஆடம்பரமாகத்தான் காண்பித்துக் கொள்ள வேண்டும்.........

இந்தப் பெண் உள்ளத்து எண்ணம் வந்ததும் பரபரப்பாக எழுந்தாள். பல வருஷங்களாகக் கவலை எடுத்துக் கொள்ளாமல் இருந்த அழகுச் சாதனங்களின் உதவி கொண்டு தன்னை அலங்கரித்துக் கொண்டாள். 'கஜேந்தர பவனை' நோக்கிப் புறப்பட்டாள்.

5

'கஜேந்தர பவன்' வாசலில் ரிக்ஷா நின்றதும் லக்ஷ்மி அப்படியே மலைத்து நின்று விட்டாள். பட்டினத்தில் உள்ள முதல்தரமான ஏதோ பெரிய 'போர்டிங் அண்ட் லாட்ஜிங்'கில் இறங்கி இருப்பாள் என்று நினைத்திருந்த தன் எண்ணத்திற்கு முற்றிலும் மாறாக ஒரு சிறு ஓட்டு வில்லைக் கட்டிடத்தைக் கண்டாள். 'கஜேந்தர பவன்' என்று எழுதப்பட்ட பலகையே அந்த ஹோட்டலின் பழமையையும் ஏழைமையையும் காட்டி நின்றது.

முதற் கோணல் முற்றும் கோணல் என்பதுபோல அந்த இடமே லக்ஷ்மியின் மனத்தில் ஒரு விகாரமான குறுகுறுப்பை விதைத்து விட்டது. மிகுந்த மனக் கசப்புடன் இரண்டு கட்டுகளைக் கடந்து மூன்றாங் கட்டிற்கு வந்தாள். வெள்ளை கண்டு எத்தனையோ வருஷங்களான சுவர்களும், எலியும் பெருச்சாளியும் போட்டி போட்டுக்கொண்டு தங்கள் இல்லங்களை அமைத்துக் கொண்டதன் விளைவாகக் கிலமான தளவரிசையுடனும் கூடிய அந்தக் கட்டிடம் சில சிறு அறைகளாகத் தடுக்கப் பட்டிருந்தது. அவற்றில் மூன்றாவது அறையில்தான் கோமளம் தங்கி இருப்பதாகத் தெரிந்துகொண்டாள்.

அறையின் கதவு தாழிடப்படாமல் ஒருக்களித்து மூடப்பட் டிருந்தது. நிலைவாசற்படியைப் பிடித்துக் கொண்டே, அக்கா என்று கூப்பிடுவதா, கோமளம் என்று பெயர் வைத்தே கூப்பிடுவதா என்று ஒருகணம் யோசித்துவிட்டு, "கோமளம், கோமளம்!" என்று குரல் கொடுத்தாள்.

"எச்சு, எச்சு, வாடி அம்மா, உன்னைப் பார்க்க வேண்டுமென்று கண்கள் பூத்துப் போய் விட்டதடீ! எங்கே என் கடிதம் உனக்குக் கிடைக்காமல் போய்விடுகிறதோ, நீ வராமல் இருந்து விடுவாயோ என்று தத்தளித்துக்கொண் டிருந்தேன். இதோ, அந்த நாற்காலியில் உட்காரடீ!" என்று ஓர் உடைந்த நாற்காலியைப் பரிவுடன் காட்டினாள்.

லக்ஷ்மி, கோமளத்தைப் பார்த்ததும் ஸ்தம்பித்து அப்படியே மரம் போலச் சமைந்து நின்றுவிட்டாள்! கோமளம் அழகிலும் உருவத்திலும் அன்றி ஸ்திதியிலும் கூட எவ்வளவோ மாறியிருந்தாள். கன்னங்கள் வறண்டு, கண்கள் குழி விழுந்து இருக்க, பாம்பு போலப் புரண்டு கொண்டிருக்கும் அந்தக் கரிய பின்னல் இருந்த அடையாளமே தெரியவில்லை! எல்லாவற்றையும்விட அவளுடைய ஆடைகள், சாயம் போய் ஒட்டுப் போட்ட புடைவையும், ரவிக்கையும்...லக்ஷ்மிக்குத் தன் கண்களையே நம்ப முடிய

வில்லை. கோமளம் இவ்வளவு தரித்திர நிலைமைக்கு வந்தது அவளுக்கு ஒரு பெரும் புதிராக இருந்தது

மருள மருள விழித்துக் கொண்டே, "உனக்கு என்ன உடம்பு, கோமளம்? ஏன் இப்படி இளைத்து விட்டாய்?" என்று கேட்டாள்.

"மூன்று மாசங்களுக்கு முன் டைய்பாய்டு ஜுரத்தில் விழுந்து விட்டேன். இப்பொழுது எவ்வளவோ தேவலை......அது இருக்கட்டும்; உன் அகத்துக்காரருக்கு என்ன வேலை? எப்படி இருக்கிறார்?"

லக்ஷ்மி கர்வம் தொனிக்க, புன்சிரிப்புடன், "போஸ்டா பீசில் வேலை; நூற்றிருபது ரூபாய் சம்பளம்; ஆனால் வரவுக்கும் செலவுக்கும் சரியாகத்தான் இருக்கு! அவர் வழியே எல்லாம் பெரும்போக்காகத்தான் இருக்கம்மா! என்னமோ குழந்தை குட்டிகளிடத்தில் பிரியமாக இருக்கிறார்!" என்று சொன்னாள்.

"எச்சு, உனக்கு எத்தனை குழந்தைகளடீ?"

"இரண்டு ஆண்; மூணு பொண்..."

"எல்லாம் யாரைப் பொருத்து இருக்கு?"

"பையன்கள் இரண்டு பேரும் என்னைப் 'போல' இருக்கிறார்கள்; பெண்கள் எல்லாம் 'அவாளை' அப்படியே உரிச்சு வைத்திருக்கு..."

"குழந்தைகளைக் கூட்டிக் கொண்டு வரக்கூடாதாடீ?..." அவளுடைய குரலில் தெய்விகமான ஓர் அன்பும் பாசமும் கலந்து தொனித்தன.

லக்ஷ்மிக்கு அவ்வளவு நெருங்கி உறவு கொண்டாடுவது பிடிக்கவில்லை. தன் குழந்தைகள் தங்களுடைய 'பெரியம்மா' இப்படிப்பட்டவள் என்று தெரிந்து கொள்ளவா வேண்டும்? மானக்கேடுதான்! இதை உள்ளூர நினைத்துக் கொண்டு, "எங்கே கூட்டிக் கொண்டு வருவது? அவா அவாளுக்குப் பள்ளிக்கூடம் இல்லையா? அதெல்லாம் சரி, நீ என்ன இப்படி இருக்கிறயே? உன்...புருஷன் எங்கே?

இவ்வளவு தரித்திரம் உனக்கு எப்படி வந்தது? ஏதோ வீடு வாசல், உற்ருர் பெற்ருேர் எல்லாரையும் உதறிவிட்டு ஓடிப் போய்க்கூட இந்தக் கூத்துதாளு?...'' இதுவரையிலும் உள்ளூர அழுத்திக் கொண்டிருந்த குறு குறுப்பு பீறிட்டுக் கொண்டு வந்து விட்டது.

''நாடகக்காரன் வாழ்வுதானே, எச்சு! என்னமோ வரும் போகும்; அவர் எங்கேயோ வெளியே போயிருக்கிருர்...''

''கோமளம், உனக்கு எத்தனை குழந்தைகள் என்று சொல்லவில்லையே?''

''எனக்கு ஒண்ணுதான் அம்மா, பிறந்தது; அதுவும் கொடுத்து வைக்கவில்லே.''

''கட்டி கிட்டி வந்து போயிடுத்தா, என்ன?''

குரலில் கரகரப்புத் தோன்ற, ''இல்லே; ஏதோ ஒரு வாரம் காய்ச்சல் அடித்தது; நல்ல வைத்தியம் பார்க்க வேண்டும் என்றுதான் ஆசை; ஆனல் அந்தச் சமயத்தில் கையில் பணம் இல்லே. குடியிருந்த வீட்டு வாடகை மூணு மாசம் பாக்கி; வீட்டுக்காரன் சாமான்களே யெல்லாம் ஜப்தி செய்து கொண்டு எங்களே நடு வாசலில் நிறுத்தி விட்டான். அந்தச் சமயத்தில்......'' என்று மேலே முடிக்காமல் கோமளம் நிறுத்திவிட்டாள். இதைச் சொல்லுவதற்குள் அவளுடைய கண்களிலிருந்து முத்து முத்தாகக் கண்ணீர் உருண்டு கன்னத்தில் ஓடிற்று.

''ஐயோ, பாவம்! உதவிக்கு எவருமே இல்லே போலிருக்கு!'' என்று லக்ஷ்மி பரிதாபப்பட்டாள்.

அந்தத் துக்கச் சூழ்நிலையில் கொஞ்ச நேரம் இருவரும் மௌனமாக இருந்தனர். லக்ஷ்மியின் மனசு இரண்டு வெவ்வேறு கோணங்களே ஒப்பிட்டுக் கொண்டிருந்தது. காலங் கடந்த பழைய கோமளத்தின் செல்வாக்கும் பெருமையும் கொண்ட நிலேமையையும், தற்சமயத்தில் அநாதரவும் ஏழைமையும் பங்கு போட்டுக் கொண்டு வருத்தும் நிலேமையையும் நினேத்துப் பெருமூச்சுவிட்டாள். மாதம்

தவருமல் புதுப்புதுப் புடைவைகளேயும் ஜாக்கட்டுகளேயும் வாங்கி அணிந்தவள்தான் இன்று சாயம் போன புடைவையை ஒட்டுப் போட்டு உடுத்தியிருந்ததையும் கண்டு அவள் மனம் பாகாக உருகிற்று.

"என்னமோ, எச்சு, உன்னேப் பார்த்தாகிவிட்டது. இன்று இரவு பம்பாய்க்குப் போகிரும். இனிமேல் உன்னே எங்கே பார்க்கப் போகிறேன்?"

"கோமளம், அப்படி யெல்லாம் விரக்தியாகப் பேசாதே. சரி, எனக்கு நேரமாகிவிட்டது. குழந்தைகள் பள்ளிக்கூடத்திலிருந்து வந்துவிடும். டிபன் 'பண்ணி'க் கொடுக்க வேண்டும்; நான் வரட்டுமா?" என்று கேட்டுக் கொண்டே எழுந்தாள் லக்ஷ்மி.

"சரி, போய்விட்டுவா; தினம் ஒரு தடவையாவது இந்தத் 'துப்புக்கெட்டவளே' நினேத்துக்கொள்" என்று சொல்லி வாசல்வரையிலும் கொண்டுபோய் விட்டு வந்தாள்.

6

லக்ஷ்மி வீடு திரும்பும்பொழுது மணி ஆறு அடித்து விட்டது. வழியில் அவளுடைய கவனத்தையும் திருஷ்டியையும் கவர்வதற்கு எத்தனேயோ ஜவுளிக் கடைகளும், பாத்திரக் கடைகளும் இருந்தன. ஆனல் அவற்றுள் ஒன்றிலாவது அவளுடைய கவனம் விழவில்லே. தன்முன் காண்பவை யாவும் அவளுக்கு உண்மை என்ற நினேவே இல்லே. கோமளம், கோமளத்தினுடைய தரித்திர வாழ்க்கை, அந்த வாழ்க்கைக்குப் பலியான குழந்தை, இவைகள் தாம் அவளுக்கு உண்மை என்று மனத்தில் ஆழமாகப் பதிந்திருந்தன. கோமளம் தன் காதலுக்காக எவ்வளவோ தியாகம் செய்திருக்கிருள்; எந்த ஸ்திரீயும் சகஜமாக ஆசைப்படும் கௌரவமான வாழ்க்கை, வீடு வாசல், குழந்தை குட்டிகள், நகை நட்டுகள் ஒன்றுமே அவளுக்குக் கிட்டவில்லே. அதை நினேக்கும்போது தன்னுடைய நிலேமை எத்தனேயோ மடங்கு மேல் என்ற நினேவே லக்ஷ்மிக்கு வந்தது.

அவளுடைய வீடு சிறியதுதான்; மழைக்கு ஒழுகக் கூடச் செய்யும்; ஆனால் அது அவளுக்கு நிம்மதியான வாழ்க்கையைக் கொடுத்தது. அது மட்டுமல்ல, ஒரு கௌரவமுங்கூட அதில் இருந்தது.

அவளுடைய கணவன், ஏதோ சில சமயங்களில் முன் கோபத்தால் சண்டை இடுகிருரே தவிர, அன்பிலும் ஆதர விலும் அவரிடம் என்ன குறைவு? இந்தத் தீபாவளிக்குக் கூட நூற்றிருபது ரூபாய் போட்டுப் பட்டுப் புடைவை வாங்கவில்லையா!

குழந்தைகள்—வியாதியாலும் அசௌகரியங்களினு லும்—கஷ்டத்தைக் கொடுத்தாலும் அவை 'அம்மா' என்று பிரியமாகத்தானே இருக்கின்றன? இவ்வளவு மட்டுமாவது கடவுள் தனக்கு அதிர்ஷ்டத்தை கொடுத் திருக்கிருரே என்று தன் மனத்திற்குள் எண்ணிக் கொண்டே வீட்டிற்கு வந்தாள்.

அன்று முழுவதும் அவளுடைய மனத்தில் கரை காணுத இன்ப அலைகள் மோதிக் கொண்டிருந்தன. தான் இதுகாறும் துவேஷ திருஷ்டியுடனும் ஆசாபங்கத்துட னும் பாவித்து வந்த தன் இல்லற வாழ்க்கை உண்மை யிலேயே இன்பமான வாழ்க்கைதான் என்ற நினைவு அன்று அவளை ஒரு புது மனுஷியாகவே செய்து விட்டது. அந்த இன்பப் பெருக்கில் அவளுடைய வயசுகூடக் குறைந்து ஒரு யௌவன ஒளி வீச ஆரம்பித்துவிட்டது.

அன்று இரவு நாராயண ஐயர் சாப்பிட்டுக்கொண் டிருக்கும்பொழுது லக்ஷ்மியே முந்திக்கொண்டு, "கோம ளத்தைப் பார்க்கப் போயிருந்தேன்" என்று ஆரம் பித்தாள்.

"உனக்கு இஷ்டமானல் சரி; நான் காலையில் ஏதோ அவசரத்தில் கோபித்துக் கொண்டேனே ஒழிய நீ போய் அவளைப் பார்த்துவிட்டு வருவதால் ஒன்றும் நஷ்டம் இல்லை. எப்படி இருக்கிருள்? என்ன சொன்னுள்?" என்று ஆர்வத்துடன் விசாரிக்க ஆரம்பித்தார் அவர்.

"ஹூம்...அவள் தலையெழுத்தை எவரால் மாற்ற முடியும்? ரொம்பக் கஷ்டஜீவனம்; உடம்பும் உள்ளமும்

ஒடுங்கிவிட்டன" என்று எல்லாக் கதையையும் சொன்னாள்.

"இவ்வளவுதானா? இதற்காகவா வீட்டைவிட்டு, வாசலைவிட்டு ஓடிப்போய் அவமானப்பட வேண்டும்? ஞான சூன்யம்!" என்று கூறிக் கொண்டிருக்கும் போதே வாசலில் யாரோ கதவைத்தட்டும் சத்தம் கேட்டது.

லக்ஷ்மி யார் என்று பார்க்கப் போனாள். ஒரு வேலைக்காரன், "கோமளம்மாள் இதைக் கொடுக்கச் சொன்னார்கள்" என்று சொல்லி ஒரு பெரிய பார்சலைக் கொடுத்து விட்டுப் போய்விட்டான்.

லக்ஷ்மிக்கு ஆச்சரியம் தாங்க முடியவில்லை. கூடத்தில் கொண்டு போய் அவிழ்த்துப் பார்த்தாள். சாண் அகலம் ஜரிகை போட்ட பட்டுப்புடைவையும் ஒரு ஜோடி மயில் கண் வேஷ்டியும் இருந்தன. அதனுடன் ஒரு கடிதமும் இருந்தது.

'எச்சு,

உனக்கு ஒரே ஆச்சரியமாக இருக்கும். ஆனாலும் மத்தியானம் உன் மனத்தை அவ்வளவு வருத்தப் படுத்தினதற்குக் காரணம் இல்லாமல் இல்லை. ஒருவேளை இந்த 'ஓடிப்போனவளின்' செல்வ வாழ்க்கையைக் கண்டு எங்கு உன் மனம் அசூயைப் படுகிறதோ என்றுதான் அந்த வேஷத்தில் நடந்து கொண்டேன். நான் செய்த இந்த விளையாட்டிற்கு என்னை மன்னித்து விடு!

உன் அன்புள்ள
கோமளம்'

லக்ஷ்மியும் நாராயண ஐயரும் கடிதத்தைப் படித்து விட்டு ஒருவரை ஒருவர் வெறிக்கப் பார்த்துக்கொண்டே நின்றார்கள்.

தம்மையும் அறியாமல் நாராயண ஐயர் வாய்க்குள்ளே முணுமுணுத்துக் கொண்டார்: "யார் எதை நம்ப முடியும்? எல்லாம் நாடக வேஷம்? எந்தப் புற்றில் எந்தப் பாம்பு இருக்கிறதோ?"

பெண் மனம்

(நாவல்)

'லக்ஷ்மி' எழுதியது

'ஆனந்த விகடன் பத்திரிகையில் சமீபத்தில் தொடர்ந்து வெளிவந்து தமிழ் மக்க்ளின் மனதைப் பெரிதும் கவர்ந்த அரிய நாவல்.

விரைவில் வெளிவரும்

•

பவானி பிரசுரம், ராயவரம்